www.tamilarangam.net

# நண்பன்

இதழ் 13    10. F.    17, மார்ச் 1988

எங்களது இதய தெய்வம்

எம்.ஜி.ஆரைக் கொலைசெய்தவன் யார்?

## தேர்தல் சூடு பிடிக்கிறது!

சினிமா உலக சில்மிஷங்கள்

மானங்கெட்ட சோ!

**தீவிர அரசியலில் பாக்யராஜ்...**

## போராளிகளில் கோளாறுகள்



## சிவாஜி தாத்தாவும் வைஜயந்தி பாட்டியும்!

**புரட்சித் தலைவர் அவர்களுக்கு,**


**-சோலை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேர்தல் சூடு

## SPECIAL REPORT




தமிழக அரசியலில் திரைப் படத் துறையினரின் ஆதிக்கம் எப்போதுமே சற்று அதிகம் தான். இன்றைய பரபரப்பான சூழ்நிலையில் தமிழ் சினிமா உலகமும் பிளவுபட்டு நிற்கிறது. அங்கு தான் எத்தனை விதமான சில்மிஷங்கள்.

ராமராஜன் சொந்தப்படத்தை ஜெயலலிதா துவக்கிவைக்க ஏற்பாடு ஆனதும், சென்னை உட்லண்ட்ஸ் ஹோட்டல் அறை ஒன்றில் ஒரு கலந்தாலோசனை நடைபெற்றது. அதில் முன்னாள் மந்திரி திருநாவுக்கரசு, சேலம் கண்ணன் எம்.பி. வக்கீல் கே.ஜி. ராஜேந்திரன் நடிகர் ராமராஜன், டைரக்டர் கங்கை அமரன், தயாரிப்பாளர் சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல வருடங்களுக்குப் பிறகு முதன் முறையாக திரைப்பட ஸ்டுடியோவுக்கு ஜெயலலிதா வருவதால், சினிமா உலகமே மூக்கின் மேல் விரல் வைக்கும் வண்ணம் ஜெயலலிதாவுக்கு வரவேற்பு தருவதென்று கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இந்தத் தகவல் கொஞ்சம் கொஞ்சமாக சினிமா வட்டாரத்தில் 'லீக்' ஆனது.

ஜெயலலிதா விழா ஏற்பாடான பிப்ரவரி 4ல் ஏற்கனவே ராமநாராயணனின் தென்பாண்டி சீமையிலே படத்திற்கு துவக்க விழா ஏவி.எம். ஸ்டுடியோவில் நடைபெற இருந்தது. தி.மு.க ஆதரவாளர்களான ராதாரவி, எஸ்.எஸ்.சந்திரன், விஜயகாந்த் ஆகியோர் தி.மு.க தலைவர் கருணாநிதியை வைத்து தடபுடலாக ஏற்பாடு செய்யத் தீர்மானித்தனர். படத்தின் இசை அமைப்பாளர் பாக்யராஜ். அவரையும் விழாவில் கூப்பிட திட்டமிடப் பட்டது.

விழா நாளான பிப்ரவரி 4ல் சென்னை கோடம்பாக்கம் மேம்பாலத்திலிருந்து ராமராஜன் படத் துவக்க விழா நடைபெறும் பிரசாத் ஸ்டுடியோ வரை ஜெயலலிதா ஆதரவாளர்கள் கட்டிய துணித் தோரணங்கள் தாள் பறத்தின. தி.மு.க. சைடில் ஒரு ஸ்பெஷல் வசதி. ஏற்கனவே அதே பகுதியில் இருந்த விஜய சேஷ் மஹாலில் தான் சில தினங்களுக்கு முன்பு தி.மு.க பொதுக்குழு நடைபெற்றது. எனவே அதற்காகக் கட்டப்பட்ட தோரணங்களும், பேனர்களும் இந்த விழாவோடு சேர்ந்து அமர்க்களப் படுத்தின.

ஜெயலலிதா அணியினர் இன்னொரு காரியமும் செய்தனர். கருணாநிதி விழா நடந்த வி.எம். ஸ்டுடியோ நுழைவாயிலுக்குப் பக்கத்தில் 80 அடி உயரத்துக்கு ஜெயலலிதா கட்-அவுட் ஒன்றை நிறுவினார்கள். சற்றுத் தள்ளி தென் இந்திய திரைப் பட வர்த்தக சபைத் தலைவர் ஜி.வெங்கடேஸ்வரனின் 80 அடி கட்-அவுட்! (ஜீ.வி. என்று அழைக்கப்படும் வெங்கடேஸ்வரன் ஜெயலலிதாவின் தீவிர ஆதரவாளர். சமீபத்தில் அவர் மத்திய அரசுக்கு ஒரே நாளில் கோடிக் கணக்கான ரூபாயை ஒரே செக்கில் வருமான வரியாகக் கட்டி பத்திரிகைகளில் பரபரப்பாக அடிபட்டவர். ராமராஜனின் படத்துக்கும் ஏரியாக்களை அவர் தான் வாங்கியிருக்கிறார்). விழா ஏற்பாடுகளுக்கான செலவில் பாதியை ராமராஜனும் மீதிப்பாதியை ஜீ.வி.யும் ஏற்றுக் கொண்டனர்.

விழா நாளன்று தி.மு.க. தலைவர் கருணாநிதி ஏவி.எம். ஸ்டுடியோவிற்குள் நுழைந்த போது, முதலில் அவர் கண்களில் பட்டது ஜெயலலிதா கட்-அவுட் தான்.

கருணாநிதி விழாவிற்கு எந்த விதமான போலீஸ் பாதுகாப்பும் கொடுக்கப்படவில்லை. கூட்டம் கட்டுக்கடங்காமல் இருந்தது. விழாவில் அ.தி.மு.க. (ஜானகி) ஆதரவாளர் பாக்யராஜ் கலந்து கொண்டார். எஸ்.எஸ்.சந்திரன் பேசும் போது யாரை ஒன்றாக இணைத்துப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டோமோ , அவர்கள் ஒன்றாகி விட்டார்கள். அதுவே எங்களுக்குச் சந்தோஷம் என்று சிலேடையாகக் குறிப்பிட்டார்.

ஜெயலலிதா விழாவிற்கு போலீஸ் பாதுகாப்பு இருந்தது. ஜெயலலிதா வந்தவுடன் 'புரட்சித் தலைவி வாழ்க' கோஷம் அமர்க்களமாக எழுந்தது. வாசலிலிருந்து மலர் தூவி எம்.ஜி.ஆரைப் போல வரவேற்று அழைத்துச் சென்றார்கள். ஜெயலலிதா முகத்தில் ஏகப்பட்ட மகிழ்ச்சி.


ராமராஜனின் மனைவி நடிகை நளினி, தயாரிப்பாளர் சுப்பையாவின் மனைவி லட்சுமி (நளினியின் தங்கை) ஆகியோர் ஜெயலலிதாவிற்கு பொன்னாடை போர்த்த... ஒரே தூள்! குத்து விளக்கேற்றி பூஜையைத் துவக்கி வைத்த ஜெயலலிதா எம்.ஜி.ஆரின் கருத்துக்களை எடுத்துக் கூறி கூட்டத்தினரை மகிழ்வித்தார். ஜெயலலிதா அருகில் ஜீ.வி. அடக்க ஒடுக்கமாக உட்கார்ந்திருந்தார். அவர் முகத்திலும் பூரிப்பு தென்பட்டது.

ஜெயலலிதாவின் தீவிர அரசியல் முன்னேற்றத்தில், தங்களையும் இணைத்துக் கொண்டு லாபம் காணத் துடிக்கிறார்கள் தமிழ் சினிமா உலகைச் சேர்ந்த பலர். ஜீ.வி.க்கு ஜெயலலிதா மந்திரி சபையில் செய்தித்துறை ஸ்தானத்தை (ஆர்.எம்.வீயிடம் முன்பு இருந்த இலாகா) அளிக்கப் போவதாக சினிமா வட்டாரங்களில் கிசு கிசு. இதில் பெரிதும் மன வருத்தமடைந்திருப்பவர் ஏவி.எம். சரவணன். தமிழ் சினிமா உலகில் எம்.ஜி.ஆர் உயிரோடு இருந்த வரை அவர் வகித்து வந்த முதன்மை ஸ்தானம் எங்கே ஜீ.விக்குப் போய் விடுமோ என்பது அவர் கவலை!

பாக்யராஜைப் பொறுத்த வரையில் அவர் தி.மு.க.வில் சேர்வதற்கு எப்போதோ ரெடி! ஆனால் அவருக்கு முன்னால் தி.மு.க.வில் சேர்த்துக் கொள்ளப்பட்ட , டி.ராஜேந்தருக்கு தி.மு.க.வில் இதுவரை பொதுக்குழு உறுப்பினர் கூடத் தரப்படவில்லை. எனவே பாக்யராஜுக்கு தி.மு.க.வில் உடனடியாக எதிர்காலம் இல்லை. பாக்யராஜின் 'தவணிக் கனவுகள்' பட விஷயமாக ஏற்கனவே வருமான வரிப் பிரச்னை அவருக்கு இருந்தது.

●● ஓய்வு பெற்றவர்கள் பத்திரிகைகளுக்கு எழுதிக் கொண்டிருப்பது போல் நெடுஞ்செழியன் அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கிறார்.

-வீரப்பன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிடிக்கிறது!

## சினிமா உலக சில்மிஷங்கள்



எம்.ஜி.ஆர் தலைமையிட்டினுல் அது அமுங்கி இருந்தது. இப்பொழுது அது மீண்டும் விசுவரூபம் எடுக்கும் என்று பாக்யராஜ் அஞ்சுகிருர். ஒரு வேளை காங்கிரஸ் பக்கம் சாய்ந்தால் தனக்கு நல்லது என்பது பாக்யராஜின் நினைப்பு.

* * *

தமிழகத்தில் அரசியல் கொந்தளிப்புகள் சினிமா உலகிலும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன. சினிமா உலகின் ஆதரவு யாருக்கு அதிகம் கிடைக்கும்? ஜெயலலிதாவுக்கா? கருணாநிதிக்கா? அதை இப்பொழுது கணிப்பது சிரமம். தேர்தல் நெருங்கி வரும் போது தான் தெரியும்!





விழாவில் குத்துவிளக்கு ஏற்றுகிறார் ஜெயலலிதா பக்கத்தில் ராமராஜன்



புது செய்தி: ஜி.வி. காங்கிரஸில் சேர்ந்து விட்டார். பார்க்க: குமுதம் செய்திகள்.
"தி.மு.க. விருப்பம்" பாக்யராஜ் மறுப்பு
ஸ்ரீதேவி அரசியலில் புகலாம்.
செந்தில் ஜெயலலிதா அணியில்.

ராமராஜன் துணிச்சலாய் களத்தில் குதித்து விட்டார். அரசியல் களத்தில்தான். எம்.ஜி.ஆர். ரசிகரான இவர் அவர் மறைவுக்குப் பின்னர்தான் அரசியலில் நுழைந்திருக்கிறார். எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசு ஜெயலலிதாதான் என்று ஆணித்தரமாக கூறும் இவர் அவர் கரத்தைப் பலப்படுத்துவதே இனி தன் வேலை என்கிறார்.

அரசியலில் ராமராஜன் குறிவைத்திருப்பது பாக்யராஜைத்தான். முதல்வர் ஜானகியின் அணியிலிருக்கும் பாக்யராஜ் அரசியல் பிரச்சாரத்திற்காக எங்கு போனாலும் அங்கெல்லாம் அவரை சந்திப்பேன் என்கிறார் ராமராஜன். மேலூர்காரர் கொஞ்சம் புத்திசாலித்தனமாகத் தான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிவெடுத்திருக்கிறார். மோதல் வலுவாகத்தான் இருக்கும்.

ராமராஜனின் அரசியல் பிரவேசம் பற்றி அவர் காதல் மனைவி நளினி என்ன சொல்கிறார். நான் என் கணவர் கட்சிதான். ஏனென்றால் நான் ஜெயலலிதாவின் ரசிகை எம்.ஜி.ஆரை தெய்வமாக நினைப்பவள் என்கிறார் நளினி.

இன்னொரு கிசுகிசு சமாச்சாரம். கே.ஏ.கேயை பழிவாங்க அவர் இல்லத் திருமணத்திற்குப் போகாமல் ராமராஜன் - நளினி கல்யாண வரவேற்பிற்குச் சென்று அள்ளி அள்ளி பரிசளித்த எம்.ஜி.ஆர். ஹனிமூனை முடித்து விட்டு சீக்கிரமா அரசியலுக்கு வந்து விடு என்று ராமராஜன் காதில் குசுகுசுத்தாராம்.

எம்.ஜி.ஆரின் அந்த ஆசையை அவர் மறைவுக்குப்பின் அவர் ஆசியோடு நிறைவேற்றப் புறப்பட்டு விட்டார் ராமராஜன்.

அன்புடன்: லலிதா

சமீபத்திய அரசியல் நிலவரம் அதிரடி நடவடிக்கைக்குள்ளான களம் போல தமிழக சினிமா உலகை அல்லோலப்படுத்திவிட்டது

'நான் அரசியலில் குதித்தால் பாயும் புலியாகத்தான் நுழைவேன்" என்று 87 ஏப்ரல் வாக்கில் சொன்ன ரஜனிகாந்த் முதல்வராக ஜானகி அம்மாள் கலந்து கொண்ட கடைசி பொது நிகழ்ச்சியான வள்ளுவர் கோட்டத்தில் நடந்த ஆர்.எம்.வீரப்பனின் "ஊர்க்காவலன்" 100வது நாள்விழாவில் ஆரவாரமாக அறிவித்தார். தனது ஆதரவு ஜானகி அணிக்கே என்று.

அதைச் சொல்லிவிட்டு அவர்பட்ட பாடு பெரும்பாடாகிவிட்டது. ஆர்.எம்.வியின் நுனி விரலைப் பிடித்துக் கொண்டு அவர் அரசியலுக்குள் நுழைய அவரது ரசிகர்கள் எதிர்ப்புக் கொடி உயர்த்திவிட்டனர். அவர் வீட்டை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தி அவர் படங்களையே கொளுத்தியதும், மன்றங்கள் மளமளவென கலைக்கப்பட்டதும் ஆடிப்போய் விட்டார் ரஜனிகாந்த். எந்தக்காலத்திலும் அரசியலில் ஈடுபடவே மாட்டேன் என்று வாலை சுருட்டிக் கொண்டுவிட்டார் ரஜனிகாந்த்.

இது வெளியே நடந்த விவகாரங்கள். வெளியே தெரியாது அவர் வீட்டுக்குள் ஒரு பத்திரிகையாளரிடம் ரஜினி காந்த் மனம் நெகிழ்ந்த விஷயமும் ஒன்றிருக்கிறது. இந்த ஆர்.எம்.வீ பேச்சைக் கேட்டு நான்பட்ட அவஸ்தை போதும் இனி ஆர்.எம்.வீ என்ன ராஜீவ் காந்தியே கூப்பிட்டாலும் சத்தியமாக அரசியல் மேடையில் ஏறமாட்டேன். சாமியாராகப் போய்விடுவதுதான் எனது இறுதி முடிவு என்னை ஆளை விடுங்கள் என்று கையெடுத்துக் கும்பிட்டிருக்கிறார் ரஜனி.

இவர்பாடு இப்படி என்றால் சிவாஜி பாடு இதற்கு பலபடி மேலே. காங்கிரசை விட்டு சிவாஜி விலகியதும் அவர் வீட்டு முன்பு அவர் ரசிகர்கள் எதிர்ப்பு கோஷம் போட அ.தி.மு.க ரசிகர்கள் அவர் சட்டையில் இரட்டை இலையைக் குத்தி மகிழ்ந்திருக்கிறார்கள்.

●● கடந்த முப்பது ஆண்டுகளாக நான் தெருத் தெருவாகச் சென்று காங்கிரசுக்கு ஓட்டுக் கேட்டேன். அதனால் என் அழகை இழந்தேன்.

—சிவாஜி கணேசன்

இமயமும் குப்பமும் இந்த பாடுபட காதல் இளவரசனுக்கும் குடல் கலங்கிப் போய்விட்டதாம். அரசியலில் குதிக்க தன்னை கொஞ்சம் கொஞ்சமாய் ஆயத்தப்படுத்திக் கொண்டே வந்த கமலஹாசன் வெண்ணை திரண்டு வரும் போது தாழி உடைந்துவிட்டது போல தவிக்கிறார். எந்தப் பக்கம் போவது என்று புரியவில்லையாம். நியூட்ரலில் போட்டு கொஞ்ச நாளைக்கு வண்டியை ஷெட்டில் தள்ளி விடுவது என்பது தான் இப்போதைக்கு இவர் முடிவாம்.

ஆல விருட்சங்கள் ஆட்டம் கண்டு கொண்டிருக்க ஜெயலலிதா அணியில் சேர்ந்துவிட்ட ராமராஜனுக்கு ரசிகர்களிடையே எக்கச்சக்க வரவேற்பாம். வருகின்ற கூட்டத்தையும், வரவேற்பையும் பார்த்து மிரண்டு போயிருக்கிறார் மனிதர்.

இது ஆனந்த மிரட்சி. ஆனால் ஆர்.எம்.வீக்கும் அவர் படத்தில் நடித்தவர்களுக்கும் ஐ.டி.க்காரர்கள் நினைப்பில் மிரட்சி. எந்த நேரத்தில் யார்வீடு ரைடாகுமோ என்று பலர் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.



●● ஜெயலலிதா மின்னல் மாதிரி. மின்னல் வெளிச்சத்தைப் பார்த்து, கையில் இருக்கும் விளக்கை எறிந்து விடாதீர்கள். அந்தக் கை விளக்குத்தான் எம்.ஜி.ஆரின் ஒளிவிளக்கான ஜானகி அம்மாள்.

—பாக்யராஜ

●● கேள்வி: ரயில்வே பட்ஜெட்டில் அதிக வரி விதிக்கப்பட்டுள்ளதே, அதை எதிர்த்து உங்கள் கட்சி போராட்டம் நடத்துமா?

சிவாஜி கணேசன்: இதுதான் என் வேலையா?

●● தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கு நல்ல சட்டை, நல்ல சாப்பாடு இல்லை 'இங்கு வந்த பிறகுதான் தெரிகிறதா?' என்று திட்டினாலும் திட்டுங்கள்.

—சிவாஜி கணேசன்

●● நாய்களும், பேய்களும், கருநாகங்களும் குடியிருக்கும் காங்கிரஸ் நமக்குத் தேவையில்லை.

—சிவாஜி கணேசன்

●● கேள்வி: காங்கிரசுடன் தேர்தல் கூட்டணி வைப்பதில் உங்களுக்கும், நெடுஞ்செழியனுக்கும் கருத்து வேறுபாடு இருப்பதாகக் கூறப்படுகிறதே?

ஜெயலலிதா பதில்: எங்களுக்குள் எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. நாவலர் கருத்துதான் என் கருத்து. என் கருத்துதான் நாவலர் கருத்து.

பெண்மைக்கு மரியாதை கொடுப்பவன். ஆனால் ஒரு பெண் தப்பு செய்து கொண்டே வருகிறார். தப்பாகப் பேசி வருகிறார். இது எல்லை மீறினால் நான் பேச வேண்டியது வரும்.

—பாக்யராஜ்

சினிமா நடிகர் ராமராஜன் அண்மையில் ஜெயலலிதா அணியில் சேர்ந்தார். அவரை நாம் சந்தித்தோம்.

**தராசு:** திடீரென்று நீங்கள் அரசியலுக்கு வரக் காரணம் என்ன?

**ராம:** நமக்கு சார்... சின்னப் புள்ளையிலிருந்தே தலைவரோட கொள்கைங்க மேல ஈடுபாடு. நாட்டுக்கு எந்த அளவு கருத்துக்களை எடுத்துச் சொல்றார்னு அவர் சினிமா பார்த்துத் தெரிஞ்சுகிட்டேன். ஏழை மக்களுக்கு தலைவா என்ன மாதிரியெல்லாம் உதவி செஞ்சாருங்கிறது என் மனசைத் தொட்ட விஷயம்! அதுனால அப்பவே அரசியல் ஈடுபாடு இருந்துச்சு. இப்ப அத வெளிப்படையாகக் காட்டியிருக்கிறேன்.

**தராசு:** எம்.ஜி.ஆரோடு உங்களுக்கு நெருங்கிய தொடர்பு உண்டா?

**ராம:** 1987 பிப்ரவரி 9-ல் நளினியை லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டேன். தலைவா அந்த நேரத்துல ஹோட்டல் நிகழ்ச்சியில் இருந்தாருங்க. அங்க சந்திக்க போனோம். முடியல. சென்னையில் ஒருநாள் தோட்டத்துக்குப் போனோம் தலைவா, ஜானகி அம்மா ரெண்டு பேரையும் நிக்க வைச்சு காலை விழுந்து ஆசி வாங்கினோம். எங்களுக்கு டிபன் கொடுத்து உபசரிச்சாரு. தலைவர் கூட ஒண்ணா உக்கார்ந்து சாப்பிட்ட நிகழ்ச்சி எனக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. ரிசப்ஷன் வைங்கன்னு அவரே ஒரு டேட் கொடுத்தாரு. அந்தத் தேதியில எக்ஸ் மினிஸ்டர் கே.ஏ.கே பொண்ணு கல்யாணம். அந்தக் கல்யாணத்துக்கும் போகாம, வரவேற்புக்கும் போகாம, எங்க ரிசப்ஷனுக்கு வந்துஒரு மணி நேரம் உட்கார்ந்திருந்து சிறப்பா நிகழ்ச்சிய முடிச்சுக் கொடுத்தாரு. என் வாழ்கையில் மறக்க முடியாத பெரிய சம்பவம் அது.

**தராசு:** சரி, அதற்கும் ஜெயலலிதா அணியில் நீங்கள் சேர்ந்ததற்கும் என்ன சம்பந்தம்? எம்.ஜி.ஆரோடு, ஜானகியும் தானே உங்களுக்கு ஆசி வழங்கி உள்ளார்கள்?

**ராம:** அப்படி இல்லீங்க! ஜானகி அம்மா ஆட்சியைக் கைப்பற்றணும்னுதான் பாடுபட்டாங்க. ஆனா புரட்சித்தலைவி ஜெயலலிதா தான் தலைவர் தொடங்கிய கட்சியைக் காப்பாத்தணும்னு துடிப்பா இருந்தாங்க. அந்த நேரத்தில முன்னாள் மந்திரி திருநாவுக்கரசு எனக்கு ஏற்கனவே பழக்கமானவங்க. அவர சந்திச்சேன். அவரு உடனே அம்மா கிட்ட கூட்டிட்டுப் போனாரு. ஜனவரி 17 ஆம் தேதி, நான் என் சகலர் புரொடியூசர் சுப்பையா, என் கொழுந்தியா லட்சுமி எல்லோரும் போய் அம்மாவைச் சந்திச்சு கட்சியில சேர்ந்தோம். அன்னைக்கு தலைவர் பொறந்த நாளு. அந்த நாள்ல நான் கட்சியில சேர்ந்தது எனக்கு ரொம்ப மகிழ்ச்சிங்க!

**தராசு:** குடும்பத்தில் கலந்து ஆலோசித்தீர்கள் என்று சொல்கிறீர்கள். உங்கள் சகலர், மனைவியின் தங்கை ஆகியோர் ஜெயலலிதா அணியில் சேர்ந்திருக்கும் போது, உங்கள் மனைவி நளினி மட்டும் ஏன் சேரவில்லை?

**ராம:** அது வந்துங்க...

(அப்பொழுது நளினியின் தம்பி மணி அங்கு வருகிறார்.)

**தராசு:** உங்கள் மனைவியின் தம்பி ஒரு தி.மு.க.காரர் ஆயிற்றே! அன்பழகன் தலைமையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் அ.தி.மு.க.விலிருந்து விலகி தி.மு.க.வில் சேர்ந்தாரே?

**ராம:** அது... வந்து... எல்லா கழகமும் ஒண்ணு தானேங்க! ஏன், மச்சான், நீ நம்ம கட்சிக்கு வந்துற மாட்டே?

(மணி சிரித்துக் கொள்கிறார்)

**தராசு:** ஜெயலலிதா அணி சார்பில் நீங்கள் தேர்தலில் போட்டியிடுவீர்களா?

**ராம:** தேர்தலில் போட்டியிடும் எண்ணமும், எம்.எல்.ஏ. வாகணும்கிற விருப்பமும் கெடையாதுங்க. சாதாரண தொண்டனாகப் பணியாற்ற விரும்புறேன். எங்க அணி சார்பா போட்டியிடறவங்களுக்குப் பிரச்சாரம் செய்ய தமிழ்நாடு பூராவும் போவேன்.

**தராசு:** பிரச்சாரத்தில் என்ன சொல்வீர்கள்? அண்ணாவைப் பற்றியா? ஜெயலலிதாவைப் பற்றியா? எதைச் சொல்லி ஓட்டுக் கேட்பீர்கள்?

**ராம:** மக்கள் நல்வாழ்வுக்குப் புரட்சித் தலைவர் செய்த திட்டங்களையும், தொண்டுகளையும் பற்றி சொல்லி ஓட்டுக் கேட்பேன்.

**தராசு:** இதையே தானே அவர்களும் (ஜானகி அணி) சொல்லி ஓட்டுக் கேட்பார்கள்?

**ராம:** புரட்சித் தலைவி தான் புரட்சித்தலைவர் வழி நடப்பவங்க. அவங்க கரத்தைத் தான் வலுப்படுத்தணும். இதை நான் மக்கள் கிட்ட எடுத்துச் சொல்வேன்.

**தராசு:** உங்கள் எதிர்கால திட்டங்கள் என்ன?

**ராம:** மார்ச் முதல் வாரத்துல தமிழ் நாடெங்கும் உள்ள ரசிகர் மன்ற மாநாட்டை சென்னையில நடத்துவேன். அதுக்கப்புறம் நானும் என் ரசிகர் மன்றத்துக்காரர்களும் என்ன செய்யப் போறோம்கிறத வெளக்கமா சொல்றேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முதன்முதலாக......

அன்பிற்குரிய அருமை வாசக நண்பர்களுக்கு, சகோதரிகளுக்கு!

முதன் முதலாக நண்பனின் பதிப்பாளன், பொறுப்பாளன் ஆகிய "லே வான்ஃபி டிட் சலாஹுத்தீன்" எழுதுகிறேன். வந்தனங்கள்.

ஒரு ஆண்டு முடிந்து இரண்டாம் ஆண்டில் நண்பனை நடாத்தி வருகிறோம். தமிழ் மொழி படிப்பது அதிகரிக்க வேண்டும். அதுவும் நல்ல விஷயங்களை, அறிவுக்கருத்துக்களை, தமிழர்கள் அதிகம் படிக்க வேண்டும் என்பது தான் எங்கள் விருப்பம். இந்த நோக்கப்படி நண்பன் முழுமையாக இயங்குகிறது என்று சொல்ல முடியாது. பல தரப்பட்ட சினிமா, கதை, வீணான செக்ஸ் பத்திரிகை என்பன அதிகமாக விற்பனையாகும் காலகட்டத்தில், நாங்கள் அறிவு, நல்ல விஷயங்கள் என்று மட்டும் வெளியிட்டால் விற்பனை ஆவது சிரமம். என்பதால்தான் அரசியல், இன்னபிற செய்திகளையும் வெளியிடுகிறோம். ஆனால் மேற்சொன்ன மேலான பத்திரிகைகளைவிட இச்செய்திகள் நிச்சயம் உயர்ந்தவைதான்.

இந்த நோக்கம் இருப்பதால் தான் "தாயகம்", "தமிழ் தென்றல்", "புதுவெள்ளம்", "கண்", "செவ்விபுரத" போன்ற பிரசுர தமிழ் சஞ்சிகைகள் வெளிவருவது குறித்து மகிழ்கிறோம். இன்று வீரகேசரி, சிந்தாமணி, தினகரன் ஆகிய பத்திரிகைகளின் ஐரோப்பிய பதிப்புகளும் விற்பனையாவது குறித்து அகமகிழ்வு கொள்கிறோம். **"தமிழ் கல்வி நிலைய"** விளம்பரம் எதுவாக இருந்தாலும், யார் நடாத்தினாலும் இலவசமாக வெளியிட தயாராக இருக்கிறோம்.

என்னுடைய நீண்ட நாள் மனக்குறை தமிழர்களுக்கென ஒரு உணவு விடுதி இல்லையே என்பது தான். பெரும்பாலான தமிழர் நடாத்தும் கடைகள் ஐரோப்பியர்களுக்கு மட்டுமே ஏற்றவையாக அதன் விலைகள் உள்ளன. ஆனால் **"தமிழினி"** உணவகம் தமிழர்களுக்கென விசேஷ வசதி செய்து தருவது குறித்து ஒவ்வொரு தமிழனும் மனமகிழ்வு கொள்ள வேண்டும். மற்றைய கடை உரிமையாளர்கள் இதை பின்பற்ற வேண்டும்.

மெனில் மொன்தானில் உள்ள "இண்டியன் ரெஸ்டாரண்ட்"-டினையும் குறிப்பிடலாம். விலை குறைவு, பல வாடிக்கையாளர்களைப் பெற்றுள்ளது. நண்பனுக்கு விளம்பரம் தருகிறார் என்பதனால் நான் இதை குறிப்பிடுகிறேன் என்றால் நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால் 'மொபர்ட் முத்துஆலிதே'யில் இருந்த "ரெஸ்டாரண்ட் டு டெ இண்ட்" எனது மருமகனின் கடை. பல முறை இலவசமாக சாப்பிட்ட விடுதி அதைக்குறிப்பிட வில்லை.

இருந்தாலும் எனது விருப்பம் இதுவல்ல. தமிழ் கலாச்சார விரைவு உணவு விடுதி (FAST FOOD) தான் அந்த எண்ணம். செயலாக உருப்பெறுவதற்கு முன்பு **"அகிலா"** கடை உரிமையாளர் **"நிஷா மளிகை"**யையும் திறந்து அதன் உள்ளே இட்லி, வடை, பரோட்டா, பிரியாணி போன்ற சிற்றுண்டி உணவு வகைகளை விற்கவும் ஆரம்பித்து முந்திக் கொண்டு விட்டார். பிரான்சில் தமிழரால் தமிழருக்கென ஆரம்பிக்கப்பட்ட முதல் விரைவு உணவு விடுதி இதுவே தான். விலை குறைவு, சுவை அதிகம். இவ்வுணவு வகைகளின் சுவை உண்மையில் நன்றாக உள்ளன. அதுவும் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் சாப்பிடும் விதத்தில் உள்ளன. இந்துக்களில் பெரும்பாலோர் சுட்ரீதியாக இறைச்சி சாப்பிட அனுமதி உடையவர்களே. முஸ்லிம்கள் இறைச்சி சாப்பிடுபவர்கள், அதாவது ஹலால் இஸ்லாமிய மார்க்க முறைப்படி அறுக்கும் அனுமதிக்கப்பட்ட விலங்கின் இறைச்சியை மட்டும் சாப்பிடுபவர்கள்.

கிறிஸ்தவர்களுக்கு பிரச்சனை இல்லை. இங்கு உணவு 'ஹலால்' இறைச்சி என்று உரிமையாளர் குறிப்பிட்டதை வைத்துத் தான்

## தீவிர அரசியலில் பாக்யராஜ்...

**கைத்தறி** மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்கவும், நூல் விலை ஏற்றத்தைக் குறைக்கக் கோரியும் மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தும் வகையில் நடிகர் பாக்யராஜ் பிப்ரவரி 22 அன்று தனது ரசிகர் மன்றத்தினருடன் ஈரோடு கலெக்டர் அலுவலகம் முன்பாக ஒருநாள் உண்ணாவிரதமிருந்தார். அவருடன் ரசிகர் மன்ற மகளிர் அணித் தலைவி சி.ஆர். சரஸ்வதி (எங்க சின்னராசா சின்னம்மா), எழுத்தாளர் கம் டைரக்டர் பாலகுமாரன், தயாரிப்பாளர்-கம்-டைரக்டர் கலைஞானம், மன்றப் பொதுச் செயலாளர் மண்ணுங்கட்டி சுப்பிரமணியன், மன்றத தலைவர் பழனிச்சாமி ஆகியோரும் உண்ணாவிரத மேடையில் உட்கார்ந்திருந்தனர். நடிகர் டெக்ஸ்டூல் தங்கவேல் மற்றும் ஸ்டண்டு நடிகர்கள் பாக்யராஜுக்குக் காவலாய் இருந்தனர்.

சுமார் 500 ரசிகர்கள் கலந்துகொண்ட இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில், பாக்யராஜை வேறு வேலையாகச் சந்திக்க வந்த ராசிபுரம் கே.பி. ராமலிங்கம், தண்டாரம்பட்டு வேலுவும் கட்சி சார்பாகச் (?) கலந்து கொண்டனர்.

பாக்யராஜின் 'அப்ரோச்' எம்.ஜி.ஆர். பாணியில் இருந்தது. சிரித்தபடி கை ஆட்டி, ஆரம்பத்தில் இரட்டை விரலைக் காட்டினார். பிறகு 'சின்னப் பிரச்னையை' நினைவில் கொண்டோ என்னவோ, கை ஆட்டலை மட்டும் தொடர்ந்தார்.

அருகில் வந்து பேச விரும்பிய பெண்களை அழைத்து 'சின்னம்மா' சரஸ்வதி எலுமிச்சம்பழம் தந்தனுப்பி வைத்தார். பாக்யராஜ் பல குழந்தைகளுக்குப் பிரதீப், யோகேஷ், சந்தோஷ்குமார் போன்ற 'தமிழ்' பெயர்களை வைத்து, தனக்களிக்கப்பட்ட மாலைகளைக் குழந்தைகளுக்குப் போட்டுச் சிரித்த முகத்துடன் அனுப்பி வைத்தார். முதிய பெண்மணி ஒருவருக்கு தனக்கு வந்த துண்டைப் பாக்யராஜ் கொடுக்க அவர் 'பேராண்டியை' வாழ்த்திச் சென்றார்.

பாக்யராஜ் அருகில் நின்று கொண்டிருந்த மண்ணுங்கட்டி சுப்பிரமணியத்தைச் சந்தித்து உண்ணாவிரதப் போராட்டம் பற்றிக் கேட்டோம். "போன தடவை ஷூட்டிங்கிற்கு இங்கு வந்தப்ப, நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல குடும்பங்கள் டைரக்டரைச் சந்திச்சு 'தங்களோட துயரக்

www.tamilarangam.net

பொதுவாக மூன்று மருத்தவர்களுக்கும் மூன்று உணவு விடுத்தென்று குறிப்பிட்டேன். அவருடைய இம்முயற்சியை ஒவ்வொரு தமிழனும் பாராட்டுவதால் மட்டும் போதாது. அங்கு சென்று ஒரு முறையேனும் சாப்பிடுவதன் மூலம் அந்த முயற்சிக்கு ஆதரவளிப்பது கடமை என்று கருதுகின்றேன். ஒன்று மட்டும் உறுதி. முதல் தரம் இறுதி முறையாகவும் இருக்க வாய்ப்பில்லை. இருக்க பெரும்பாலும் வாய்ப்பே இல்லை.

முக்கிய விஷயம்:- இது விளம்பரம் அல்ல. நிஷா கடை உரிமையாளர் கேட்டுக்கொள்ளவும் இல்லை. உள்ளத்தில் பட்டதை எழுதினேன் அவ்வளவு தான்.

நண்பனுக்கு தொடர்ந்து விளம்பரம் தந்த "ரோசனி" கடை உரிமையாளரிடம் "நண்பன்" வாசகர்களுக்கு ஏதாவது சலுகை என்று கேட்டேன். அளிக்கப்படும் என்று வாக்கு கொடுத்துள்ளார். அதை நேரில் கண்டு கொள்ளலாம், பிற பின்னர் (அநேகமாக அடுத்த ஆண்டில்)

ஆதரவை என்றும்
விரும்பும் அன்புள்ள.

**வருந்துகின்றோம்.**

சென்ற இதழில் வெளியான பாரிஸ் 11 அன்பர்களால் நடாத்தப்பட்ட எம்.ஜி.ஆர் அந்தியேட்டி எனப்படும் ஈமக்கிரியை குறித்த நிழற்படங்கள் தெளிவாக அச்சடிக்க முடியாத காரணத்தினால் வெளியிட முடியவில்லை என்பதை வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

- ஆசிரியர் - "நண்பன்".

# இரண்டாம் முறையாக உங்களுடன்

இவ்விதழின் "உங்களுடன்" பகுதியில் வாசகர் வட்டம் விரிவடையப் போகிறது என்று எழுதி அச்சாகி வரும் முன்பே வாசகர் வட்டம் விரிவடைந்து விட்டதை மகிழ்வுடன் அறியத் தருகின்றேன்.

- வாசகர் மூபாரக் பேர்ண் நகரிலிருந்து, குழுதச் செய்திகளை அனுப்பி உள்ளார்.
- நண்பர் சம்பத் தொடர்ந்து பத்திரிகைச் செய்தி, கருத்தறிவுக் கட்டுரைகளை அளிக்க ஒப்புக்கொண்டுள்ளார். இவ்விதழில் வெளியாகியுள்ள சிவாஜியின் அறிக்கை உட்பட பல செய்திகள் ஐம் பக்க படங்கள் அவர் அளித்தவை.
- வாசகர் லலிதா இந்தியாவில் இருந்து, எதிர்பாராத வண்ணம் அளித்த பல அளிப்புகளில் இருந்து தான் முதல், கடைசிப் பக்கப் படங்களும், பல முக்கிய கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.
- மாஸ்டர் சச்சிதானந்தன் விரைவில் அறிவியல் கட்டுரைகளை வழங்கி முன்வந்துள்ளார்.
- தோழர் டொமினிக் பாரிசில் கலாநிதிப் பட்டம் பெற்று ஒரு ஆஸ்திரேலிய இராம பாதிரியார் குறித்து ஆக்கம் தர ஒப்புக்கொண்டுள்ளார்.
- "அல் குர் ஆனும் அறிவியலும்" தொடர் கட்டுரையும் நண்பனை இருப்பில் சேர்ந்து விட்டது.
- அன்பர் இராஜகிரி கேசரி அவர்கள் அனுப்பிய செய்திகளும் வந்துள்ளன. விரைவில் வாசகர் சம்பத பக்கம் தோன்றலாம். சுருங்கக் கூறின் 17ம் திகதி வர வேண்டிய இவ்விதழ் விசேட இதழாக மலர்ந்து விட்டது. எனவே வழக்கமான "நண்பன்" மார்ச் இதழ் 17ம் தேதி கிடைக்கும்.

(சென்ற இதழுக்கானது)

அன்பன்
தமிழன்பன்.

கதையைச் சொன்னாங்க... அவுங்க நிலைமையைக் கேட்ட டைரக்டர் மனச் சங்கடப்பட்டு அவுங்களுக்கு உதவற வகையில் பிரதிபலனை எதிர்பார்க்காம ரசிகர் மன்றத்தின் மூலமா இந்த உண்ணாவிரதத்தில கலந்துக்கிட்டார்" என்றார் மண்ணுகட்டி.

அதிக அளவு விளம்பரமில்லை என்ற போதிலும், "உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார் பாக்யராஜ்," என்ற செய்தி ஊர் முழுக்கப் பரவி, கலெக்டர் ஆபீஸ் செல்லும் பஸ்களிலெல்லாம் ஒரே கூட்டம்! ஊரெங்கும் அதே பேச்சு.

'நெசவாளர் துயர் தீர்க்கவந்த புரட்சித் திலகமே வருக வருக' என்ற பேனர் ஒரு சில இடங்களில் கட்டப்பட்டிருந்தன. புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி வரிசையில் 'புரட்சித் திலகத்தைத் தமிழகத்திற்குப் பாக்யராஜ் ரசிகர் மன்றத்தினர் அளித்துள்ளதாக ஒரு மாவட்டத் தலைவர் தெரிவித்தார்.



உண்ணாவிரதப் பந்தலில் பாக்யராஜ்

பாக்யராஜின் உண்ணாவிரதத்தை வாழ்த்தி ஜானகி அணியினரும், சிவாஜி கட்சியினரும் மாலை போட்டு மகிழ்ந்தனர்.

முதலில் நெசவாளர்களுக்காகக் 'கோவணப் போராட்டம்' நடத்துவதாகத்தான் இருந்தது. ஆனால் பாக்யராஜ் அளவிற்கு விஷயம் போனபோது, தான் கோவணத்துடன் தெருவிற்கு வந்தால் 'காமெடியாகப்' போய்விடும் என்று மறுத்துவிட்டு, உண்ணாவிரதத்திற்கு ஐடியா கொடுத்தார், அவர். நல்லவேளை, ஈரோடு நகரம் தப்பித்தது.

பாக்யராஜின் தீவிர அரசியல் பிரவேசம் இந்த உண்ணாவிரதப் போராட்டம் மூலம் உறுதியாகி விட்டதாக ரசிகர்கள் ஆர்வத்துடன் கூறினார்கள்.

www.tamilarangam.net

# அட அப்படியா?

லெ வான் ஃபி

ஜனவரி 31ல் ஜானகி அம்மையார் ஆட்சி கலைக்கப்பட்டது அல்லவா? 1976ம் ஆண்டு எம்.ஜி.ஆர் ஆட்சியை இந்திரா காந்தி கலைத்ததும் ஜனவரி 31ல் தான். அது மட்டுமல்ல கலைஞர் ஆட்சி 1971ல் கலைக்கப்பட்டதும் ஜனவரி 31ல் தான்.

-விடுதலை-

பிரெஞ்சு வார இதழான "பாரிமேட்ச்" அதிபர் மித்திரான் மட்டும் கலந்து கொள்ள முடியாத ஒரு போட்டியை அறிவித்து உள்ளது. அதிபர் எந்த நாளில், எந்த நேரத்தில், எந்த விதமாக தனது முடிவை அறிவிப்பார் என்று சரியாக முன்கூட்டியே கூறுபவர்களுக்கு 7 வருட வருமானவரியை அவ்விதழே செலுத்திவிடும்.

-PARISMATCH-

ஆப்கானிஸ்தானிலிருந்து மே மாதத்தில் இருந்து 10 மாதத்திற்குள் ரஷ்யா (U.R.S.S) தனது படைகளை திரும்பவும் பெற்றுக் கொள்ளும். இந்த அறிவிப்பை வெளியிடும் 10 மணி நேரத்துக்கு முன் இந்தியாவிடம் இத்தகவல் கூறப்பட்டது.

-மணிச்சுடர்-

ராஜீவ் காந்திக்கு பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசுவது என்றால் பசித்தவன் பிரியாணி சாப்பிடுவது போல. சமீபத்தில் அவர் சுவீடனில் கலந்து கொண்ட ஆறு (6) நாட்டு கூட்டத்தின் போது எந்த நிருபர்களுக்கும் பேட்டி அளித்தார் இல்லை.

தொலைக்காட்சியும், புகழ்பெற்ற (உச்சரிப்பை தாங்களே தடவிக் கொள்ளவும்) தினசரியும் 20க்கும் மேற்பட்டு கேட்டுக் கொண்டும் ராஜீவின் உதவியாளர்கள் அனுமதித்தார்கள் இல்லை.

இது போன்று கேடயமாக அந்நாட்டு பிரதமர் "கால்சன்" அவர்களும் இருந்தார். போஃபார்ஸ் (BOFORS) நாட்டு பிரதமர் அல்லவா?

- இந்தியா டுடே -

உலகின் மிக அதிகமான தினசரிகளை உடைய நாடாக பிரான்ஸ் இருந்தும் சென்ற ஆண்டு அநேக தினசரிகள் நஷ்டம் அடைந்துள்ளன.

-லெ புவான்-

இங்கிலாந்தில் இயேசு கிறிஸ்து நாதரைக் குறித்த விவாதம் வெளிவந்துள்ளது. அவர் இறக்கும் போது "தான் கடவுளின் குமாரராக நம்பவில்லை" என்பதும் ஒரு கட்சி.

- நியூ பிளாக் ஃபிரியோர்ஸ் ஆங்கில மாத இதழ் -

ஈரான் அதிபர் ஆயத்துல்லா கொமெய்னி இஸ்லாமிய சட்டத்துக்கு மாறுபான கொள்கை அறிவிப்புகளை வெளியிட்டு உள்ளார். அதில், அரச ஹஜ் என்னும் புனித யாத்திரை செல்வதை தடுக்கவும் செய்யும். வசதி, சக்தி உடைய முஸ்லிம் வாழ்வில் ஒரு முறை ஹஜ் செல்வது கட்டாய கடமை.

- த கெஜமிஸ்ட் -

எந்த அடிப்படையில் கூறினார் என்று தெளிவான விளக்கம் இல்லை. ஏனெனில் இஸ்லாமிய கடமைகளில் விதிவிலக்கும் உண்டு.

"ஜெஹோவா தான் கடவுள் என்ற கிறிஸ்தவ மதப் பிரிவினர் உண்மையான கிறிஸ்தவர்களே அல்ல என கருதுகிறேன்"

- பாரீசில் கலாநிதி பட்டம் பெற்ற ஆஸ்திரேலிய மாணவர்.

அல்லாஹ்வை ஒரே இறைவனாக நம்பி, முஹம்மது நபி (சல்) அவர்களை இறுதித் தூதுவராக ஏற்காத காரணத்தினால் பாகிஸ்தான் அரசு "அஹ்மதிய" பிரிவினர்களை முஸ்லிம்கள் அல்ல என்று பல ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தது.

— மறுமலர்ச்சி -

அதிகமான ஒரு யூதர் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் காரில் செல்ல மாட்டார்.

- யூதர் ஜெவர் -

## இவ்வளவு தானா?

பண்ருட்டி இராமச்சந்திரனுக்கு போயஸ் கார்டனில் அப்படியொன்று பிரமாதமான வாழ்வு என்று சொல் விடமுடியாது போலும்! சென் வாரத்தில் ஒருநாள் பண்ருட்டியா ஜெயலலிதா வீட்டிற்குப் போ செய்தார். 'நான் இராமச்சந்திர பேசுகிறேன்' என்று அவர் போனி சொன்னதும், எதிர்முனையிலிருந் 'எந்த ராமச்சந்திரன்' என்று அதட் லாகக் குரல் வந்திருக்கிறது. சப் நாடியும் தளர்ந்து போன பண்ருட் யார் 'சட்'டென்று போனைக் கீ வைத்து விட்டார்.

☆ ☆ ☆

## எட்டிக்குப் போட்டி

மூப்பனார்ஜி தயவால் தமிழ வாசகர்களுக்கு இன்னொரு தினச பத்திரிக்கை கிடைக்கப் போகிறது சரக்கு என்னவோ பழசு தான். ஆன விஷயம் முறுக்காக இருக்கும் என் சொல்லிக் கொள்கிறார்கள். பழை நவமணியை மீண்டும் கொண்டுவ டெல்லியில் ஓ.கே வாங்கி விட்டா மூப்பனார். பத்திரிக்கையின் ஆசி யர் யார் தெரியுமா? ஜெயகாந்தன் இதற்கிடையில் நின்று போன தி.மு.க. ஆதரவு மாலை பத்திரிக்கை எதிரொலியை மீண்டும் கொண்டு வரப் போகிறார் தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் ஆற்காடு வீரா சாமி.

◇ ◇ ◇

## ரெய்டு சீஸன்

இது ரெய்டு சீஸன்! ஜானகியின் கிச்சன் கேபினட் உறுப்பினர் நடிகை விஜயகுமாரியின் வீட்டில் இரண்டு வாரங்களுக்கு முன்பு ரெய்டு நடந்ததில் வருமானவரி அதிகாரிகளுக்குக் கொழுத்த வேட்டை. தொடர்ந்து பல முக்கிய புள்ளிகள் வீட்டில் ரெய்டுகள் நடத்தப் பட்டுள்ளன. ஒருவர் பிரபல தொழி லதிபர் ராமசாமி உடையார். அவர் சம்பந்தப்பட்ட இடங்களில் நடத்திய வேட்டையில் எட்டு கோடி ரூபாய் வரைக்கும் டெல்லி அதிகாரிகள் மடக்கி உள்ளனர். எதற்கும் அசையாத உடையாரையே இந்த வேட்டை ஆடச் செய்து விட்டதாம்.

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதா னத்தில் உள்ள காங்கிரஸ் கட்டிடத்தின் அறைகளில் ஒன்றில்தான் அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்றம் பல்லாண்டு காலமாக இயங்கிவந்தது.

சிவாஜி ரசிகர் மன்றத்திற்கு வாடகை பாக்கி ரூ.30 ஆயிரம் வரை இருந்தது. சிவாஜி புதியகட்சி தொடங்கியவுடன் வாடகைப் பாக்கியை 'கெடுபிடி வசூல்' மூலம் காங்கிரஸ் தலைமை வசூலித்து விட்டது. சிவாஜி இந்த நடவடிக்கை யால் எரிச்சல் அடைந்து நீண்ட நாட்களாக இருந்த வருமானவரி பாக்கி யான பல லட்சங்களைகூட செலுத்தி கணக்குகளை நேர் செய்துவிட்டார் என்று தமிழக முன்னேற்ற முன்னணி யின் 'ரோஷக்கார பிரமுகர்' சொல்கிறார்!

www.tamilarangam.net

7

வடலூர் ராமலிங்க அடிகளார் உருவ வழிபாட்டை எதிர்த்தவர். அவர் இறந்த பின்னர் அவருக்கே சிலை செய்து வணங்குகிறார்கள். கடவுளைப்பற்றிக் கூறாத புத்தரும், கடவுள் இல்லை என்று வாதித்த மகா வீரருக்கும் இதே நிலை தான் இறந்த பின்னர்.

இராமலிங்க அடிகளின் கொள்கையில் "பாலும் புலால் உணவு என்பதும் ஒன்று."

சமணர்களின் கொள்கைப்படி பிருதுவிகாயம், அக்னிக்காயம், வனஸ்பதிகாயம், த்ரஸ காயம் என்று உயிர்கள் 6 வகை. இதில் ஈ, எறும்பு மட்டுமல்ல நீர், நிலம், நெருப்பு, வாயு போன்றவையும் உயிருடையவை என்று அடங்கும். எனவே தீவிர சமணர்கள் இரவில் விளக்கேற்றமாட்டார்கள். மண்பரம அணு ஆகியவை கொல்லப் - படக்கூடாது என்பதால். ஆனால் இவர்கள் விவசாயம் செய்வதுண்டு. விவசாயம் செய்வதில் பல உயிர்கள் அழிவது அறிந்த ஒன்று.

— பல நூல் திரட்டு —

இராமருக்கு தான் கடவுளின் அவதாரம் என்பது தெரியாது. ஆனால் அவர் கடவுளின் அவதாரம் தான் என்று தெரிந்த பாத்திரங்களும் இராமாயணத்தில் உண்டு. — ராஜாஜியின் இராமாயணம் —

**இலங்கைப் பிரச்னையில் தி.மு.க. வின் அரசியல் நிலைக்கும், கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைக்கும் உள்ள கருத்து வேறுபாடுகள் காரணமாக கம்யூனிஸ்ட் இயக்கங்கள், தி.மு. கழகத்துடன் உள்ள தேர்தல் கூட்டணி உறவை துண்டித்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாக லாம் என தகவல் ஒன்று கூறுகிறது.**

**கம்யூனிஸ்ட் இயக்கங்களின் பொலிட் பீரோ தமிழ்நாட்டில் பொதுத் தேர்தல் நேரத்தில் இலங்கைப் பிரச்னையில் தெளிவான அரசியல் நிலையை தங்கள் இயக்கங்கள் தெரிவிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியதாம். கம்யூ னிஸ்ட் நிலை குறித்து தி.மு.க. தலைவர் கலைஞரிடம் தமிழ்மாநில கம்யூனிஸ்ட் குழுக்கள் கூறிவிட்டதாகக் கூட அந்தத் தகவல் மேலும் குறிப்பிடுகி றது.**

---

**தி.மு.க. ஜனமோர்ச்சா (வி.பி. சிங்) இயக்கங்கள் இடையே தேர்தல் கூட் டணி உடன்பாடு ஏற்பட்டால் முஸ்லீம் லீக் கட்சி ஜெயலலிதா காங்கிரஸ் கூட்ட ணிக்கு வந்துவிட் பிரகாசமான வாய்ப் புக்கள் உண்டு. இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சி (எம். கல்யாணசுந்தரம்) ஜெயல லிதா அணியுடன் இணைந்து பொதுத் தேர்தலை சந்திக்கலாம் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.**

---

# பிரான்சின் புதிய வரிமுறை

-பிரேம்-

இதுவரை பல ஆண்டுகளாக பிரான்சில் 3 வரி முறைகள் தான் வழக்கில் இருந்து வந்தன. அதாவது

1. உணவு மற்றும் கலாச்சார வகைகளுக்கு 7%.
2. உடை போன்ற சுத்தர வசதி பொருட்களுக்கு 18,6%.
3. தொலைக்காட்சி, கேமரா, கார் போன்ற சாதனங்கள், ஆடம்பர வகைகளுக்கு 33.3%.

பிரெஞ்சு நிதி மந்திரி எடோர்ட் பலடூர் [Edouard Balladur] உடைய புதிய அறிவிப்பால் 4 வது புது முறையும் அமுலுக்கு வர இருக்கிறது.

கார் மீதான விற்பனை வரியில் 4% குறைக்கப்படும் என்று நிதி மந்திரி அறிவித்தார்.

ஐரோப்பாவில் உள்ள நாடுகளிலேயே கார் மீதான வரிகளில் பிரான்சும், ஸ்பெயினும் 33.3% வைத்து இருந்தன. மற்ற நாடுகள் எல்லாம் இதை விடக் குறைவான வரியையே வைத்து இருந்தன.

அதன் விபரம் :-

| | |
|---|---|
| லக்சம்பர்க் | 12% |
| ஜெர்மனி | 14% |
| இங்கிலாந்து | 15% |
| போர்த்துகல் | 17% |
| இத்தாலி | 18% |
| நெதர்லாந்து | 19% |
| அயர்லாந்து, பெல்ஜியம் | 25% |

சாதாரணமாக பிஸ்கல் [Fiscal year] ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி ஆரம்பமானாலும் இப்புதிய வரி செப்டம்பர் 17-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

இதற்கு முதல் வாரத்தில் தான் பிரதமர் சிராக் புதிய வரி குறைப்பை அறிவித்து ஆச்சரியப் படுத்தினார்.

ரிகார்டு, பேஜ் மற்றும் நாம்பாக்ட் டாங்க்குகளின் வரியை 33,3 லிருந்து 18,6 ஆக குறைத்தார்.

கார் மீதான வரிக்குறைப்பினை பொதுவாக பொருளாதார நிபுணர்கள் சிறப்பாக பண முதலைகள் வரவேற்றுள்ளனர்.

இதனால் பிரான்சின் கார் விற்பனை பெருகும்.

5 ஆண்டுகளில் 3 ஆயிரம் கோடி பிராங் நஷ்டத்தில் சென்று தற்போது முன்னேறி வரும் ரெனோ [Renault] காருக்கும் இது நல்லது.

இந்த வரி குறைப்பினால் மதிப்பு ஏறக்குறைய 600 கோடி பிராங் ஆகும் என்றாலும் இதன் மேலும் 20 லட்சம் கார் விற்பனை ஆகும் என கணிக்கப்படுகிறது.

www.tamilarangam.net

# பிரதமர் சிராக்கும், துக்ளக்கின் சோவும்

கோடைகால ஒலிம்பிக் போட்டிக்கு அடுத்து சிறப்பு பெறுவது உலக (கால்பந்து) கோப்பை. (the World Soccer cup)

டிஜோன் (DIJON)ல நடைபெற்ற அரசியல் கூட்டத்தில் "பிரான்ஸில் 1998ல் இதன் ஆட்டம் நடைபெறும். அதற்காக அச்சங்கத் தலைவருடன் ஏற்கனவே தொடர்பு கொண்டு விட்டேன்." என்று கூறினார் பிரான்சு பிரதமர் சிராக்.

அதை மறுத்து அச்சங்க உறுப்பினர் "ஒருக்காலும் சங்கத் தலைவர் ஒப்புக் கொண்டிருக்க மாட்டார். 1990-ல் இதாலியில் நடைபெறும் முன்பு இதைப் பற்றி முடிவு செய்வது சாத்தியமில்லை. அதுவும் 1994-ம் ஆண்டைப் பற்றிய முடிவு எடுப்பதற்கு முன்பு 1998க்கான இடத்தேர்விற்கு வாய்ப்பே இல்லை." என்று கூறிய அவர்,

"முடிவை 24 செயற்குழு உறுப்பினர்கள் முடிவு செய்வர்." (தலைவர் அல்ல) என்றார்.

இதனால் அசடு வழிந்த சிராக், "நான் மேற்கொண்ட தொடர்புகளின் மூலம் பிரான்சிற்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை உறுதியாக இருந்தது." என்று பிப்.19 அன்று அறிக்கை வெளியிட்டார்.

1998 ஆண்டிற்கான இந்தப் போட்டியை தம் நாடுகளில் நடத்தும் விருப்பத்தை ஜெர்மனி, யூகோ, சுவிஸ் நாடுகள் ஏற்கனவே வெளியிட்டுள்ளன.

தொடர்ந்து இருமுறை ஒரே கண்டத்தில் நடத்த சங்கவிதி அனுமதி அளிக்கவில்லை. 1990-ல் இதாலியில் முடிந்த பிறகுதான் விண்ணப்பங்களே ஏற்க ஆரம்பிக்கப்படும்.

பாவம் பிரதமர். அடுத்த தேர்தலில் எப்படியாவது வெற்றிபெற விரும்புகிறார். இருந்தாலும் வழிந்த அசடு வழவழ என்று போவதற்குள் துடைத்துக் கொண்டதை பாராட்ட வேண்டும்.

இந்த நிலையில் ஜெயலலிதா மட்டும் தப்பித்தவறி ஏதேனும் உளறி விட்டால் அம்பலப்படுத்தும் சனிச்"சோ"வின் துக்ளக்கில் 'சத்யா' எழுத ஆரம்பிப்பார்.

"நான் 1998 கால்பந்து போட்டியை தமிழகத்தில், அதுவும் புரட்சித்தலைவர் வழியின்படி நானும் மதுரையிலேயே நடத்த அனுமதி கேட்டதை அறிவித்தேன். ஜானகிக்கு தெரியுமா. என் கற்பனை பண்ணை

நான் முடியுமா. இவர் என்னமோ நா[ன்] சென்னையில் கால்பந்து போட்டி என்ன ஒலிம்பிக் போட்டியே நடக்கப் போகுதே அறிவித்து விட்டார். அருமைத் தாய்க்[குலமே,] ர. ரத்தங்களே!

சென்னையில் ஒலிம்பிக் நடக்க[ுமா?] நான் முடியுமா? கூவம் ஆற்றங்கரையை சுத்தப்படுத்தி படகு போட்டி அதில் வைப்[போம்] என்று அண்டப் புளுகை அவிழ்த்து விடு[கிறார்]கள். புரட்சித் தலைவரால் முடியாத ஒன்[றை] இவர்கள் செய்வதாக சொல்கிறார்களே. எவ்வளவு துரோகம். இதை தமிழகம் உணர்ந்தே தீரும்.

புரட்சித் தலைவர் இறக்கும் முன்[பு] கனவாக என்னை சந்திக்க கோட்டையிலே ஏற்பாடு செய்தார். "அம்மு. உனது திறமை நம் தமிழக மக்களுக்கு தெரிய வேண்[டும்] என்பதற்காகத்தான் நான் ஒலிம்பிக் நடத்தவில்லை. எனவே, நீ மதுரையில் நடத்து. அது தான் நமது வெற்றிக் களம். சென்னைவாசிகள் கருணாநிதியி[ன்] கைக்கூலிகள். கூவத்தை நாம் எவ்வளவு தான் சுத்தம் செய்தாலும், ஒரே நாளில் இரவோடு இரவாக காலைக் கடன்களை அங்கே முடித்து திரும்பி விடுவா[ர்கள்]. ஒலிம்பிக் வீரர்கள் வந்த அன்றே திரும்பி விடுவார்கள். திராவிட பாரம்பரியம் என்று வேண்டாம் ஒலிம்பிக் போட்டி. கால்பந்து போட்டியே [illegible]. அது தான் எளிது. அ[தை] மதுரையில் வைத்தால் கருணாநிதியின் அடியாட்கள் மதுரை மக்களை மீறி ஒன்று செய்ய முடியாது. போலீஸ் உதவியுடன், இராணுவ உதவிக்கும் ஏற்பாடு செய்து விட்டேன். ராஜீவ் காந்தியோடு உறவு கொள். தேவைப்படும் சமயத்திற்கு.

ர. ரத்தங்களே! உ. பிறப்புக்களே! தாய்க்குல[மே!] கடைசியாக என்னிடம் இதை நிறைவேற்ற சத்தியம் செய்யச் சொன்னார். நான் மறுத்துவிட்டேன். இல்லை. நீங்கள் என் தலைவர். நாயகர். என் வாழ்வு நீங்கள். உயிர் நீங்கள். நீங்கள் போன பிறகு நான் வாழ்வதா உடன் உடன்கட்டை ஏறிவிடுவேன் என்று அழுது சொன்னேன்.

உடனே புரட்சித் தலைவர் என் தலையில் கை வைத்து, "நான் இறந்த பின்பு நீ உடன்கட்டை ஏறிவிடுவாய்.

www.tamilarangam.net



உன் கருப்பு (கறுப்பு) நெறி என்ன? நான் இறந்த பின் என்னை புதைக்கவே ஏற்பாடு செய்கிறேன். கடைசியாக உன்னிடம் ஒரு வாக்குறுதி என்று கேட்டார். அவருடைய கடைசி ஆசையை நிறைவேற்ற துடித்த நான் அவசரப்பட்டு அவர் கை மீது சத்தியம் செய்தேன். நீ மதுரையில் உலக கால் பந்து போட்டி நடத்து. என்று சொன்னார்.

அவர் இறந்த அன்று உடன்கட்டை தான் ஏற முடியவில்லை. புதைக்கும் போது ஹெலிகாப்டரிலிருந்து குதித்து நேராக ஒன்றாகவே ஐக்கியமாகி விட எண்ணினேன். ஹெலிகாப்டர் இராணுவ ஓட்டுநரும் ஒப்புக்கொண்டு என் கையைப் பிடித்து தூக்கி மேலே ஏற உதவினார். குதிக்கும் போது அவர் தடுத்து விட்டார். அப்போது தான் ஞாபகம் வந்தது புரட்சித் தலைவருக்கு நான் அளித்த வாக்குறுதி. அதை நிறைவேற்ற வில்லை என்றால் திராவிட நாகரிகம் என்னாவது. எனவே, எப்படியும் மதுரையில் கால் பந்தாட்ட போட்டி நடத்தியே தீரவேண்டும்.

அது நிறைவேறும் வரை நான் சாகமாட்டேன். எனவே, நான் சாக விரும்பும் முன்பு நடத்தியே தீருவேன்.

என்னால் முடியுமா என்று வீரப்பன் விருப்பு பேசுகிறார் நான்

பிரான்ஸ் நாட்டு புகழ் பெற்ற 'சதலே ஹால்' மெட்ரோவில் பணிபுரியும் கோபாலன் உதவி நம் திட்டத்திற்கு உண்டு என்று அறிவித்தேன்.

அதை அரைவேக்காட்டு காளிமுத்து பேச்சை கேட்டு ஜானகி எனக்கு உச்சரிப்பு கூட சரியாக சொல்லத் தெரியவில்லை ச்சேட் லேட் லேஸ் ஹால்ஸ் " CHATELET-LES-HALLES. என்று கிண்டல் பண்ணுகிறார்.

அவருக்கு பிரெஞ்சு மொழி தெரியுமா? அதன் உச்சரிப்புதான் புரியுமா? எத்தனை ஜென்மங்கள் உள்ளன என்று எண்ணத்தான் மா. மக்கள் தான் இவர்களுக்கு பதிலளிக்க வேண்டும். எங்களுக்கே உங்கள் ஓட்டு. மற்றவருக்கு வையுங்கள் வேட்டு. இதுதான் திராவிட கலாச்சாரம் முகால், லெனின், பெரியார், அண்ணா வழியில் வந்த புரட்சித் தலைவர் வழி நடப்போம். மற்றவர் விழ விதாங்க விழா எடுப்போம்."

இப்படி எல்லாம் சுற்றிவளை குப்பைகள் அடுக்கு போடும் சுனிச்சோ சொல்கிறார். எங்கள் பத்திரிகை உணர்வு பூர்வமானது அல்ல. அறிவு பூர்வமானது என்று. இது அறிவாளியின் நடைமுறையா? இல்லை அறிவியலின் செயல் முறையா என்பதை மொட்டைத்தலையர் அபிமானிகள் சிந்தித்துக்கொள்ளுங்கள்! இரு பாராவில் விளங்க வைக்கும் விடயத்திற்கு ஒரு பக்கம் தேவைதானா. இதுதான் சோவின். இல்லை சுனிச்சோவின் அறிவுபூர்வமான அணுகு முறையோ. வாழ்க வாசகர்களின் அறியாமை வெல்க ஆக்கள் படிப்போரின் புரியாமை. "சுனிச்சோவைப் போன்று கிண்டல், குத்தல் பாணி யாருக்கு வரும் என்று அவரை வெறுப்பவரும் சொல்வதுண்டு. முடியும் என்பதை விட அப்பாணி தேவையா என்பதே எமது கேள்வி. - தமிழன்பன்

**ஒரு** நபரை நம்பி சிலகோடிகளைப் பாதுகாத்துத் தரும் படி கேட்டுக் கொண்டார் மறைந்த தலைவர் ஒருவர். அவர் துணைவியார் இப்போது பணத்தை ஒப்படைக்கும் படி கேட்டதற்கு, "இல்லையே... அப்பவே தலைவர் ஒருவரை அனுப்பி திருப்பி வாங்கிக் கொண்டு விட்டாரே", என்று அந்த நபர் கைவிரித்துவிட்டாராம்.பாவம் அம்மையார்! பொன்னார் மேனியனே...!

# அச்ச மொழிகள்

## - சம்பத்

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் ஒரு முக்கிய பிரிவை நீக்க ஜே. ஆர் முயற்சி. அது " இலங்கை துறைமுகங்களை எந்த வெளிநாட்டு இராணுவத்திற்கும் தரக்கூடாது" என்பது. - டைம் -

"முப்படைகளும் காட்டில் இறங்கி முதன் முறையாக போரிடுவது புலிகளை எதிர்த்து தான்." அதிகாரிகள் - இந்தியா டுடே-

மலேய திராவிடர் கழக 40-ம் ஆண்டு விழாவில் அமைச்சர் 'டத்தோ சாமிவேலுக்கு கழக சார்பில் மேதகு டான்ஸ்ரீ எஸ். ஓ. கே. உபைதுல்லா "எழுச்சித் தலைவர்" பட்டம் வழங்கினார். வீரமணியும் பங்கு பெற்றார். அவ்விழா பிப். 12-ல் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றது. - விடுதலை-

தஞ்சை ஜெயலலிதா கூட்டத்திலிருந்து வெளியேற முயன்றவர்களை கட்டாயப்படுத்தி அவ்வணியினர் தடுத்தனர் - இந்தியன் எக்ஸ்பிரஸ் -

அரபியர் என்ற ஒரே காரணத்திற்காக 'அம்ராபீக்' என்ற ஆசிரியரை பிரெஞ்சுக்காரர்கள் அடித்தனர். - லிபரேஷன்-

(83-85 ல் மட்டும் 50க்கும் மேற்பட்ட அரபியர் கொல்லப்பட்டனர்)

www.tamilarangam.net


# NANBANEWS INTERNATIONAL

## ரஷ்யா

சிடர், மஞ்சள் காமாலை, இன்புளுயன்சா போன்ற நோய்களை கண்டுபிடிக்கும் நம்பக மான கருவி ஒன்று கண்டுபிடிப்பு.

ரஷ்யாவிடமிருந்து பெறப்பட்ட அணு சக்தி நீர்மூழ்கிக்கப்பலை ராஜீவ் கடற்படையிடம் ஒப்படைத்தார்.

உலகிலேயே மிகப்பெரிய விமான போக்கு வரத்து நிறுவனம் - ரஷ்யாவின் "ஏரோ பிளாட்" இது ஊழியர் பயிற்சி விபரங்களை இங்கிலாந்திடம் கேட்டுள்ளது. விமானப்பெண்கள் எப்படி பல்லைக் காட்டுவது என்பதும் ஒன்று.

## அமெரிக்கா

சிடா நோய் வேகமாக பரவுகிறது. 1991-ல் 'சுமார் 3 லட்சம் நோயாளி' என மதிப்பிடப்பட்டுள்ளது.

அப்போது 2,200 கோடி டாலர் செலவு ஒதுக்க நேரிடும். ஒருவருக்கான செலவு அதிகமல்ல. Only 80,000 டாலர்.

## பிரிட்டன்

"ஒல்டபெய்லி" நகர்வாசி. பெயர் எர்ஸ்கின் வயது 24. செய்தி: கைது. குற்றம்: 3 பெண்களை கற்பழித்து, கழுத்தை நெரித்து பேச்சு விட தடை செய்தது. பெண்களின் வயது அதிகமல்ல. 67 லிலிருந்து 84 வரை மட்டுமே. + 4 ஆண்க... கொன்றது. சொன்ன காரணம்: விரும்பி செய்தேன்.

அமெரிக்க-ரஷ்ய அணு ஆயுத ஒப்பந்தம். அதற்காக தனது ஆயுத... அழிக்காது - காஸ்ட்ரோ அறிவிப்பு.

## சுவீடன்

1987-ம் ஆண்டின் முதல் 9 மா...களில் மட்டும் ~~ஏற்றுமதி செய்த~~ ...ஐ விட 22% ஆயுத ஏற்றுமதி அதிகரி... இந்தியாவிற்கு மட்டுமே 1560 கோடி பெ... போபர்ஸ் பீரங்கி. ஏன் அதிகரிக்காது.

1986-ல் 25,70 கோடி டாலர்
1987-ல் 38.3 " "

## நெதர்லாந்து

ஆம்ஸ்டர்டாமில் 1986-ல் 6 மாத...களில் மட்டும் 347 கனைவன் தாக்குதல்...

ஞாயிறுதோறும் "காம சுதந்திர... ஒலி பரப்ப பி.பி.சி. முடிவு. பாதிரிமார் எதிர்ப்பு. பி.பி.சி. ஏற்க மறுப்பு. "குழந்தைகளை மாதாகோவிலுக்கு அழைத்து (- சண்டே ஸ்கூல்) வந்து விடுங்கள்" பாதிரிமார் மறு அறிவி...

# NANBANEWS INDIEN - சம்பத்-

5. தமிழக காங்கிரஸ் மேலும் உடையலாம். கட்சியின் 4 "முன்னாள்"களான சோ.பூவராகன், எம். ஆறுமுகசாமி, தெ. ஜெகவீரபாண்டியன், அ. முத்தையா ஆகியோர் கூறுவது உறுதியாகியிருக்கிறது. இவர்கள், "12 ஆண்டாக கட்சி கட்ட வில்லை." உட்பட பல குற்றச்சாட்டுகளை கூறினர். இவர்கள் அ.தி.மு.க. வை ஆதரிக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் அதிரடியில் 10 இ. வீரர்கள் பலி.

6. அ.தி.மு.க. ஜானகி அணியில் இலக்கியத் தென்றல் அடியார் மீண்டும் சேர்ந்தார்.

'குராணு' விற்கு திருச்சி பாலகிருஷ்ணன் பல்கலைக்கழக மேலாண்மை இயக்குநர் பதவி அளிக்கப்பட்டது.

8. மறைந்த "டெலோ" சபாரத்தினத்தின் அண்ணன் உ 6 பேர் சென்னையில் கைது. 19-1-88 ல் யாழ். பரமேஸ்வரன் கொலை தொடர்பு.

செட்டியூலு இன விடுதலை இயக்கத் தலைவர் உ 19 பேர் கைது. ராமர், கிருஷ்ண படங்கள், இதிகாசங்களை கொளுத்தியதால்.

9. ஐ.தே. கட்சி எம்.பி. மெர்வின் சுடப்பட்டார். கார் டிரைவர் உ சிறுவன், 4 ...

ராணுவ வாபஸ் கோரி அனைத்துக் கல்லூரி மாணவர் சென்னையில் கையெழுத் இயக்கம் 19-ல் துவங்க முடிவு செய்தன...

10. சகுனிச் 'சோ' "துக்ளக் டைம்ஸ்" தமிழ் தினசரி துவங்க இருக்கிறார்.

அம்புத்தூர் காங்கிரஸ்காரர் அரங்க... ஜெயலலிதா அணியில் சேர்ந்தார். அதோ... 10 கிரவுண்ட் வீட்டுமனை + 10 ஆயிரம் ரொக்கமும் அளித்தார்.

11. த.மு.மு. கட்சியை துவக்கிய சிவாஜி பெரியார் சமாதியில் மரியாதை செலுத்தி, முதல் கூட்டம், பெரியார் பிறந்த ஈரோட்டில் 22ம் தேதி நடைபெறும் என அறிவித்தா...

12. மட்டக்களப்பில் இந்திய அமைதி இல்லை. அராஜகப்படை தீவிரம். கடும் பதட்ட நிலை. 'டெலோ', ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகியவை "எட்டப்பன் வேலையில்" உள்ளன.

13. "எப்படியும் காவேரியில் தண்ணீர் கா...கிறேன்" என்ற ஜெயலலிதாவிற்கு கர்நாடக முதல்வர் ஹெக்டே கண்ணீர் காட்டி விட்டார். காரணம் நீர்த்தேக்கத்தில் "பா புக்கு லோ"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

14. இந்த முன்னாள் ராம கோபாலனை 1984 ஜூனில் மதுரை ரயில் நிலையத்தில் அரிவாளால் வெட்டி கைதான கோவை பாட்சா விடம் 'பாட்சா' பலிக்கவில்லை. விடுதலையானார். குற்றம் நிரூபிக்கப்படாததால். என்ன நீதி?!

ஆப்கானிலிருந்து ரஷ்ய படை வாபஸான பின் எல்லையில் குவித்த 60 ஆயிரம் (அமெரிக்க) படை வீரர்களை இந்திய எல்லையில் குவிக்க பாக். திட்டம் டில்லி தலை சொறிகிறது.

15. "எம்.ஜி.ஆர். பக்தர்கள் குழு" என்ற கும்பல் ஒன்று (சென்னை திருவல்லிக்கேணியில் கூடி ஜெயலலிதாவை ஆதரிக்க முடிவெடுத்துள்ளது. முடிவெடுக்க இவர்கள் முடியும் எடுப்பரோ?

அநேகமாக பாக்யராஜின் அரசியல் சட்டசபை. பிரவேசம் வரவிருக்கும் தேர்தலில் பெரியார்மாவட்டம் கோபிசெட்டிபாளையம் தொகுதி வழியாகத்தான் இருக்கும். அதனால் இப்போது அந்தத் தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ. செங்கோட்டையன் (ஜெயலலிதா அணி) வேறு பாதுகாப்பான தொகுதி தேடிவருவதாகக் கேள்வி!

பாக்யராஜின் தீவிர அரசியல் பிரவேசத்திற்கு மனைவி பூர்ணிமா, எம்.ஜி.ஆர். மறைவிற்குப் பின்னர் பூரண அனுமதி கொடுத்துவிட்டாராம்! ஆனால் பாக்யராஜிடம் அது பற்றிக் கேட்டபோது, 'பார்த்துச் செய்யுங்க' என்று சொல்லி 'பிப்டி பர்ஸண்ட்' ஓ.கேயும் 'பிப்டி பர்ஸண்ட்' வேண்டாம் என்றும் கூறியிருப்பதாகச் சொன்னார்.

எப்படியோ, தமிழக அரசியலில் இன்னொரு நடிகர் விரமாகப் புகுந்துள்ளார். அவருக்கு ஆதரவாக நடிக-நடிகையர் பட்டாளமே தேர்தல் களத்தில் இறங்கும். இனி ரசிகர்கள் நடிகர்களைப் பார்க்க சென்னை செல்ல வேண்டியதில்லை. அவர்களே மக்களைத் தேடி வருவார்கள்!

மதுரை கூட்டத்தைப் பொறுத்த வரையில் ஜெயலலிதா அணிக்கு மிகவும் வெற்றிகரமான கூட்டம் என்றே சொல்ல வேண்டும். ஆனால் ஜெயலலிதாவின் மேடைப்பேச்சு எதிர்பார்த்த அளவு மக்களை திருப்திப் படுத்தவில்லை. கூட்டத்தைக் கவரும் சக்தி அவருக்கு இருக்கிறது என்பதை நாம் நேரிடையாகப் பார்த்தோம். ஆனால் அது மட்டுமே தேர்தலில் வெற்றி பெறப் போதுமா?

## Return to Sri Lanka - இலங்கையூரான்.

On 23 January 1988, 336 Sri Lankan returnees were transported by the Indian authorities to Talaimannar in the Mannar District of Sri Lanka. This was the fourth group of returnees from India to arrive on the island since 24 January 1987, and brought their total number to 1,140. Since the signing of the Peace Accord in July 1987, 5,000 Sri Lankan Tamils have reportedly returned from India on their own. According to Indian government sources, 29,000 Sri Lankan Tamil refugees are accommodated in camps in the state of Tamil Nadu, and another 106,000 are scattered throughout the state, bringing their total number to 135,000. REFUGEE


**JANUARY**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 31 | 0 | 0 | 0 | 0 | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**FEBRUARY**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 0 | 0 | 0 | 0 | 0 |

**MARCH**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | 0 | 0 |

**APRIL**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**MAY**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 0 | 0 | 0 | 0 |

**JUNE**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 0 | 0 |

**JULY**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 31 | 0 | 0 | 0 | 0 | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**AUGUST**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | [illegible] | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | 0 | 0 | 0 |

**SEPTEMBER**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 0 |

**OCTOBER**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**NOVEMBER**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 0 | 0 | 0 |

**DECEMBER**

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**● PUBLIC + BANK & ‡ MERCANTILE HOLIDAYS _ 1988**

| | | |
|---|---|---|
| JANUARY. 3 | ●†‡ | FULL MOON DAY |
| JANUARY. 15 | ●†‡ | THAIPONGAL DAY |
| FEBRUARY. 2 | ●†‡ | FULL MOON DAY |
| FEBRUARY. 4 | ●†‡ | INDEPENDENCE COMN. DAY |
| FEBRUARY. 16 | ●† | MAHA SIVARATHIRI DAY |
| MARCH. 3 | ●†‡ | FULL MOON DAY |
| APRIL. 1 | ●†‡ | GOOD FRIDAY, FULL MOON DAY |
| APRIL. 12 | ●†‡ | DAY PRIOR TO NEW YEAR |
| APRIL. 13 | ●†‡ | HINDU, SINHALA NEW YEAR |
| MAY. 1 | ●†‡ | MAY DAY, FULL MOON DAY |
| MAY. 18 | ●† | RAMAZAN FESTIVAL DAY |
| MAY. 22 | ●†‡ | NATIONAL HEROES DAY |
| MAY. 30 | ●†‡ | WESAK FULL MOON DAY |
| MAY. 31 | ●†‡ | DAY FOLLOWING WESAK |
| JUNE. 29 | ●†‡ | FULL MOON DAY (POSAN) |
| JUNE. 30 | ‡ | SPECIAL BANK HOLIDAY |
| JULY. 25 | ●† | HAJJI FESTIVAL DAY |
| JULY. 28 | ●†‡ | FULL MOON DAY |
| AUGUST. 26 | ●†‡ | FULL MOON DAY |
| SEPTEMBER. 25 | ●†‡ | FULL MOON DAY |
| OCTOBER. 24 | ●†‡ | HOLY PROPHETS BIRTHDAY, POYA |
| NOVEMBER. 8 | ●† | DEEPAVALI FESTIVAL DAY |
| NOVEMBER. 23 | ●†‡ | FULL MOON DAY |
| DECEMBER. 22 | ●†‡ | FULL MOON DAY |
| DECEMBER. 25 | ●†‡ | CHRISTMAS DAY |
| DECEMBER. 31 | ‡ | SPECIAL BANK HOLIDAY |

Soap Works. P.O.BOX 77, JAFFNA. PHONE 23233


20/6

www.tamilarangam.net

**CABRI** MÔT CỬA HÀNG RẤT TÍN NHIỆM TỪ LÂU VỀ THỊT BÒ, GÀ, DÊ VÀ ĐỒ LÒNG V.V. **HALAL** VỚI GÍA RẤT RE QÚY VỊ CO THỂ TIN CẬY DƯỢC.

NẾU QÚY VỊ MÚÔN MUA SĨ, BAN NÊN DẶT TRƯỚC VÀO NGAY THỨ BA.

SAU ĐÂY LÀ DIA-CHỈ:

# SOCIETE CABRI

உங்களுக்குத் தேவையான ஹலாலான ஆடு, மாடு, கோழி, வான் கோழி இறைச்சி, குடல், ஈரல் போன்றவைகள் சுத்தமான முறையில், குறைந்த விலையில் கிடைக்கும் இடம்.

சில்லறை, மற்றும் மொத்த வியாபாரமும் உண்டு.

முகவரி:

195, Rue du Faubourg Saint Denis, 75010 PARIS
(Metro: GARE DU NORD)

TEL (1)42 39 27 11

---

சகல விதமான இந்திய வியட்னாமிய மளிகை சாமான்களும், காய்கறி வகைகளும், சுவை மிக்க மீன் இறால் வகைகள் மற்றும் ஆசிய கடல் உணவுப் பொருட்களும் குறைந்த விலையில் கிடைக்குமிடம்

# ROSALIE

15, RUE LAGRANGE, PARIS.5ème

(M) METRO: MAUBERT MUTUALITE

---

## இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்!

தேர்ச்சிபெற்ற சமையற்காரர்களைக்கொண்டு பசிக்காகவும், ருசிக்காகவும், சாப்பிடும் விதத்தில் தாளித்தினிய கோழி, இறைச்சி பிரியாணிகள் மணமும் சுவையும் உள்ளது. குணமிக்க கறி வகைகள் புரு, வாத்து, மீன் புராட்டா இன்னும் பல வகையான சிந்தை மகிழும் சிறந்த உணவுகளுக்குச் சிறந்த இடம்

ஆர்டர் கொடுத்தால் உள்ளம் மகிழும் வகையில் அருமையாக அற்புதமாக சப்ளை செய்ய என்றென்றும் காத்திருப்பது.

TEL: 43.66.94.10

# RESTAURANT INDIEN

(M) MÉNILMONTANT. 18, RUE DE MENILMONTANT. PARIS. 75020.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எனது இதயதெய்வம்



உங்கள் அன்புத் தம்பி சோலை பணிவோடு எழுதிக் கொள்ளும் கடிதம்.

நீங்கள் மறைந்து விட்டதாக இங்கே சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

தெய்வங்கள் மறைவதில்லை. தெய்வமாக வாழ்ந்தவர்களும் மறைந்ததில்லை. லட்சோப லட்சம் மக்களுக்கு நீங்கள் இதய தெய்வம். எப்படி நீங்கள் மறைய முடியும்?

தெய்வங்கள் புறக் கண்களுக்கு புலப்படுவதில்லை. ஆனால் அகக் கண்களுக்கு...?

அவ்வப்போது சோலை தருகின்ற கடிதங்களை உடனுக்குடன் என்னிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்று நீங்கள் உதவியாளர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறீர்கள்.

இந்தக் கடிதமும் உங்களிடம் உடனடியாகச் சேரும் என்ற நம்பிக்கையில்தான் எழுதுகிறேன்.

நீங்கள் நம்பிக்கை நாயகனல்லவா? அந்த நம்பிக்கையில் இப்போதும் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவித்து விடுகிறேன்.

அன்றைக்கு நான் ''ஜனசக்தி'' நாளிதழின் உதவி ஆசிரியன்.

குற்றாலத்திலிருந்த அமரர் ஜீவா அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதம் இன்னும் எனது உள்ளத்தில் பசுமையாக மின்னிக் கொண்டிருக்கிறது.

அன்புமிக்க சோலை,

ஜீவா நலமாக உள்ளேன்.

எம்.ஜி.ஆர். இங்கு என்னைச் சந்தித்தார். நீண்ட நேரம் பேசினோம். விபரம் நேரில்.

கையில் காசில்லை. உடனடியாக மோகன் காந்தி ராமனைச் சந்திக்கவும். எவ்வளவு குறைந்த தொகையாக இருந்தாலும் உடனடியாக மோகனை அனுப்பச் சொல்லவும்.

இப்படிக்கு,
ஜீவா.

அன்றைக்கு அண்ணன் மோகன் காந்தி ராமன் அவர்கள் டைரக்டர் ப. நீலகண்டனிடம் உதவி டைரெக்டர். கடிதத்தை எடுத்துக் கொண்டு கோல்டன் ஸ்டுடியோவிற்கு ஓடினேன்.

என்ன சோலை ஜீவா கடிதம் எழுதியிருக்கிறாரா? இதோ எனக்கும் எழுதியிருக்கிறார். இனி ஜீவாவைப் பற்றி கவலை வேண்டாம். எம்.ஜி. ஆரே பார்த்துக் கொள்வார் என்றார்.

''எப்படி?'' என்று கேட்டேன்.

குற்றாலத்தில் ஜீவாவைச் சந்தித்த விபரத்தை எம்.ஜி.ஆர். என்னிடம் கூறினார். ஜீவா எழுதிய கடிதத்தை அவரிடம் நீட்டினேன். படித்ததும் மெய்சிலிர்த்து அதிர்ந்து போனார்.

''என்னிடம் ஜீவா ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே. இந்த நிலையில் ஜீவா இருக்கிறார் என்றால் அள்ளிக் கொடுத்துவிட்டு வந்திருப்பேனே'' என்று எம்.ஜி.ஆர். சொன்னார் என்றார்.

கவலை வேண்டாம். ஜீவாவுக்கு ஆயிரம் ரூபாய் தந்தி மணியார்டர் பறந்துவிட்டது என்றும் மோகன் கூறினார்.

சோலை. ஒரு விஷயம் தெரியுமா? ஜீவாவுக்கு சொந்த வீடே இல்லை. புறம்போக்கு நிலத்தில் குடிசையில் தான் குடியிருக்கிறார் என்ற விபரத்தையும் எம்.ஜி.ஆரிடம் சொல்லிவிட்டேன் என்று மோகன் காந்தி ராமன் தொடர்ந்தார்.

எம்.ஜி.ஆரை உங்களுக்கு அறிமுகப்படுத்தட்டுமா என்று கேட்டார். ''இப்போது வேண்டாம்'' என்றேன்.

ஜீவா அவர்கள் தாம்பரம் கஸ்தூரிபா நகரில் குடியிருந்தார். கறைபடிந்த உள்ளங்களைப் போல் மண் சாலை மேடும் பள்ளமுமாக சேறும் சகதியுமாக இருந்தது. வானம் கிழிந்துவிட்டது போல் மழை கொட்டிக் கொண்டிருந்தது.

ஜீவாவின் குடிசையில் ஆங்காங்கே மழை நீர் சொட்டிக் கொண்டிருந்தது. ''தாமரை'' இதழுக்கு



அவர் சொல்லச் சொல்ல கட்டுரை எழுதிக் கொண்டிருந்தேன். தாமரை இதழில் தண்ணீர் ஒட்டாததைப் போல ஜீவாவின் குடிசைக்குள் விழுந்த மழைத்துளிகளும் எங்களைச் சுற்றி ஒட்டாது வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

சேற்றிலும் சகதியிலும் விழுந்து புரண்டு எழுந்து ஒரு கார் வந்து நின்றது. அப்போதும் நல்ல மழை. மோகன் காந்தி ராமன் உள்ளே வர புரட்சித் தலைவர் நனைந்து கொண்டே பின்னே வந்தார்.

நான் எழுந்து ஒதுங்கிக் கொண்டேன்.

''என்ன எம்.ஜி.ஆர்.? இந்த மழையில் இவ்வளவு தூரம்?''

ஜீவாவின் கேள்விக்கு புரட்சித் தலைவர் பதில் சொல்லவில்லை.

## 202டன் தக்காளி

பிரிட்டனின் மேற்கு சசக்ஸில் உள்ள பண்ணையொன்றில் ஏக்கருக்கு 202டன் தக்காளி மகசூல் கண்டுள்ளது. ஒரு செடிக்குச் சராசரி 44 ராத்தல் தக்காளிப் பழமாம். அடுக்குப்பாறை துகளைச் சுமார் 1,6000 சென்டி கிரேட் சூடுபடுத்தி, வேகமாகச் சுழற்றி எவ்விதச் சத்துமில்லாமலாக்கி-பின்னர் அதில் இச்செடிகள் பயிரிடப்பட்டன. 11 மாதங்களில் ஒவ்வொரு செடியும் 30 அடி உயரத்திற்கு மேல் வளர்ந்தது.

## இரண்டாம் மனைவி

ஏற்கெனவே வாழ்ந்துவரும் மனைவியைக் கொண்ட ஒருவரை ஒரு இந்துப் பெண் திருமணம் செய்து கொண்டால், இரண்டாவது மனைவிக்கு ஜீவனாம்சம் கிடையாதென உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது

## பிணம் கடத்தல்

இத்தாலியின் ராவென்னாவில் 1979 இல் அடக்கம் செய்யப்பட்ட செராஃபினோ ஃபெருசி என்ற பணக்காரத் தொழிலதிபரின் சடலத்தைத் திருடர்கள் கடத்திப்போயினர். குறிப்பிட்ட பணம் கொடுத்தால் சடலம் திருப்பிக் கிடைக்கும் என்று அவரது வாரிசுகளுக்கு அந்தத் திருடர்கள் தெரிவித்திருக்கிறார்களாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரட்சித் தலைவர் அவர்களுக்கு,

## —சோலை



மவுனித்து இருந்தார். அவருடைய கண்கள் சுழன்றன. கண்களில் நீர் நிறைந்து பனித்துளிகளாக உதிர்ந்தன.

''இந்த மழையில் இவ்வளவு தூரம் எங்கே வந்தீர்கள்?'' என்று ஜீவா மீண்டும் கேட்டார்.

ஒன்றுமில்ல. படப்பிடிப்பிற்கு ''லொகேஷன்'' பார்க்க வந்தோம் என்று புரட்சித் தலைவர் கூறினார்.



பழைய காலத்து சம்பவங்கள் நினைவுகளாக மலர, இருவரும் உள்ளத்தால் உரையாடினர். புரட்சித் தலைவர் விடைபெற்றதும் ஜீவா சிந்தனையில் ஆழ்ந்தார்.

பின்னர் ஒரு நாள் ஜீவா என்னிடம் கூறினார்.

சோலை! நானும் நகம் முளைத்த நாள் முதலாய் அரசியல் உலகில், இலக்கிய உலகில் ஊர் ஊராக ஓடிக் கொண்டிருக்கிறேன். எனக்கு ஒரு வீடு வேண்டும் என்ற எண்ணம் என்னிக்காவது உதித்ததா? எம்.ஜி.ஆருக்குத்தானே உதித்ததாம்!'' என்று வியந்து போனார்.

உணர்வு அலைகளிலிருந்து அவர் மீள்வதற்கு நெடுநேரம் பிடித்தது.

இலையுதிர் காலத்து சருகுகளைப் போல சில மாதங்கள் உதிர்ந்தன.

ஒரு நாள்!

சோலை! இன்றைக்கு எம்.ஜி.ஆரைப் பார்க்கப் போகிறோம். ரெடியாக இருங்கள்... இது ஜீவாவின் கட்டளை.

சந்தித்தோம். ஜீவா அவர்கள் தான் என்னை முதன்முதலாக புரட்சித். தலைவருக்கு அறிமுகம் செய்தார்கள். அறிமுகமா அது? நானே வெட்கித் தலைகுனிகின்ற அளவிற்கு ஜீவா என்னைப் பற்றி எடுத்துச் சொன்னார்.

ஆமாம்! ஜீவாவின் குடிசையின் ஓரத்தில் தூரத்தில் நின்று நான் புரட்சித் தலைவரைப் பார்த்தேன். இப்போது நான் அவரைச் சந்தித்தேன்.

''ஜீவா! அடிக்கடி சோலை என்னிடம் வந்து போகட்டும்''.

நாங்கள் புறப்படும்போது புரட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.

''அதற்கென்ன? வரச் சொல்கிறேன்...'' இது ஜீவாவின் பதில்.

இன்றைக்கும் கூட நெடிய இரவு நேரங்களில் அந்தச் சந்திப்பின் நினைவுகள் என்னை நெருடிக் கொண்டிருக்கின்றன.

ஜீவா அமரரானார்.

அடுத்த சில மாதங்களில் நான் ''நவமணி'' நாளிதழின் துணை ஆசிரியன்.

நான் போகும் போதெல்லாம் எம்.ஜி.ஆர். உங்களை விசாரிக்கிறார். நீண்ட நாள் பழக்கமா? என்று எங்கள் சினிமா நிருபர் ஜோசப் கேட்டார்.

இல்லை ஜீவாவுடன் சந்தித்தது தான். பின்னர் பார்க்கவேயில்லை. என்றேன்.

ஓர் நாள்!

வேலை முடிந்ததும் உங்களை எம்.ஜி.ஆர். அழைத்து வரச் சொன்னார், என்று ஜோசப் கூறினார்.

பிற்பகல் மூன்று மணி, ஜோசப்புடன் சத்தியா ஸ்டுயோவிற்குச் சென்றேன்.

அப்போது நான் ''ஆனந்த விகடனில்'' தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகள் புரட்சித் தலைவரின் உள்ளத்தைத் தொட்டிருக்கிறது.

ஏறத்தாழ அரைமணி நேரம் அவர் உள்ளம் திறந்து பேசினார்.

''நீங்கள் இனியாவது அடிக்கடி வருவீர்களா?'' என்று நாங்கள் புறப்படும் போது புரட்சித் தலைவர் வினவினார்.

''கண்டிப்பாக வருகிறேன்'' என்று விடை பெற்றேன்.

நாட்கள் நகர்ந்தன. மாதங்கள் பறந்தன. வருடங்கள் உருண்டன. புரட்சித் தலைவரோடு எனக்கு ஏற்பட்ட தொடர்பு வளர்ந்து வளர்ந்து நெருக்கமாக இறுகியே விட்டது.

1967ம் ஆண்டு அவர் பரங்கிமலை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டதிலிருந்து கடந்த பொதுத் தேர்தல் வரை ஒவ்வொரு தேர்தலில் அவருக்காக அணிலைப்போல் துணை நிற்கும் வாய்ப்பு கிடைத்தது.

என் மீது அவர் வைத்த நம்பிக்கைக்கு என்றும் துளியும் துரோகம் செய்ததில்லை. 1980ம் ஆண்டு பொதுத் தேர்தல்.

மதுரையிலிருந்து புரட்சித் தலைவர் திருமங்கலம் - சேடப்பட்டிக்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு புறப்பட்டார். என்னை அழைத்து பின் சீட்டில் அவருக்கு அருகில் அமரச் சொன்னார்.

எப்போதுமே அவருக்கு அருகில் அமர்ந்து செல்வதைத் தவிர்ப்பவன். காரணம், தெய்வத்தை சந்நிதியிலிருந்து தரிசித்துப் பழக்கப்பட்டவனே தவிர கருவறைக்குள் சென்று தொழுது பழக்கப்பட்டவனல்ல.

---

### மருந்துத் தீமை

கீல் வாதத்திற்காக (அரித்ரிடீஸ்) இப்போது சாதாரணமாக உபயோகிக்கப்படும் நவீன மருந்துகள் நாளாவட்டத்தில் எலும்பு மூட்டுகளை அழித்து முடமாக்கிவிடும் என பல்கலைக் கழக (இங்கிலாந்து) விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

வம்பளப்பதுபற்றிஆறாண்டு ஆய்வு நடத்தினர் ஸ்காட்லாந்து நாட்டு டண்டி பல்கலைக் கழக மன இயல் நிபுணர் நிக்கலஸ் எம்லெர்.

வெட்டிப் பேச்சு என்பது மனிதனின் இயற்கைக் குணம். பெண்களுக்கு ஈடாக ஆண்களும் வம்பளக்கிறார்கள். ஆனால் அரசியல் பேசுவதாக அவர்கள் ''சொல்வர்'' என்கிறார் எம்லெர்.

இந்தியாவில் 146க்கும் அதிகமான விலங்கினங்களும், பறவைகளும் முற்றிலும் அழிகின்ற அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக மாநிலங்கள் அவையில் தெரிவிக்கப்பட்டது.

www.tamilarangam.net

ஆனால் அன்றைக்கு அவருடைய நிர்பந்தம்!

காரின் முன் சீட்டில் சகோதரர் பட்டுராசனும் பொ. அன்பழகனும் அமர்ந்திருந்தனர்.

வேகமாக வந்த கார் திருப்பரங்குன்றம் ஆலயத்திற்கு நேராக மெதுவாக எறும்புபோல் ஊர்ந்து சென்றது.

''சோலை...''

''என்னங்க அண்ணா''

புரட்சித்தலைவர் தனது பொற்கரத்தை - வலது கரத்தை என் முன்னே நீட்டினார்.

''வாழ்விலும் தாழ்விலும் இறுதி வரை நாம் ஒன்றாக இருக்க வேண்டும். சத்தியம் செய்யுங்கள்'' என்றார்!

என் உடம்பெல்லாம் சிலிர்த்தது. உள்ளங்கால் முதல் உச்சிவரை மின்சார பாய்ச்சல்.

''நான் உங்களை விட்டு எங்கே போவேன்...'' என்றேன். என் குரல் தழுதழுத்தது. கண்களில் கண்ணீர் முத்துக்கள் விழவா நிற்கவா - என்று விண்ணப்பம் போட்டுக் கொண்டிருந்தன.

''அதெல்லாம் எனக்கு தெரியாது. சத்தியம் செய்யுங்கள்'' என்றார். வாரிக் கொடுத்து சிவந்த அந்த வள்ளலின் கையில் அடித்து சத்தியம் செய்தேன்.

அதன் பின்னர் நான் சிலையாய் அமர்ந்து விட்டேன். மவுனம் என்னில் குடி கொண்டது. திருமங்கலம் வரையில் அவர் என்னை திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டே வந்தார்.

* * *

பெரிய குளம் நாடாளுமன்ற தொகுதி இடைத்தேர்தல்.

வாக்குப்பதிவிற்கு இன்னும் பத்தே நாட்கள்.

வழக்கம் போல் தனியாகத் தொகுதி முழுக்கச் சென்று வாருங்கள் என்றார். சென்றேன். மதுரை திரும்பினேன். நாளை வாக்குப்பதிவு நடந்தால் நாம் தோற்கிறோம்.'' என்றேன்.

அவர் அதிர்ச்சி அடையவில்லை. நிலைமை அவருக்குப் புரிந்தே இருந்தது. ''வெற்றி பெற்றாக வேண்டும் அதற்கு என்ன வழி'' என்றார்.

''இப்படி இப்படி வேலைப் பங்கிடு செய்து பணிசெய்ய வேண்டும்'' என்றேன்.



**அனைவரையும் அனுப்பி விட்டு, ''சோலை! ஒரு யோசனை'' என்றார்.**

**ஒரு நிமிடம் மவுனம்.**

**ஒன்றுமில்லை. அம்முவை (ஜெயலலிதாவை) தேர்தல் பிரச்சாரத்திற்கு அழைத்தால் என்ன? என்று கேட்டார்.**

**எண்ணிப் பார்ப்பதற்கு இனி என்ன இருக்கிறது? சிறகு முளைத்த குயிலை எத்தனை நாள் வீட்டுக் கூண்டிலேயே அடைத்து வைப்பது? அரசியல் வானில் சுதந்திர வானம்பாடியாக பறக்கவிடுவது என்று புரட்சித் தலைவர் அன்றே தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டார்.**

**''அப்படியானால் இனி அவர்கள் முழுநேர அரசியல் வாதியா?''**

**''ஆம்'' என்றார்.**

**உங்கள் உத்தரவை ஏற்கிறேன் என்று சொல்வதைத் தவிர வேறு என்ன பதிலைக் கூறமுடியும்?**

**''வாழ்விலும் தாழ்விலும் இறுதிவரை நாம் ஒன்றாக இருக்க வேண்டும். சத்தியம் செய்யுங்கள்'' என்றார்.**

உள்ளே அண்ணன் காளிமுத்து அவர்கள் அடியெடுத்து வைத்தார்கள்.

''சரி. நீங்கள் இருவரும் சேர்ந்து திட்டமிடுங்கள்'' என்றார்.

பணித் திட்டத்தினை அண்ணன் காளிமுத்து அவர்களே வடித்தார். இருவரும் சென்று கொடுத்தோம்.

அன்று மாலையே வைகை அணையில் தேர்தல் பணியாளர்கள் கூட்டம். ஒவ்வொருவரும் இந்த இந்தப் பகுதியில் தேர்தல் முடியும் வரை பணிசெய்ய வேண்டும் என்று கட்டளை பிறந்தது.

இதுவரை தி.மு.க. அதிக வாக்குகள் வாங்கிய பகுதி கொடைக்கானல். அதற்கு நீங்கள்தான் பொறுப்பாளர் என்றார். ஏற்றுக் கொண்டேன். அமைச்சர் விஜய சாரதியை அழைத்துக் கொண்டேன்.

அனைவரையும் அனுப்பிவிட்டு ''சோலை! ஒரு யோசனை'' என்றார்.

ஒரு நிமிடம் மவுனம். ஒன்றுமில்லை. அம்முவை (ஜெயலலிதாவை) தேர்தல் பிரச்சாரத்திற்கு அழைத்தால் என்ன? என்று கேட்டார்!

தேர்தல் தோல்வி வேட்டை நாயைப் போல் துரத்திக் கொண்டிருந்த நேரம். களப்பணியை முதன்மைப்படுத்த வேண்டிய வேளை.

''அழைக்கலாம். இன்றைய பொழுது போய்விட்டது. விடிந்தால் இன்னும் ஒன்பதே நாட்கள்தான்.'' என்றேன்.

மூன்று தினங்களுக்குப் பின்னர் கொடைக்கானலில் உறங்கிக் கொண்டிருந்தேன். இரவு பதினோரு மணி. உறைபனி ஊற்றிக் கொண்டிருந்தது.

ஒரு சப்- இன்ஸ்பெக்டர் என்னை எழுப்பினார்.

''சார்! முதல்வர் கூடலூரில் பேசிக் கொண்டிருக்கிறார். முடிந்ததும் நேராக கொடைக்கானல் வருகிறார். உங்களுக்குத் தகவல் தரச் சொன்னார்கள். வயர்லஸ் செய்தி'' என்றார்.

புரட்சித் தலைவர் தங்க வேண்டிய கோகினூர் இல்லம். அதிகாலை மூன்று மணி அமைச்சர் பண்ருட்டியாருடன் வந்து சேர்ந்தார்.

அனைவரையும் அனுப்பிவிட்டு 'மாலை முரசு'' நாளிதழை நீட்டினார். படிக்கச் சொன்னார் தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகிறேன் என்று செல்வி ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை.

செல்வமும், ஆண் பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரங்களே. என்றாலுமே நிலையான நற்கருமங்கள் தாம், உம் இறைவனிடத்தில் நற்கூலி பெறுவதற்கும் நம்பிக்கை கொள்வதற்கும் மிக்க மேலானதாகும்.

—திருக்குர்ஆன்

உலக ஆசை அதிகரித்தவனின் எண்ணங்கள் செல்லும் திசை செல்வம் இருக்கும் பக்கமேயாகும்.

—நபிகள் நாயகம் (ஸல்)

சிரிப்புக்காக விருந்து செய்யப்படுகிறது. திராட்சை பானமோ உற்சாக போதையை உண்டாக்குகிறது. செல்வமோ எல்லாவற்றுக்கும் பதில் சொல்கிறது.

—பைபிள்

அன்பு ஒரு தாய், அவள் ஈன்ற குழந்தையே அருள். அக்குழந்தை வளமாக வளர வேண்டுமானால் பொருள் என்ற செவிலித் தாயின் அரவணைப்பும், ஆதரவும் மிகமிகத் தேவையாகும்.

—திருவள்ளுவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''அறிக்கைவிட்டு விட்டாளே! என்ன செய்யலாம்'' என்றார்.

என்கொன்றும் ஆட்சேபனை இல்லை. இனி அவர்கள் சென்னையிலிருந்து புறப்பட்டு வருவதற்கு ஒரு நாளாகும். இரண்டு நாட்களில்...'' என்று இழுவை ராகம் பாட ஆரம்பித்தேன்.

தேர்தல் பிரச்சாரம் முடிய இன்னும் மூன்றே நாட்கள்! அவரே நாட்களை விரல் விட்டு எண்ணிக் கொண்டார்.

''சரி! சோலை! தூங்குவோம்'' என்றார்.

''நீங்கள் தவறாக எண்ணக் கூடாது. ஒரு சந்தேகம்'' என்றேன்.

''தயங்காது சொல்லுங்கள்'' என்றார்.

''நீங்கள் அவர்களை (ஜெயலலிதாவை) அரசியலில் ஈடுபடுத்தப் போகிறீர்களா?

அந்த முடிவோடுதான் தேர்தல் பிரச்சாரத்திற்கு அழைக்கலாம் என்கிறேன். நீங்கள் வேண்டாம் வேண்டாம் என்கிறீர்கள்... என்றார்.

''உங்கள் எண்ணத்திற்கு மாறாக என்ன சொல்லப்போகிறேன்? இப்போது நாட்கள் இல்லையே என்றுதான் சொல்கிறேன்'' என்றேன்.

சுற்றுப்பயணத் திட்டத்தை மாற்றிக் கொண்டு ஏன் அவசர அவசரமாக கொட்டும் குளிரில் கொடைக்கானல் வந்தார் என்பது அப்போதுதான் புரிந்தது.

எண்ணிப் பார்ப்பதற்கு இனி என்ன இருக்கிறது? சிறகு முளைத்த குயிலை எத்தனை நாள் வீட்டுக் கூண்டிலேயே அடைத்து வைப்பது? அரசியல் வானில் சுதந்திர வானம்பாடியாக பறக்கவிடுவது என்று புரட்சித் தலைவர் அன்றே தீர்க்கமான முடிவுக்கு வந்து விட்டார்.

* * *

திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்.

அண்ணன் அரங்கநாயகம் அவர்களும் நானும் திருச்செந்தூர் அருகே ஒரு விருந்தினர் விடுதியில் தங்கி இருந்தோம்.

சென்னையிலிருந்து புரட்சித் தலைவர் தொலைபேசியில் பேசினார்.

தேர்தல் பிரச்சாரத்திற்கு நாளை அம்மு வருகிறாள். சோலையை மதுரை விமான நிலையத்திற்கு அனுப்புங்கள். அவரே துணைக்கு இருக்கட்டும்.

அண்ணன் அரங்கநாயகம் அவர்கள் என்ன பதில் சொல்ல முடியும்? உடன் மதுரை செல்லுங்கள் என்று உத்தரவிட்டார்.

செல்வி ஜெயலலிதா அவர்களின் சுற்றுப்பயணம் மகத்தான வெற்றி.

திருச்செந்தூர் தேர்தல் வெற்றிக்கு அவரது உழைப்பும் ஓர் காரணமாக அமைந்தது.

புரட்சித் தலைவர் பூரித்துப் போனார்.

இனி நீங்கள் அம்முவுக்கு உதவியாக இருங்கள்.

சென்னை திரும்பியதும் மாம்பலம் அலுவலகத்தில் புரட்சித் தலைவர் எனக்கு உத்தரவிட்டார்.

''அவருடைய அரசியல் பிரவேசம் நம்மில் பலருக்கே எரிச்சலை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த நிலையில்...'' என்று பேசத் தயங்கினேன்.

எல்லாம் எனக்குத் தெரியும். நானே எல்லா ஊர்களுக்கும் போக முடியுமா? கருணாநிதிக்கு பதில் சொல்ல இனி அம்முவைத்தான் அனுப்ப வேண்டும் என்று புரட்சித் தலைவர் அடித்துச் சொன்னார்.

''உங்கள் விருப்பம். ஆனால் நான் எப்படி அவருக்கு உதவியாக...''

நான் பேச்சை முடிக்கவில்லை.

சோலை! அவள் என்னை நம்பி வந்துவிட்டாள். நான் உங்களை நம்பி அனுப்பாமல் வேறு யாரை நம்பி அனுப்பச் சொல்கிறீர்கள்? என்று சொல்லுக்குச் சொல் நிறுத்தி நிதானமாக சொல்லிவிட்டு என்னை உற்றுப் பார்த்தார்.

''அப்படியானால் இனி அவர்கள் முழுநேர அரசியல்வாதியா?''

''ஆம்'' என்றார்.

உங்கள் உத்தரவை ஏற்கிறேன் என்று சொல்வதைத் தவிர வேறு என்ன பதிலைக் கூறமுடியும்?

* * *

எனது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களே!

1966ம் ஆண்டிலிருந்து 1987ம் ஆண்டு வரை: வங்கக் கடலோரம் நீங்கள் சந்தனப் பேழையில் உறங்கச் செல்லும் வரையில்: நீங்கள் என்னை ஒரு மெய்யான தொண்டனாக ஏற்றுக் கொண்டீர்கள்!

என்னால் முடிந்த அளவிற்கு உங்களுக்குத் தொண்டு செய்தேன்.

இருபதாண்டுக் கால இதய பந்தத்தை என்னால் எப்படி மறக்க முடியும்? என் மீது நீங்கள் காட்டிய பரிவை - நீங்கள் பொழிந்த அன்பை என்னால் எப்படி மறக்க முடியும்?

ஆனால் ஒன்று...

நீங்கள் திருப்பரங்குன்றம் ஆலயத்திற்கு எதிரே, ''நாம் வாழ்விலும் தாழ்விலும் இறுதிவரைஇணைந்தே நிற்க வேண்டும்'' என்று என்னிடம் சத்தியம் வாங்கினீர்கள் அல்லவா? அந்தச் சத்தியம் இன்று நிறைவேறி விட்டது.

இன்று நான் சுதந்திர மனிதன்.

என்றாலும் இறுதி மூச்சுள்ளவரை உங்கள் புகழ் பாடிக் கொண்டிருப்பேன்.

அதற்காக வலிமையை நீங்கள் எனக்குத் தாருங்கள்.

என்றும் போல் உங்கள் அன்புக் கட்டளையை எதிர்நோக்கி நிற்கும் உங்கள் தொண்டன் - உங்கள் தம்பி.



**சோலை! நானும் நகம் முளைத்த நாள் முதலாய் அரசியல் உலகில், இலக்கிய உலகில் ஊர் ஊராக ஓடிக் கொண்டிருக்கிறேன். எனக்கு ஒரு வீடு வேண்டும் என்ற எண்ணம் என்னிக்காவது உதித்ததா? எம்.ஜி.ஆருக்குத்தான் உதித்ததாம்!'' என்று வியந்து போனார்.**

## இந்தியர்கள் அதிகமுள்ள அரபுநாடு ஸவூதி

அரபுநாடுகளிலேயே இந்தியத் தொழிலாளர்களை அதிக அளவில் இறக்குமதி செய்துள்ள நாடு ஸவூதி அரேபியா.

ஒரு லட்சத்து 50 ஆயிரம் இந்தியர்கள் இங்கு வேலை செய்கிறார்கள்.

இந்த விஷயத்தில் 2வது இடத்தைப்பெறும். ஓமானில் 37 ஆயிரத்து 806 பேர் வேலை செய்கிறார்கள்.

இந்தக் கணக்கெடுப்பு 1985ம் ஆண்டு எடுக்கப்பட்டது.

போலீஸ் என்ற சொல் எப்படித் தோன்றியது தெரியுமா?

போலிஷியா என்பது ஒரு கிரேக்க வார்த்தை. ஆளுதல் என்று அதற்குப் பொருள்.

இதிலிருந்துதான் போலீஸ் என்னும் சொல் வந்தது.

ஃ ஃ ஃ

சென்னையில் நாள் ஒன்றுக்கு சுமார் 2 ஆயிரம் டன் குப்பை சேர்கிறதாம்.

ஃ ஃ ஃ

உலகிலேயே மிக உயரமான சிகரமாகிய எவரெஸ்டின் உயரம், 29 ஆயிரத்து 28 அடி.

இயற்கையான வைட்டமின் - சி சத்து நெல்லிக் காயில் அதிகம் இருக்கிறது.

www.tamilarangam.net

# வாழ்க்கையில் வெற்றி

அப்துற் றஹீம்

## அத்தியாயம்—2

''என்னுடைய துன்பங்களில் முதல் துன்பம் நான் பிறந்ததுதான்!'' என்று பிரெஞ்சுப் புரட்சியின் ஆன்மாபோன்று விளங்கிய ரூஸோ ஒரு தடவை கண்ணீர் விட்டுக் கதறினார். வறுமையின் தாங்கொணாத் தாபத்தால் அவரின் உள்ளத்திலிருந்து கசிந்த சொற்களே இவை. இவ்விதமே வறுமைப் பிணியில் உழன்று வாழ்க்கையே கசந்துபோன எத்தனையோ மக்கள் உலகிலிருக்கின்றனர். அவ்வறுமையை வென்று, சிறந்த பேராசிரியராகவும், முடியாட்சியை ஒழித்து குடியாட்சியை நிறுவிய புரட்சித் தலைவராகவும் ரூஸோ உலக வரலாற்றிலே காட்சியளிக்கிறார். அவர் எழுதிய 'சமுதாய ஒப்பந்தம்' உலக மக்களின் உரிமைச் சாசனமாகத் திகழ்கின்றது. அவர் வெற்றிக்கு வறுமை ஒரு தடையாக இருக்கவில்லை.

ஆதலின், 'என்னிடம் பணம் இல்லையே! நான் எவ்விதம் உயரிய இலட்சியங்களை எண்ணுவது? அவ்விதம் எண்ணினாலும் பொருளில்லையானால் அவையெல்லாம்கைகூடுமா?' என்று நீங்கள் கலங்கவேண்டாம்! உலக வரலாற்றைத் திருத்தியமைத்தவர்களில் பெரும்பாலோர் ரூஸோ போன்ற ஏழைகள் தாம் என்பதை நீங்கள் அறியவில்லையா? ஒருக்கால் அவரை ஊர் ஊராக விரட்டியடித்த பிரெஞ்சு மக்கள் அவர் இறந்தபின் அவருடைய எலும்புகளைத் தோண்டி எடுத்து மிகுந்த ஆடம்பரத்துடன் ஊர்வலம் நடத்தித் தகுந்த இடத்தில் அந்த எலும்புகளை அடக்கம் செய்து அவரைக் கௌரவித்தனர். அவர்களுக்கெல்லாம் ஏழ்மை ஒரு தடைக்கல்லாக அமையவில்லையே! அவர்களை ஏழ்மை தாழ்மைப்படுத்தவில்லையே? அவ்விதமெனில் ஏழ்மையால் உங்களுக்கு எவ்விதத் தீங்கும் செய்துவிட முடியாது என்று திடமாக நம்புங்கள்!

உலக வரலாற்றைப் பார்த்தோமானால், பணக்காரர்களைவிட ஏழைகள்தாம் உலகிற்குப் பேருதவி செய்தவர்களாக அமைந்திருக்கிறார்கள், உலகை உய்விக்க வழி தேடியிருக்கிறார்கள் என்பது நன்கு புலனாகும். இவ்வுலகம் இத்தனை அளவு முன்னேறியிருப்பதற்குக் காரணம் ஏழைகள்தாம் என்று எவரும் வாய் கூசாது எடுத்துரைக்கலாம். பெரும் பெரும் போராட்டங்களென்ன. அரும் பெரும் புரட்சிகளென்ன, மாபெரும் மதங்களென்ன, சீர்பெறும் காவியங்களென்ன, சிறப்புறும் சரித்திர ஆராய்ச்சிகளென்ன—எல்லாம் ஏழைகளாலேயே செய்யப்பட்டிருக்கின்றன என்று உலக வரலாறு பறை முழக்குகின்றது.

சமதர்மக் கொள்கையை உலகிற்கு அளித்த கார்ல் மார்க்ஸின் வரலாற்றை நீங்கள் படித்திருக்கலாம். அவருடைய வாழ்க்கை ஒரு துன்பக் கடலல்லவா? எனினும் அவருடைய அறிவு ஓர் இன்பப் பூங்காவனமாய்ப் பொலிவுறவில்லையா? அவருடைய அறிவிலே மலர்ந்த சுகந்த மலரான சமதர்மக் கொள்கைதானே இன்று ரஷ்யாவில் அரசியல் வேதமாகப் பொலிவுற்றுத் திகழ்கிறது.

'எங்கள் தந்தை' என்று துருக்கியரால் போற்றப்படும் கமால் பாஷா கடற்கரையில் அலுவல் பார்த்து வந்த ஓர் ஏழையுடைய மகன்தானே! வியன்னாத் தெருக்களில் வர்ணம் தீட்டிக் காலம் கழித்து வந்த ஹிட்லர் பின்பு ஜெர்மனியின் சர்வாதிகாரியாகி ஐரோப்பாக் கண்டத்தின் படத்திலே புது வர்ணம் தீட்டவில்லையா?

அமெரிக்காவைச் சுதந்திர நாடாகச் செய்த ஜார்ஜ் வாஷிங்டன் ஓர் ஏழை. அமெரிக்காவில் அடிமை வாணிபத்தை அடியோடு வேரறுத்த ஆப்ரஹாம் லிங்கன் புத்தகங்களை இரவல் வாங்குவதற்காக வெகு தொலை நடந்து சென்று இரவில் அடுப்பு வெளிச்சத்தில் தானே படித்து முன்னேறினார். கற்பலகை வாங்குவதற்குக் கூடக் கையில் காசில்லாது மண் வெட்டியில் சுண்ணாம்புக் கட்டியால் எழுதித்தானே அவர் கல்வி கற்றார். அவருடைய தட நெடுங்கரங்களால் அடிமை வாணிபம் ஒழிந்து அமெரிக்கா புனிதமடைந்தது.

அவரைப் பின்பற்றித்தான் பிற நாட்டினரும் அடிமை வாணிபத்தை ஒழிக்க முற்பட்டனர். அமெரிக்க நாடுகளில் உள்நாட்டுக் குழப்பத்தை அடக்கி, ஓர் அமைப்புக்குள் அமெரிக்கா நாடு முழுவதையும் கட்டுப்படச் செய்து, இரு தடவை அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த லிங்கன் ஓர் ஏழை விறகு வெட்டியின் மகன்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உட்ரோ வில்ஸன் துவக்கத்தில் ஓர் ஏழை ஆசிரியராகவே வேலை பார்த்து வந்தார். நல்ல உடுப்புகள் வாங்குவதற்குக்கூடக் கையில் காசு இருக்காது. குடும்பத்தைக் காப்பாற்றவே வாங்கும் சம்பளம் போதாது. எனவே, அவருடைய மனைவியும் படங்கள் தீட்டி விற்றுக் குடும்பத்தை நடத்த வேண்டியிருந்தது. பின் அவர் அமெரிக்க அதிபராகி 'உலகத்தை உய்விக்க வந்தவர்' என்று ஒரு சமயம் உலகத்தினரால் கருதப்படவில்லையா?

கான்ஸாஸ் நகரில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டும் பசுமாடுகளை மேய்த்துக்கொண்டும் வாழ்ந்து வந்த ஐஸன் ஹோவர் இரண்டாவது உலகப் பெரும் போரில் மேற்கு அரங்கத்திலுள்ள தரைப்படை, கடற்படை, விமானப் படை ஆகிய எல்லாப் படைகளுக்கும் மகா தளபதியாகவில்லையா?

நெப்போலியன், ஸீஸர், ஹானிபால், சார்லிமேன் ஆகியவர்களின் படைகளை எல்லாம் ஒன்று திரட்டிப் பார்த்தாலும் அதைவிட அதிகமான தரைப் படையும், நெல்சன், ஹாக்கின்ஸ், ஜான்பால் ஜோன்ஸ், அட்மிரல் டுவி ஆகியவர்களின் கீழிருந்த மொத்தக் கடற்படையைவிட அதிகமான கடற்படையும், கனவிலும் கருத முடியாத அளவு பெரிய விமானப் படையும், ஒரு சமயம் மாடுகளை மேய்த்த அந்த ஐஸன் ஹோவரின் கீழ் வேலை செய்யவில்லையா? இத்தனை மகத்தான ஆற்றல் ஒரு தனி மனிதன் கையில் உலகம் தோன்றியது முதல் இதுவரை ஒப்படைக்கப்பட்டதே இல்லை. இவ்வளவுக்கும் அவர் போர்க்களத்தில் ஒரு படையை நடத்திச் சென்று போர் செய்தது கிடையாது.

புற்று நோயைப் போக்கக்கூடிய ரேடியத்தைக் கண்டுபிடித்த க்யூரி அம்மையார் போலந்தில் ஒரு பணக்காரக் குடும்பத்தில் வேலைக்காரியாயிருந்தவர்தாம். அவர் வசித்து வந்த அறைக்கு ஒரே கதவுதான். அதிலே வெளிச்சமுமில்லை, வெப்பமும் கிடையாது. எனவே, அவர் இரவில் குளிர் தாங்க முடியாது நாற்காலியின் கீழே போய்ப் பதுங்கிக் கொண்டு தூங்குவாராம்.

பாரிஸ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும்போதும் பசி தாங்க முடியாது. ஒரு தடவை அவர் கீழே மயங்கி விழுந்துவிட்டார். ஆனால் பசி, வறுமை ஆகிய இவ்வல்லல்களுக்கிடையே அவர்தம் இரசாயன ஆராய்ச்சியைமட்டும் விடவில்லை. இதன காரணமாகப் பிற்காலத்தில் உலகம்போற்றும்பெருமை பெற்று 1903-ஆம் ஆண்டில் பௌதீக ஆராய்ச்சிக்காகவும், 1911-ஆம் ஆண்டில் இரசாயன ஆராய்ச்சிக்காகவும் இரு தடவை நோபல் பரிசு பெற்றார். இரு தடவை நோபல் பரிசு பெற்றவர் உலகில் ஒருவர் இருந்தாரென்றால் அவர் க்யூரி அம்மையார் தாம்.

அவர் கண்டுபிடித்த ரேடியத்தின் மதிப்பு நாளுக்கு நாள் வளர்ந்து வந்து உலகம் முழுவதும் அதனுடைய தேவை அதிகமாகியது. ஆனால், அதைச் செய்யும்முறை க்யூரி அம்மையாருக்கு மட்டும்தான் தெரியும். அதை உரிமைப் பதிவு செய்துகொண்டிருந்தால் க்யூரிஅம்மையார்கோடீஸ்வரியாய்ஆகியிருக்கலாம். ஆனால் செல்வநிலையில்இல்லாதிருந்தும் க்யூரி அம்மையார் மனித இனத்திற்காக ரேடியம் செய்யும் முறையை அர்ப்பணம் செய்துவிட்டார். அந்த க்யூரி அம்மையாரின் வாழ்க்கையை ஒரு சினிமா நிறுவனம் இரண்டு இலட்சம் பவுன்கள் செலவிட்டுப் படம் பிடித்தது.

சமதர்மப் புரட்சியை ரஷ்யாவில் நடாத்தி உலகோர் வியப்புறும் வண்ணம் வெற்றி கண்ட லெனின், செல்வர் வயிற்றில் உதிக்கவில்லை. அவர் இறப்பினும் அவருடைய உடலை செஞ்சதுக்கத்தில் கெட்டுப்போகாது இரசாயன முறைப்படி வைத்து ரஷ்ய மக்கள் தங்களின் தலைவன்பால் இன்றும் மரியாதை செலுத்தி வருகின்றனர். 'ஏழையென்றும் அடிமையென்றும் எங்கள் நாட்டில் இல்லை' என்று அவர் வீர முழக்கம் செய்து அதை நிரூபித்துக் காட்டவில்லையா? செல்வச் செருக்கிற்கும் ஆடம்பர ஏதேச்சாதிகாரத்திற்கும் இருப்பிடமாயிருந்த ரோமனாவ் வம்சத்தின் முடிமன்னன் ஜாரை மண்ணைக் கவ்வுமாறு செய்து ரஷ்ய நாட்டைக் குடியரசாக்கியவர் ஆஸ்திரகானில் ஓர் எளிய குடும்பத்தில் தோன்றி எளிய வாழ்வு வாழ்ந்த லெனின் தாமே. ரஷ்யப் புரட்சி ஏழைகளின் புரட்சியல்லவா?

மேற்கூறிய பெரியார்களுக்கு ஏழ்மையும் துயரமும் தடையாக இருந்தனவா? இல்லை. வெற்றிச் சிகரத்திற்கு ஏற்றிச் செல்லும் படிகளாகவல்லவா அவை இருந்தன, அவர்களுடைய உயரிய இலட்சியத்தின் ஒளியானது ஏழ்மைத் துயரங்களின் இருட் படலங்களைத் துளைத்துக்கொண்டு செல்லவில்லையா? அவர்களின் திடமான இலட்சியமென்னும் வெள்ளப் பிரவாகத்தின் முன் வறுமையும் துன்பமும் சிதறடிக்கப்படவில்லையா? ஆதலின் எனதன்புள்ள தோழர்களே! பணம் இல்லையே என்று மனம் தளரவேண்டாம். அதோ வெற்றி உங்களை எதிர்கொண்டு வரவேற்கக் காத்து நிற்கின்றது. ஆகையினால் தளரா முயற்சியுடன் முன்னேறிச் செல்வீர்களாக!

*ஒரு நாணயத்தை வைத்துக்கொண்டு பிறிதொரு நாணயம் உற்பத்தி செய்வதை (அதாவது வட்டியை) ஆதரிக்கலாகாது.*

—அரிஸ்டாட்டில்

www.tamilarangam.net

# சிவாஜி தாத்தாவும் வைஜயந்தி பாட்டியும்!

தமிழகத்தின் அரசியல் விதியையே மாற்றி அமைக்கும் வல்லமை பெற்ற இரண்டு அரசியல் ஞானிகள் இருக்கிறார்கள்.

சும்மா சொல்லக் கூடாது. அவர்கள் இல்லையென்றால் தமிழகத்து அரசியலே அஸ்தமித்து விடும்.

ஒருவர் நமது சிவாஜி கணேசன் தாத்தா!

இன்னொருவர் வைஜயந்திமாலா பாட்டி!

எந்த ஒரு பிரச்னையிலும் இவர்கள் என்ன கருத்துச் சொல்லப் போகிறார்களோ என்று தான் அகில உலக அரசியல் அரங்கமே ஆடிப்போய் இருக்கிறது.

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னால் ஜானகி அம்மையாரின் ஆட்சி! இந்த ஆட்சி சட்டமன்றத்தில் நம்பிக்கை ஓட்டுப் பெற வேண்டும். அதற்கு காங்கிரஸ் கரம் கொடுக்க வேண்டும்.

நமது அரசியல் ஞானப் பழங்கள் சும்மா இருப்பார்களா? முதலில் சிவாஜி தாத்தா, வாயு வேகம் மனோ வேகமாக டெல்லிக்குக் கிளம்பினார். உடன் சென்றவர் சுலோசனா சம்பத்தின் மகன் இளங்கோவன்! சட்டமன்ற உறுப்பினரும் கூட!

எப்படியும் செல்வி ஜெயலலிதாவிற்கு ஆதரவான அமைச்சரவை அமைந்துவிடக் கூடாது என்பதுதான் இவர்களது பெருங்கவலை! வைஜயந்தி பாட்டிக்கும் இதே தீராக் கவலைதான்!


கூந்தல் உள்ள சீமாட்டி அள்ளி முடிந்து கொள்கிறாள். இவர்களுக்கு என் கவலை?

அன்னை ஜானகி ஆட்சி தொடர வேண்டும். இல்லையேல் செல்வி ஜெயலலிதா கை ஓங்கி விடும் என்று முதலில் சிவாஜி தாத்தாதான் டெல்லிக்குப் பறந்தார். இவ நடைய வருகை கேட்டு டெல்லிப் பட்டினமே அதிர்ந்ததாம். அகில உலக நிருபர்களெல்லாம் இவரின் கருத்துக் கேட்க விமான நிலையத்தில் முகாம் போட்டு காத்திருந்தனராம்.

ஜனாதிபதியிலிருந்து பூட்டா சிங் வரை பலரையும் சிவாஜி தாத்தா சந்தித்தார். அழையா விருந்தாளியாகத்தான்!

தமிழகத்தில் அன்னை ஜானகி ஆட்சி நீடிக்க வேண்டும். இல்லையேல் பூகம்பம் வெடிக்கும். கடல் குமுறும். காற்று வீசாமல் நின்று விடும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்.

சட்டமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிந்திய ரத்த சாட்சியாக இதனைச் சொல்வதற்காகத்தான் டெல்லி சென்றா[illegible]




எப்படியும் ஜெயலலிதா கை ஓங்கி விடக் கூடாது என்று சுலோசனா சம்பத் கவலைப்பட்டால் அர்த்தம் உண்டு. அதற்காக சிவாஜி தாத்தாவுக்கு துணையாக தனது மைந்தனை அனுப்பி வைத்ததில் பொருள் உண்டு. ஏனெனில் ஜானகி அம்மையாருக்கே நான்தான் ஆலோசகர் என்று சுலோசனா கடைசியாக சொல்லிக் கொண்டிருக்கிறார். எம்.ஜி.ஆர். அமெரிக்க செல்வதற்கு முன்னர் சிலரது சொத்து விபரங்களை ரகசியமாகச் சேகரிக்கச் சொன்னார். புலனாய்வுத் துறையிலும் அந்தப் பணியினை திறமையாகச் செய்து முடித்திருக்கின்றனர்.

டெல்லிப் பட்டினத்தில் ஒரு லட்சம் ரூபாய்க்கு தரைவிரிப்பு வாங்கியவர்களும் உண்டு. தரை விரிப்பே ஒரு லட்சம் என்றால்... மொத்தச் சொத்து பல தொழில் அதிபர்களைத்தான் கேட்க வேண்டும்.

தலை சுற்றுகிறதா? ஆஸ்ப்ரின் மாத்திரை போட்டுக் கொள்ளுங்கள்...

இப்படித் தலையணை அளவிற்கு பெரிய 'பைலே' உருவாகி பத்திரமாக இருக்கிறது.

எதிலும் கண்டிப்பாக இருப்பவர் ஜெயலலிதா அவருக்கு ஆதரவான மந்திரி சபை வந்தால் என்ன கதி ஆகும்? இப்படிப்பலர் ஏங்குவது நியாயம் தானே!

ஆனால் நமது சிவாஜி தாத்தாவுக்கு என்ன வந்தது? ராஜாதிராஜன் வந்தேனய்யா என்று அவர் ஏன் டெல்லிக்கு பயணம் போனார்?

நேற்று எம்.ஜி.ஆர்... நாளை ஜெயலலிதாவா... நினைக்கும்போதே அவருக்கு நெஞ்சு பகீரென்று இருக்கும்.

இன்னொருவர் நமது வைஜயந்தி பாட்டி!

இவரும் டெல்லிக்குப் போனார். எதற்கு? தமது அரசியல் அறிவுக் களஞ்சியத்தை அங்கே வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டாமா?

வைஜயந்தி பாட்டியும் ஜனாதிபதி மாளிகைக் கதவைத் தட்டினார். பூட்டா சிங் வீட்டுக் கதவையும் தட்டோ தட்டு என்று கை வலிக்கத் தட்டினார்.

அன்னை ஜானகி ஆட்சி தொடரவில்லையென்றால் தமிழகத்தில் பிரளயமே வந்துவிடும் என்று காலட்சேபம் செய்தார். பூட்டா சிங் போன்றவர்களுக்கெல்லாம் அரசியல் பாடம் சொல்லிக் கொடுத்தார்.

தனது சேவைக்கு முத்திரை பதிக்க வேண்டாமா? எனவே வைஜயந்தி பாட்டி டெல்லியிலிருந்தே அறிக்கை விடுத்தார் எப்படி?

அன்னை ஜானகியின் அமைச்சரவை நிலைத்து நிற்க வேண்டிய அவசியத்தை விளாவாரியாக விளாசித் தள்ளிவிட்டேன் என்று அறிக்கை விடுத்தார்.

வைஜயந்தி பாட்டியின் மேலான யோசனையை டெல்லித் தலைமை ஏற்றுக் கொண்டதாக அவருக்கு ஒரே குஷி!

இதில் ஒரு வேடிக்கையைப் பாருங்கள். அன்னை ஜானகி ஆட்சி வேண்டும் என்று சங்கராச்சாரியார் சுவாமிகளும் அண்ணன் வீரமணியும் கரம் கோர்த்துக் கொள்கிறார்கள். காங்கிரஸ் களத்தில் எதிரும் புதிருமாக நிற்கும் சிவாஜி தாத்தாவும்வைஜயந்தி பாட்டியும் ஒரு அணி என்கிறார்கள்.

தாத்தாவுக்கும் பாட்டிக்கும் டெல்லியில் எவ்வளவு செல்வாக்கு என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டது. இனி என்ன செய்யப் போகிறார்கள்? புதுக்கட்சி என்பார்களோ?

சிவாஜி தாத்தா அன்னை ஜானகி அணிக்கு ஒரே தாவாகத் தாவலாம். பேச்சு வார்த்தையும் மங்கலகரமாக முடிந்திருக்கிறது!

வைஜயந்தி பாட்டி என்ன செய்யப் போகிறார்?

எம்.வி. ராஜம்மா, சி.டி. ராஜகாந்தம், சரோஜா தேவி, லதா போன்றவர்களெல்லாம் ஏற்கனவே ஜானகி அணியின் மகளிர் பட்டாளமாக அணி வகுத்து நிற்கிறார்கள். அந்த அணியில் வைஜயந்தி பாட்டி சேருவாரா என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

சும்மா சொல்லக் கூடாது. ஜெயலலிதாவின் அரசியல் பிரவேசம் அண்ணா தி.மு.க.வில் பலருக்கு பைத்தியம் பிடிக்கச் செய்தது என்று மக்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். அண்ணா தி.மு.க. வட்டாரத்திற்கு அப்பாலும் பலருக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது என்ற ரகசியம் இப்போதுதான் தெரிகிறது. இன்னும் எத்தனை எத்தனை பேரோ?

நந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# படம் எடுக்க பல கோடி வந்தது எப்படி?

# திருநாவுக்கரசுக்கு வீரப்பன் பதில்

திருச்சி, பிப். 14— ''மரங்களை வெட்டி விற்றதில் லஞ்சம் வாங்கினார்'' என்று திருநாவுக்கரசு கூறிய குற்றச்சாட்டுக்கு வீரப்பன் பதில் அளித்தார்.

திருச்சியில் ஆர்.எம். வீரப்பன் நேற்று இரவு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:-

### பொய் குற்றச்சாட்டு

புதுக்கோட்டையில் காலியாக இருந்த நகரசபைக்கு சொந்தமான இடத்தை நான் எடுத்துக் கொண்டதாக திருநாவுக்கரசு கூறி இருக்கிறார். அது முற்றிலும் பொய். அந்த இடம் குறித்து 20 வருடமாக கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு, நடந்து வந்தது.

அந்த இடம் கோர்ட்டு தீர்ப்புப்படிதான் எங்களுக்கு சொந்தமானது. யாரையும் மிரட்டிப் பெறவில்லை.

### காட்டு இலாகா மரங்கள்

டான்-இந்தியா நிறுவனத்தில் எனது சம்பந்தி டைரக்டராக இருப்பதால், காட்டு இலாகா மரங்களை குறைந்த விலையில் கொடுத்ததாகக் கூறி உள்ளார். எனது சம்பந்தி நான் மந்திரி ஆவதற்கு முன்னாலேயே அந்த நிறுவனத்தில் உள்ள டைரக்டர்களில் ஒருவர். மேலும் 1978-ம் வருடம் தான் எனது மகளை திருமணம் முடித்துக் கொடுத்தோம்.

அவருக்காக எந்த சலுகையும் செய்யப்படவில்லை. அவர் எனது சம்பந்தி என்று இப்போதுதான் தெரிகிறதா?

### படம் எடுக்க பணம் வந்தது எப்படி?

சத்யா மூவிஸ், சத்திய ஜோதி மூவிஸ் மூலமாக பல கோடி ரூபாய் செலவு செய்து படம் எடுக்க பணம் எப்படி வந்தது என்றும் கேட்டு இருக்கிறார்.

சத்யா மூவிஸ் 1963-ல் தொடங்கப்பட்டது. 25 ஆண்டுகளாக படங்கள் எடுத்து வருகிறேன். சத்யா மூவிசுக்கு பணம் எப்படி வந்தது என்று புரட்சித் தலைவரிடம்தான் திருநாவுக்கரசு கேட்க வேண்டும்.

1977 தேர்தலில் சீட்டு கேட்பதற்காக அப்போது கொத்தவரங்காய் போல இருந்த திருநாவுக்கரசு சத்யா மூவீஸ் கம்பெனிக்கு வந்தார். அதன்பிறகு என் வீட்டுக்கு வந்து காத்துக் கிடந்தார். இதையெல்லாம் திருநாவுக்கரசு நினைக்க வேண்டும்.

### முதலீடு

திருநாவுக்கரசு பல படங்களுக்கு முதலீடு செய்து இருக்கிறார். அது எல்லாம் சொந்தப் பெயரில் அல்ல. பினாமி பெயரில்.

பல படங்களை வாங்கி விற்பனை செய்வதில் நஷ்டம். லட்சக்கணக்கான ரூபாய்களை இழந்து இருக்கிறார்.

திருச்சியில் கூட அவரது பினாமி பெயரில் பட விநியோக கம்பெனி இருக்கிறது. அதன் மூலம் பல லட்சங்களை இழந்து உள்ளார். அந்தப் பணம் எல்லாம் திருநாவுக்கரசுக்கு எப்படி வந்தது.

### வருமானவரி

எனது வீட்டில் 8 பேர் வருமானவரி கட்டுகிறார்கள். இவர் வீட்டில் எத்தனை பேர் வருமானவரி கட்டுகிறார்கள்? அதை வெளியே சொல்லட்டும் பார்க்கலாம்!

இப்போது பாவம் அவர் சாக்கடையில் நின்று கொண்டு உள்ளார். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

### மில்களை சொந்தமாக்கினார்

திருநாவுக்கரசு எத்தனையோ மில் அதிபர்களை விரட்டி விட்டு அவற்றையெல்லாம் தனக்கு சொந்தமாக்கிக் கொண்டார் என்பது போன்ற பல உண்மைகள் கோர்ட்டு விசாரணை மூலம் வெளி வரும். 10 ஆண்டுக்கு முன்பு அவர் எப்படி இருந்தார். இப்போது எப்படி இருக்கிறார் என்பதை அவர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு வீரப்பன் சொன்னார்.

---

ஹாம்பர்க், பிப். 11— பாலஸ்தீன மக்களுக்கு விடுதலைகிடைத்தால்இஸ்ராயீல் பயத்துக்குள்ளாக வேண்டியதில்லை என்று பாலஸ்தீன விடுதலைப் படை தலைவர் யாசின் அரஃபாத் கூறி இருக்கிறார்.

மேற்கு ஜெர்மனிலல் அவர் அளித்த பேட்டியில், பாலஸ்தீனப் பகுதியில் இருந்து இஸ்ராயீல் துருப்புதான் வெளியேற வேண்டும்.

சுதந்திரமாகத் தேர்தல் நடத்த வேண்டும். நாங்கள் தேர்தலில் நிற்போம். ஆட்சியை இஸ்ராயீல் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் பாதுகாப்புக்கு வேண்டுமானால் ஐ. நா. படைகளை நிறுத்திக் கொள்ளலாம் என்றார்.

---

**மத்திய மந்திரிசபை இன்று விரிவு படுத்தப்பட்டது. 13 புது மந்திரிகளை ராஜீவ்காந்தி நியமித்தார். தினேஷ்சிங், வோரா, துபே மூவரும் கேபினட் மந்திரிகள். இவர்களைத் தவிர 4 ராஜாங்க மந்திரிகள், 6 துணை மந்திரிகள் நியமிக்கப் பட்டனர்.**

**தில்லான், திருமதி. ராம்துலாரி சின்கா இருவரும் மந்திரி சபையில் இருந்து நீக்கப்பட்டனர். இவர்கள் கவர்னர் ஆகிறார்கள்.**

புதுடெல்லி, பிப். 14—

---

மாஸ்கோ, பிப். 9—

ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் ரஷ்யப் படைகள் மே 15-ந் தேதி முதல் வாபஸாகின்றன. மே 15-ந் தேதி முதல் 10 மாதத்திற்குள் படைகள் முழுவதும் வாபஸாகும் என்று ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் கோர்ப்பசேவ் அறிவித்து இருக்கிறார்.

## ராஜீவ் வரவேற்பு

கோர்ப்பசேவின் இந்த அறிவிப்பை இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி வரவேற்று இருக்கிறார்.

கோர்பசேவின் அறிவிப்பு ரஷ்யாவில் வெளியிடப்படுவதற்கு 10 மணி நேரம் முன்னதாக வே ராஜீவ் காந்திக்குத் தெரிவிக்கப்பட்டது.

ரஷ்ய வெளியுறவு 2வது அமைச்சர் வொரன்ட்சோவ் நேரில் வந்து ராஜீவ் காந்தியிடம் இது பற்றித் தெரிவித்தார்.

கோர்ப்பசேவின் இந்த அறிவிப்பை ராஜீவ் காந்தி மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அண்டை நாடான ஆப்கானிஸ்தான் சுதந்திரமான நடுநிலையான-அணிசேராத நாடாக விளங்கும் என்று ராஜீவ் காந்தி நம்பிக்கை தெரிவித்தார்.

---

சென்னை, பிப். 10—

தமிழ்நாட்டில் தேர்தல் எப்போது நடைபெறும் என்பது குறித்து இன்னும் ஒரு வாரத்தில் தெரியும் என்று கவர்னரின் ஆலோசகர் எஸ். எஸ். சித்து கூறினார். தேர்தல் பணிகளைத் துவக்க டெல்லியில் இருந்து தேர்தல் அதிகாரி ஒருவரும் சென்னை வந்துள்ளார்.

www.tamilarangam.net

### மாலையில் மவுனம்; இரவில் நடு நிலை; காலையில் எதிர்ப்பா

# நான் காங்கிரஸ்காரனல்ல; தமிழன்

## விலகலை விளக்கி சிவாஜி கணேசன் அறிக்கை

சென்னை, ஜன. 31-

ஜானகி அம்மாள் அரசுக்கு காங்கிரஸ் மேலிடம் செய்த துரோகங்களை விளக்கி-காங்கிரசிற்கு முழுக்குப் போட்ட சிவாஜி கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சில ஆண்டுகளுக்கு முன் எம். ஜி. ஆர். உயிரோடு இருந்தபோது, அவருடன் கூட்டு சேர்ந்து தேர்தலை நடத்தச் சொன்னார்கள். எம். ஜி: ஆர். பெயரைக் கூறி குறிப்பாக அவர் நேசித்த தாய்குலத்திடம் நாம் ஓட்டுப் பெற்றோம். இதை நாம் மறந்துவிடக்கூடாது. மறந்தால், அவர்கள் நமக்கு நினைவுபடுத்துவார்கள்.

என தருமை அண்ணன் எம். ஜி. ஆர். அவர்கள் காங்கிரஸ் கருத்தே தன்னுடைய கருத்தாக ஏற்று காங்கிரசுக்கு உறுதுணையாக இருந்தாரே... காங்கிரசே அதை மறுத்தாலும், அவரது ரத்தத்தின் ரத்தங்கள் மறப்பார்களா? ஏழை, எளியோர்களுக்கு வாழ்வளிக்கும் திட்டங்கள் முதல்- இலங்கை ஒப்பந்தம் வரை பிரதமருக்கு தோளோடு தோள் கொடுத்து ஒத்துழைத்து தமிழகத்துக்கும், பிரதமருக்கும் ரத்தமும் சதையுமான நெருக்கத்தைஏற்படுத்திக் கொடுத்து, எப்படியெல்லாம் பிரதமரை அண்ணன் எம். ஜி. ஆர். உள்ளத்தினாலும், தன் செயலாலும் பாராட்டினார் என்பது நமக்கு தெரியும். பிரதமரே அருமை அண்ணன் எம். ஜி. ஆரை இன்று அவர் மீளாத்துயில் கொண்டுள்ள அதே வங்கக் கடல் ஓரம் நம் அனைவர் முன்பும் புகழ்ந்து பேசினாரே... இவையெல்லாம் நாம்எம். ஜி. ஆருக்கு கிடைத்த பாராட்டாக மட்டுமா நினைத்தோம்? அவரால்-அவரது நல்லுறவால் தமிழகத்துக்கே பாரதப்பிரதமரால் கிடைத்த நற்சான்றிதழாக அல்லவா நினைத்தோம்?

**சொந்த கட்சி விவகாரம்**

ஆண்டவன், தமிழகத்தை ஆண்டவனை தன்னிடம் அழைத்த போது ஜனாதிபதியும், பாரதப் பிரதமரும், மற்ற தலைவர்களும் வந்து கலந்து கொண்டு, அருமை அண்ணனை மரணத்திலும் கவுரவித்ததை இன்னும் நாம் மறக்கவில்லை.

தகப்பன் தலைசாய்த்தால் பிள்ளைகள் சண்டையிடுவர். தலைவன் மறைந்தால், வாரிசுகள் பலப்பரீட்சை செய்து கொள்வர். இது வீட்டிலும், நாட்டிலும் நடப்பதுதான். அருமை அண்ணன் தனக்குப் பிறகு நடக்கக் கூடாது என நினைத்தது, நடக்கிறது. நடப்பது உள்பூசல்; நீரடித்து நீர் விலகாது; அது அவர்கள் சொந்த கட்சி விவகாரம்.

அமைதியாக ஒரு முடிவு தெரியும் வரை மவுனம் சாதிப்பதே அரசியல் மரபு. ஒரு ஆளுங்கட்சி, அடிமட்ட மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற கட்சி, அதன் தனிப் பெரும்தலைவன் மரணத்தால் அனுதாபத்திற்குரிய இந்த நிலையில், அனுபவமிக்க அரசியல் வித்தகர்களான நாம்- அரசியல் சாசனத்தை அரிஓம் எனஆரம்பித்து வைத்த நாம்- ''சத்யமேவ ஜெயதே'' என்ற புனித வரிகளை பொன்வரிகளாகக் கொண்ட நாம்-ஜனநாயக மரபுப்படி-அரசியல் முதிர்ச்சிப்படி என்ன செய்ய வேண்டும்?...எப்படி நடந்து கொள்ள வேண்டும்?...என்றெல்லாம் இப்போதுள்ள நிலைமையில் நம் நிலை என்னவென்று காங்கிரஸ் கட்சி பலருடைய அபிப்பிராயத்தைக் கேட்டபோது என்னையும் கேட்டது.

**தவறாக பயன்படுத்தினால்...**

என் எண்ணத்தையும் சொன்னேன். அருமை அண்ணன் எம்.ஜி.ஆர். மறைவால் அவர் எண்ணத்துக்கு மாறாக கட்சி இரண்டாக பிளந்திருக்கிறது. அந்த பிளவு தாற்காலிகமா, நிரந்தரமா, எவர் வெல்வார் என்பதை இப்போதைக்கு நாம் தலையிடாமல், தனித்து வெளியே இருந்து பார்த்து அறியவேண்டிய தராசு முள் போன்ற நிலையில் இருக்கிறோம். இருவரில் யாருக்கு பலமிருக்கிறதோ, அவர்கள் வந்துவிட்டுப் போகட்டும் என்றேன், நாம் நடுநிலை வகிக்காமல் தவறாக நமக்குள்ள நிலையை பயன்படுத்தினால், தமிழக மக்களிடம் இருந்து காங்கிரஸ்அந்நியத்தன்மை பெற்றுவிடும். திரு. எம்.ஜி.ஆர். தமிழக மக்களுக்கு நம்முடன் உருவாக்கி வைத்துள்ள தோழமைகெட்டு விடும்

அதனால் தமிழக மக்களின் கசப்பை- வெறுப்பை- காங்கிரசிடம் இருந்து விலகிப்போகும் மனப்பாங்கை சந்திக்கவேண்டி வரும் என்ற அச்சகத்தையும் கூறினேன். எல்லாவற்றையும்விட மிக முக்கியமான விஷயம் தமிழகமே அருமை அண்ணனை இழந்து வேதனையில் ஆழ்ந்துள்ள இந்த சமயத்தில், காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கை சரியான முறையில் இல்லாவிட்டால், இனி தமிழகத்தில் காங்கிரஸ் மக்கள் முன் செல்வது கடினம் என்ற கருத்தை சொன்னேன்.

**தடுமாற்றம் ஏன்?**

'நீங்கள்சொன்னகருத்துசரி, அப்படியே ஆகட்டும்!' என்றதே மேலிடம்! ''ஆகட்டும், பார்க்கலாம்!'' என்பார் பெருந்தலைவர் காமராஜர். அப்படியே செய்வார். ஆனால் 'அப்படியே ஆகட்டும்' என்றவர்கள், எப்படியோ ஆனார்கள்!

கடைசி வரை நடுநிலை வகிப்பதாகக்கூறி நம்பவைத்த காங்கிரஸ் கட்சி ஏன், இப்படி தடுமாறியதோ தெரியவில்லை. ''கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக்கொடுத்த வார்த்தையும் இப்படி ஒரு தவறான பாதையைக் காட்டிவிட்டதா?'' தவறானசெயலுக்கு, தவறான முடிவு வந்துவிடுமே...

நம் தமிழகத்தில் நடமாடும் சில முக்கியமான காங்கிரஸ் பிரமுகர்களால்- அவர்கள் தூண்டுதலால்- அவர்கள் சுயநலத்தால்- நிலை-நடுநிலை...... மாற்றப்பட்டிருக்கிறது. இதுஜனநாயக மரபுக்கு உகந்ததா? இது நம் அரசியல் பாரம்பரியத்துக்கே களங்கம் அல்லவா? வந்தாரை வாழவைக்கும் தமிழகத்தில் ''நம்பியவரை நட்டாற்றில் விடுவது'' காங்கிரசின் சரித்திரத்திற்கே தலைக்குனிவுஅல்லவா? இதனால் அரசியல் அந்தஸ்தை இழந்துவிடுவோம் என்ற அச்சமே வரவில்லையா?

உயிரோடிருந்த கடைசி காலத்தில்... உடலில் மூச்சு ஓட்டிக்கொண்டிருந்த வரை காங்கிரஸ் கட்சி ''வெட்டிக் கொண்டு வா'' என்றால், கட்டிக்கொண்டு - வந்தவர், எம்.ஜி.ஆர். தான் உடல் நலமில்லாதபோது தன்னை நலம் விசாரித்து பிரதமர் எழுதிய கடிதத்தை ''பிரேம்'' போட்டு தன் படுக்கை அறையில் தலைமாட்டில் வைத்திருந்ததை பார்த்து கண்கலங்கிய சேதியை படித்து நாமும் கண் கலங்கினோமே...!

**முதுகில் கத்திக் குத்து**

என தருமை அண்ண எம்.ஜி.ஆர். மரணத்திற்கு பின், உலகமே வியக்க பண்டித நேருவுக்கு கிடைத்த அந்த ''பாரத ரத்னா'' விருதை தந்தீர்கள். அதைக் கொடுத்து அவர் மதிப்பை உயர்த்தி பெரியோர்கள்... அதற்கு சில மணிநேரத்துக்குள்ளே முதுகில் கத்தியால் குத்துவது போல் இப்படி செய்துவிட்டீர்களே... அவர் மனைவி ஜானகி அம்மாள் ''தன் கணவர் வழியில் பணி தொடர்வேன்'' என கூறி ஆதரவு கேட்டு டில்லி வந்தபோதே நிர்த்தாட்சண்யமாக மறுத்திருக்கலாம். நீங்கள் ஆள்வதில் விருப்பமில்லை என்று சொல்லிஇருக்கலாம். அப்போது எதுவுமே சொல்லவில்லை. மாலையில் மவுனம். இரவு வரை ''நடுநிலை''! காலையில் கண்விழித்ததும், எதிராக வாக்களிக்க ஏவுகணைகள்! என்னதான்அரசியல் என்றாலும், இது போன்ற நம்பிக்கை துரோக செயலை தர்மம் மன்னிக்காது.

**மாபெரும் கொடுமை**

எம். ஜி. ஆர். செத்ததும் தர்மம் செத்து விட்டதாக கருதி விட்டார்களா? அவர் செய்ததர்மம் தமிழகத்தின்ஒவ்வொருவர் மனத்திலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுகள்... நடந்திருப்பது அரசியல் சரித்திரத்திற்கே முரணான விஷயம்; மனித குலம் ஏற்க முடியாத மாபெரும் கொடுமை!

இனி நான் காங்கிரஸ்காரனாக கட்சியில் இல்லாவிட்டாலும், மற்ற மீதியுள்ள தேசிய தொண்டர்களாவது தயவு செய்து அவ்வப்போது நாட்டில் கட்சிக்கும்- கட்சியால் நாட்டுக்கும் ஏற்படும் தவறுகளை ஆட்சிக்கு - குறிப்பாக தமிழகத்தில் எங்கே என்ன நடக்கிறதென்றே தெரியாத தலைநகரத்துக்கு டெல்லி, மேலிடத்துக்கு விரிவாக விரைவாக எடுத்துச் சொல்லுங்கள்.

கால் நூற்றாண்டுக்கும் மேலாக காங்கிரஸ் கட்சிக்காக நான் ஆற்றிய தொண்டுகள் அத்தனையும் உங்களுக்கே சமர்ப்பணம்.

விட்டுச்செல்கிறேன்; விடை பெறுகிறேன். இனி நான் காங்கிரஸ்காரனல்ல. இந்தியன், அதிலும் ''தமிழன்''

இவ்வாறு சிவாஜி கணேசன் கூறியுள்ளார்,

www.tamilarangam.net

# சுயநலமிகள் சொல்படி ஆடுகிறார், ராஜீவ்!

## சுயமாக செயல்படத்தெரியாது.

## சிவாஜிகணேசன் பேட்டி!!

சென்னை, பிப். 14— சுயமாக செயல்படத் தெரியாத சுயநலமிகள் சொல்படி ஆடுகிறார், ராஜீவ் என்று சிவாஜி கணேசன் குற்றம் சாட்டினார்.

தமிழக முன்னேற்ற முன்னணி கட்சித் தலைவர் சிவாஜி கணேசன் சென்னையில் நிருபருக்கு பேட்டி அளித்தார்.

அதன் விவரம் வருமாறு:-

### புதிய விழிப்புணர்ச்சி

கேள்வி: ஏற்கனவே தமிழ்நாட்டில் பல கட்சிகள் இருக்கின்றனவே? உங்கள் புது கட்சிக்கு (த.மு.மு.) செல்வாக்கு எப்படி இருக்கும்?

பதில்: தமிழக மக்களுக்கு நான் ஒன்றும் புதியவன் இல்லை. ராஜீவ்காந்தியை விட தமிழக மக்களுக்கு என்னை நன்றாக தெரியும். எனது புதிய கட்சியான தமிழக முன்னேற்ற முன்னணி ஒரு கட்சியாக வளராவிட்டால் எனக்கு கவலை இல்லை. தமிழர்களிடம் ஒரு புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தும். அதுவே போதும்.

### தில்லுமுல்லு அரசியல் எனக்கு தெரியாது

கேள்வி: ஜானகி அரசுக்கு எதிராக ஓட்டு போட மேலிடம் முடிவு செய்ததால் தான் வெளியேறியதாக நீங்கள் கூறுவது வியப்பாக உள்ளதே! வீரப்பனுக்கும் உங்களுக்கும் இருந்த ரகசிய ஒப்பந்தத்தின் பேரில் தான் நீங்கள் வெளியேறியதாக பேசிக் கொள்கிறார்களே?

பதில்: என்னை நம்புங்கள் தன்மானம் உள்ள எவனும் அந்த சமயத்தில் அப்படிப்பட்ட முடிவைத் தான் எடுத்திருப்பான். நான் பொய் சொல்லவில்லை. அரசியல் தில்லுமுல்லு எல்லாம் எனக்கு வராது. காமராஜ் சொல்லி காங்கிரசில் சேர்ந்த நாளில் இருந்தே தீவிர கட்சிப்பணி ஆற்றி வந்தவன் நான். உண்மையும் தியாகமும் தான் அடிப்படை கொள்கை

### நம்பிக்கை துரோகம்

கேள்வி: உங்கள் வாதம் மக்கள் மத்தியில் எடுபடுமா? ஜானகிக்கு எந்த சமயத்திலும் ஆதரவு தருவதாக காங் வெளிப்படையாக சொல்லவில்லையே?

பதில்: நம்பியவனை கைவிடுவதை விட பெரிய துரோகம் எதுவுமில்லை. ஜானகி இதுவரை அரசியலில் பங்கேற்றதில்லை. புதியவர். பதவி இறங்கி காங்கிரசுக்கு வழி விடுமாறு கேட்டிருந்தால் நிச்சயம் அவர் வழிவிட்டு இருப்பார். அது நேர்மையான நடவடிக்கையாக இருந்திருக்கும். 97 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு பெரிதா? 30 பெரிதா?, 97 தான் பெரிது என்பதை எவனும் ஒப்புக் கொள்வான்.

அப்படிப்பட்ட ஆதரவுடன் இருந்த ஜானகியை கவிழ்க்க கடைசி நிமிடத்தில் காங்கிரஸ் எடுத்த முடிவு தான் சட்டசபையில் நடந்த வன்முறை சம்பவங்களுக்கு முக்கிய காரணம்.

### நேர்மையானவனுக்கு காங்கிரசில் இடமில்லை

கேள்வி: கடைசி நிமிடத்தில் முடிவு எடுப்பது காங்கிரசுக்கு புதிதல்ல. இதுவரை எடுத்த முடிவுக்கு உங்கள் எம்.எல்.ஏ.க்களும் கட்டுப்பட்டு இருந்திருக்கின்றனர். தவிர சட்டசபையில் மெஜாரிட்டி உள்ளது என்பதால் மட்டுமே ஒரு வரை அரசியல் வாரிசாக ஏற்க முடியுமா? அதை மக்கள் அல்லவா முடிவு செய்ய வேண்டும்?

பதில்: முன்பை விட தற்போதைய நிலை முற்றிலும் மாறுபட்டது. சந்தர்ப்பவாதிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பை வைத்து கடைசி நிமிடத்தில் முடிவை மாற்றியது ஜனநாயகத்தில் ஏற்கக் கூடியதல்ல.

அண்ணன் எம்.ஜி.ஆர். இறந்த பின் தனிப்பட்ட வருத்தத்தை விட கட்சி தான் முக்கியமாகப்பட்டது. காங்கிரஸ் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி டெல்லிக்கு சொன்னேன். ஒப்புக் கொண்டவர்கள் பின்னர் காலை வாரி விட்டனர். எனக்கு பணம் வேண்டாம், பிரபலம் வேண்டாம், பதவி வேண்டாம். அரசியலில் நாகரீகம் வேண்டும் என்று தான் விரும்புகிறேன்.

நேர்மையானவனுக்கு காங்கிரசில் இடமில்லை. காங்கிரஸ் எடுத்த முடிவால் அக்கட்சிக்கும் நேர்மையான எவர் மனதிலும் இடம் இருக்கும் தான் போகிறோம்.

கேள்வி: வி.பி. சிங்கின் கட்சியில் சேர விரும்புவீர்களா?

பதில்: அப்படி எதுவும் இல்லை. வி.பி. சிங்குக்கு எதிரானவன் அல்ல நான். அவரது நேர்மையில் எனக்கு துளிக் கூட சந்தேகம் இல்லை. கவுரவமான மனிதர். தமிழனின் நலன்களை காக்க ஒரு தேசிய சக்தியாக எனது புதிய கட்சி இயங்கும்.

### சுயமாக முடிவு எடுக்க தெரியாதவர், ராஜீவ்

கேள்வி: தமிழர் நலனில் ராஜீவ் அக்கறை காட்ட மாட்டார் என்று நினைக்கிறீர்களா?

பதில்: அப்படி சொல்ல மாட்டேன். ராஜீவ்காந்தியை சில சுய நல சக்திகள் தவறான பாதையில் அழைத்துச் செல்கின்றனர். அவரது தாய் இந்திரா போல சுயமாக முடிவு எடுக்க தெரியாதவர் ராஜீவ். சுயநலமிகள் சொல்லின் படியே முடிவுகள் எடுக்கப்படுகிறது.

கேள்வி: சுயநல சக்திகள் என்பது மூப்பனாரையா?

பதில்: யாரையும் பேர் சொல்ல விரும்பவில்லை. இதில் ஒரு பெரிய லிஸ்டே உள்ளது.

### என் முடிவில் இனி மாற்றம் இல்லை

கேள்வி: தமிழக காங். தலைவர் பதவி அளிப்பதாக கூறினால் மீண்டும் காங்கிரசில் சேர்ந்து விடுவீர்களா?

பதில்: சமரசம் என்பதில் எனக்கு பெரும் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. பலமுறை நான் சமரசத்துக்கு பின் அவமானப்படுத்தப் பட்டு உள்ளேன். மீண்டும் சமரசம் செய்து கொண்டால் என் பிள்ளைகள் என்னை தலைவனாக ஏற்க மாட்டார்கள். என்னை பரிகசித்து சிரிப்பார்கள். நான் எடுத்த முடிவு இனி மாற்றத்தக்கதல்ல. காமராஜ், பெரியார், அண்ணா, ராஜாஜி காட்டிய பாதையில் சென்று அவர்களது கொள்கைகளை காப்பேன்.

இவ்வாறு சிவாஜி கணேசன் கூறினார்.

### பட்டுப்பூச்சி ரசக்கெட்

கப்பல்களைத் தாக்கக்கூடிய 'பட்டுப்பூச்சி' (சில்க்வார்ம்) ஏவுகணைகளைப் பயன்படுத்தி ஈரான் வளைகுடாப்பகுதியில் சரக்குக் கப்பல்களை அமெரிக்கா தாக்கியது. இந்த ஏவுகணைகளை அமெரிக்காவிற்கு சீனா தந்தது'

அமெரிக்கா ஆயுதத் திருவோடு ஏந்தும் நாடுதானா? ப்பூ;

### இந்தியாவில்...

இந்தியாவின் நாற்பெரு நகர்களான டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னையில் போதை மருந்து பயன்படுத்துவது பெருகிவிட்டது. இந்தியாவில் கள்ளத்தனமாகப்போதை மருந்துத் தயாரிப்பு, போதை மருந்துப் பயன்பாடுஅதிகரித்து விட்டதாக சர்வதேச போதை மருந்துக் கட்டுப்பாடு வாரியம் தெரிவித்தது.

### புறக்கணிப்பு

1917-ம் ஆண்டு பாதையாத்திரையாக பீகார் மாநிலத்தின் வடபகுதியான சம்பிரான் மாவட்டத்துப் 'பிதிகர்வா' கிராமம் போய் ஒரு ஆசிரமம் அமைத்தார் காந்தி.

காந்தி சீடர்களுக்கு இந்த ஆசிரமம் வவ்வால்-ஆந்தை தங்குமிடமாகப் பாழடைந்தது இப்போதுதான் தெரிந்திருக்கிறது.

மாநில இந்திரா காங்கிரஸ் ஓட்டடை தட்டப் புறப்பட்டுள்ளது.

### காய்ச்சல்

முன்னாள் பிரதமர் மொரார்ஜிக்கு மலேரியாக் காய்ச்சல்.

சிறுநீர் வைத்தியம் மலேரியாக் காய்ச்சலிடம் வித்தை காட்ட முடியாது போலிருக்கிறது.

### புதிய சட்டம்

புகை பிடித்தவாறு வாகனம் ஓட்டும் ஓட்டுநர்களுக்கு ரூபாய் பத்தாயிரம் அபராதமும, மூன்று மாதச் சிறைத் தண்டனையும் தர வகை செய்யும் சட்டம் கிரீஸ் நாட்டில் போடப்பட்டுள்ளது. சட்டம் துருப்பிடித்து 'க்ரீஸ்' போட வேண்டிய நிலை அங்கில்லை. இச்சட்டத்தின் கீழ் 50 டிரைவர்கள் கம்பி எண்ணுகின்றனர்.

### மக்கர ரூபா கம்மி

விஸ்கோஸ் அல்லது நைலான் இழைகளுடன் பருத்தி இழை கலந்த சேலைகள் மற்றும் துணி வகைகள் சதுரமீட்டருக்கு 75 காசு ஆயத்தீர்வையை டில்லிஅரசு குறைத்தது. இதுவரை இருந்த வரி ஒன்றேகால் ரூபாய்.

எப்படித்தான் குறைக்க மனம் வந்ததோ டில்லி ஆட்சியினர்க்கு?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பரபரப்பான அரசியலில் சேலம்!

ஜனவரி-18

எம்.ஜி.ஆர். உயிருடன் இருந்த காலத்தில் 'பதுங்கு குழிகளில்' இருந்து கொண்டு ஜெயலலிதாவிற்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் —

எம்.ஜி.ஆர். விரும்பமாட்டார் என்று தெரிந்து கொண்டு தைரியமாக ஜெயலலிதாவை ஆதரித்தவர்கள் சேலம் மாவட்டத்தில்தான் அதிகம்!

'84ம் ஆண்டிலேயே ப.உ. சண்முகத்தை பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து நீக்கி விட்டோம். ஜெயலலிதாதான் அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர்' என்று அன்றே அறிவித்தவர்களும் சேலம் மாவட்டத்துக் காரர்கள்தான்.

இந்த அறிவிப்பை அன்று வெளியிட்டதற்காக கட்சியில் இருந்து முன்னாள் எம்.எல்.ஏ. ராசிபுரம் துரையை நீக்கினார் எம்.ஜி.ஆர்.!

சேலம் மாவட்டச் செயலாளர் கண்ணன் கட்சியில் இருந்தும், மாவட்டச் செயலாளர் பொறுப்பில் இருந்தும் நீக்கப்பட்டதற்குகூட காரணம், சாவி வார இதழ் பேட்டியில் 'எம்.ஜி.ஆருக்குப் பிறகு எனக்கு தலைவி ஜெயலலிதாதான்' என்று அறிவித்ததே ஆகும்!

இந்த பேட்டிக்குப் பிறகு கண்ணனை எம்.ஜி.ஆர். தோட்டத்திற்கு வரவழைத்து, மன்னிப்பு எழுதிக் கொடுக்கக் கேட்டார். எம்.ஜி.ஆரிடம் தன் நிலையை நேரில் விளக்கி பேட்டிக்கு மறுப்பு தெரிவிக்க இயலாது என்று எம்.ஜி.ஆரிடம் தோட்டத்தில் கூறிவிட்டு 'முழு தாய்' தோட்டத்தில் திரும்பிய ஒரே நபரும் கண்ணனாகதான் இருக்க வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் அன்றைய சம்பவங்களை கோடிட்டு காட்டாமல் எப்படி முடியும்? இன்றைய புதிய வரலாறுக்குக்கூட-ஜெயலலிதா அலை தமிழகமெங்கும் பரவக் காரணம்கூட - சேலம் மாவட்டம்தான்! ராசிபுரம் எம்.எல்.ஏ. ராமலிங்கம் டிச.25ம் தேதி ராஜாஜி ஹாலில் ஜெயலலிதாவை தாக்க முற்பட்ட தன் விளைவும் அதன் எதிரொலியும் அனைவரும் அறிந்ததே!

ராசிபுரம், டாக்டர் ராமலிங்கத்தின் சட்டமன்றத் தொகுதி. அவரது சொந்த ஊரும் ராசிபுரம்தான். பரபரப்பான இந்த நேரத்தில் ராசிபுரத்தில் ஜெயலலிதா ஆதரவாளர்கள் கூடி முடிவெடுக்கிறார்கள் என்று தகவல் கிடைத்தது. நமது நிருபரும் அங்கு சென்றார்.

கிட்டத்தட்ட இரண்டாயிரம் அ.தி.மு.க. ஊழியர்கள் ஜெயலலிதாவிற்கு ஆதரவாக ராசிபுரத்தில் திரண்டிருந்தனர்! அ.தி.மு.க. ஊழியர் கூட்டம் மாவட்ட துணைச் செயலாளர் எம்.எப். ரகுமான் தலைமையில் ராசிபுரத்தில் கூடியது. முன்னாள் எம்.எல்.ஏ. துரை, டாக்டர் கந்தசாமி, அவைத்தலைவர் பழநியப்பன், சிவானந்தம், லட்சுமணன் ஆகியோர் பரபரப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்தனர்.

ஊழியர் கூட்டம் நடக்கும் நேரத்தில் திடீரென்று ராசிபுரம் எம்.



எல்.ஏ. ராமலிங்கம் ஆதரவாளர்கள் சுமார் 40 பேர் ஜெயலலிதா ஆதரவாளர்கள் கூடிய இடத்திற்கு கோஷங்களுடன் வந்தனர்.

'அ.தி.மு.க. கூட்டம் என்று அறிவித்து நடத்துகிறீர்கள். எனவே நாங்களும் உள்ளே வருவோம்' என ராமலிங்கம் ஆதரவாளர்கள் கூறினர்.

'சரி. உள்ளே வாருங்கள்' என்று ஜெயலலிதா ஆதரவாளர்கள் உள்ளே அழைத்த பொழுது திடீரென்று இரண்டு அணியும் மோதத் தொடங்கிவிட்டது. வெட்டரிவாள், கம்புகளுடன் போலீசார் எதிரே ஒருவரை ஒருவர் தாக்க முயற்சிகளும் நடந்துவிட்டன.

ராமலிங்கம் ஆதரவாளர்கள் ஓட, அவர்களைத் துரத்திக் கொண்டு ஜெயலலிதா ஆதரவாளர்கள் ஓட, போலீசார் இரு தரப்பினரையும் கைது செய்துவிட்டனர்!

சேலம் விஜயராகவாச்சாரியார் திருமண மண்டபத்தில் ஜானகி ஆதரவாளர்கள் அவர்களது தெற்கு மாவட்ட செயலாளர் செல்வராசு தலைமையில் கூடினர். இந்தக் கூட்டத்திற்கு மிகுந்த போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தது. ராமலிங்கத்திற்கு மட்டும் தனியாக சப்- இன்ஸ்பெக்டர் ஒருவர். தலைமையில் ஐந்து காவலர்கள் பாதுகாப்பு இருந்தது!

15 நிமிட நேரம் நடந்த இந்தக் கூட்டத்திற்கு நிருபர்கள் அனுமதிக்கப்படவில்லை. கூட்டம் முடிந்த பிறகு முடிவுகளை மட்டும் நிருபர்களுக்கு அறிவித்த காரணத்தால் சேலம் மாவட்டத்தில் ஜானகி தரப்பு பலம் என்ன என்று தெரியவில்லை!

சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் ராசாமணியிடம் உங்கள் பலம் என்ன என்று கேட்டதற்கு 'கண்ணன் சென்னையில்தான் கூட்டம் நடத்துவார். அவர்கள் பலம் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்' என்று கூறினார்.

சேலம் மாவட்ட அ.தி.மு.க. பெயரில் சேலம் நாளிதழ்களிலும், அண்ணா நாளிதழிலும் பல அ.தி.மு.க.வினர் பெயரை போட்டிருந்தார்கள். அவர்களில் பலர் கூட்டம் நடந்த இடத்திலேயே இல்லை!

எனவே விளம்பரத்தில் பெயர் போடப்பட்டிருந்த சேலம் நகரச் செயலாளர் அங்கமுத்து ஜானகி தரப்பில் ஒன்று இருக்கவே, அங்கமுத்துவை நேரில் விசாரித்தோம்.

'பெயரை யார் வேண்டுமானாலும் போடலாம். அச்சடிக்கலாம் ஆனால் நாங்கள் எல்லாம் ஜெயலலிதா தலைமையைத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். விளம்பரமே பொய்' என்றார் அங்கமுத்து!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரம்ப காலம் முதலே ஜெயலலிதாவின் தீவிர ஆதரவாளர் பாக்கூர் சுப்பிரமணியன். இவர் செங்கல்பட்டு மாவட்ட அ.தி.மு.க. அவைத்தலைவராக உள்ளார். செங்கல்பட்டு மாவட்ட அ.திமு.க.வில் ஜெயலலிதா அணியில் ஆதரவு குறித்து அவரைக் கேட்டோம். அவர் சொன்னார்.

"புரட்சித் தலைவர் அவர்கள் நோய்வாய்ப்பட்ட நாள் முதல், செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு சுயநலவாதக் கும்பல் ஆர்.எம். வீரப்பன் தயவால் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகி, சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்ள ஆரம்பித்தது. தொண்டர்களை மதிக்காமல் தங்கள் பைகளை நிரப்புவதிலே கவனம் செலுத்தியது. அவர்களுக்குத் தலைவர் புரட்சித் தலைவரால் அமைச்சர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்ட ஆனூர் ஜெகதீசன் வேறு துணையாக இருந்தார்.


அடிமட்டத் தொண்டர்கள் புரட்சித் தலைவரிடம் முறையிடப் புகலிடம் தேடி அலைந்தார்கள். அப்போது அவர்களின் சரணாலயமாக இருந்தவர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள்.

வீரப்பனை அமைச்சர் பதவியிலிருந்து புரட்சித் தலைவர் அவர்கள் நீக்கியவுடன் ஆனூர் ஜெகதீசன், ஜெகத்ரட்சகன், ஆர்.எஸ. முனிரத்தினம் போன்றவர்கள் அவர் வீட்டுப் பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை. தொலைபேசி மணி அடித்தால் 'இல்லை' என்ற பதிலைச் சொல்லச் சொன்னார்கள். அற்ற குளத்து அறுநீர் பறவைகள் என்பதை நிரூபித்தவர்கள்.

[illegible] இம்மேதைகள் நினைப்பிலே மண் விழுந்தது. புரட்சித்தலைவி அவர்களை மிருக வைத்தியன் கே.பி. இராமலிங்கம் நடத்திய விதத்தைக் கண்டு இம்மாவட்டமே கொதித்தெழுந்தது.

செயற்குழுக் கூட்டத்திற்குப் புரட்சித்தலைவி அவர்கள் சென்று போலீசாரின் அராஜகப் போக்கிற்கு ஆளான போது செங்கை மாவட்டத் தோழர்கள் பலபேர் இரத்தம் சிந்தினர். செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் உக்கம்சந்த் அவர்களும் புரட்சித்தலைவியின் தீவிர ஆதரவாளர். எங்கள் அணியில் இன்றைக்கு செங்கல்பட்டு மாவட்டத்திலேயே செயல்படுபவர்கள் முனு ஆதி, அடைக்கலம், உஷா வரதன் என்னும் செ.து. வரதராசன் போன்றோர். இதில் ஆனூர் ஜெகதீசனின் நடவடிக்கைகளைத் திறமையாகச் சமாளித்து ஜெயலலிதா அணியை செங்கை தொகுதியிலேயே வலுப்படுத்தியவர் செங்கை நகரச் செயலாளர் உஷா வரதன்.

செங்கை மாவட்டம் வீரப்பன் கோட்டை என்று சொல்லிக் கொண்டவர்கள் முகத்தில் கரியைப் பூசிவிட்டார்கள் இம் மாவட்ட ஒன்றியச் செயலாளர்கள். மொத்தம் 26 ஊராட்சி ஒன்றியச் செயலாளர்களில் பதினாறு பேர் எங்கள் பொதுக் குழுவில் கலந்துகொண்டு தங்களது ஒட்டுமொத்தமான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இதைக் கண்டு கதி கலங்கிப் போய் எங்கள் அணியில் இருந்த புழல், குன்றத்தூர் ஒன்றியச் செயலாளர்களைக் கடத்திக்கொண்டு சென்று கோட்டில் சந்திப்பதாக அறிக்கைகளை விட்டார்கள்.



# நாங்கள் என்றுமே ஜெயலலிதா பக்கம்தான்

ஜெயலலிதா தரப்பு மிக உற்சாகமாக இருக்கிறது. அரசியல் எதிர்காலம் (தமிழ்நாட்டில்) நன்றாக இருக்கும் என்பதில் அவர்கள் திட்டவட்டமாக இருக்கிறார்கள். ஜெயலலிதா வீட்டிற்கு போகின்றவர்களை, கீழே இருக்கும் அதிகார நந்திகள் மட்டும் தடுக்காமல் இருந்தால் ஒரு புதிய அணி ஜெயலலிதாவிடம் வந்து சேர்ந்திருக்கும்! எம்.ஜி.ஆர். வழியை ஜெயலலிதா பின்பற்றட்டும். ஜெயலலிதாவை எம்.ஜி.ஆராக மாற்ற வேண்டாம் என்று கவலைப்படுகிறவர்களும் இருக்கிறார்கள்!

செங்கை மாவட்டப் பொதுக்குழு உறுப்பினர்கள் மூன்றில் இரண்டு பங்கு ஜெயலலிதாவிற்குத் தங்கள் ஆதரவைப் பொதுக்குழுவில் தந்துள்ளதிலிருந்து, இம்மாவட்டம் யார் பக்கம் அணிவகுத்து நிற்கின்றது என்று தெரிந்து கொள்ளலாம்.

சட்டமன்ற உறுப்பினர்களிலும் இரண்டு பேர் நல்ல முடிவினை எடுத்து எங்கள் அணிக்கித் தங்கள் ஆதரவை நல்கியுள்ளனர்.

செங்கை மாவட்டத்திலே நகரங்கள், ஒன்றியங்கள், கிராமங்கள் அனைத்திலும் ஊழியர் கூட்டங்கள் கூட்டப்பட்டு ஜெயலலிதா அவர்கள் பொதுச் செயலாளராகப் பணியாற்ற வேண்டுமெனத் தங்கள் ஆதரவினைத் தந்துள்ளனர்.

காஞ்சி பெரியவரின் அருளாசியும் இந்த அணிக்கு உள்ளது என்று காஞ்சி நகர் தொண்டர்கள் பெருமிதத்தோடு சொல்லிக் கொள்கிறார்கள்.

"துள்ளி வருகுது வேல்படை!
தூர விலகி நில்"
என்பதற்கு எங்கள் மாவட்டமே எடுத்துக்காட்டு."

## ஒரு ஏற்பாடு!

ஜெயலலிதா வீட்டில் டி.எம்.எச். 9999 என்ற பிரச்சார வேன் ஒன்று உள்ளது. சகல வசதிகளும் கொண்ட இதன் மதிப்பு இலட்சக் கணக்கில் இருக்கும். வண்டியின் ஆர்.சி. புக் ஜெயலலிதா பெயரில் இல்லை. ஜெயலலிதாவுக்கு வண்டியைத் தந்தது எம்.ஜி.ஆர். ஏற்கனவே எம்.ஜி.ஆர் தனது உயிலில் தனக்குச் சொந்தமான வண்டி, வாகனங்கள், ஆடு, மாடு, கோழி முதலிய எல்லாம் ஜானகிக்கே சொந்தம் என்று எழுதி வைத்து விட்டார். இதைப் பயன்படுத்திப் பிரச்சார வேனை ஜெயலலிதாவிடமிருந்து பறிக்க இப்போது ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

www.tamilarangam.net

# எம்.ஜி.ஆர். இடத்தை நிரப்புவேன்

## சிவாஜி கணேசன் அறிவிப்பு

சென்னை, பிப்.§11—
எம். ஜி. ஆர். விட்டுச் சென்ற இடத்தை நிரப்புவேன் என்று சிவாஜி கணேசன் கூறினார்.

'தமிழக முன்னேற்ற முன்னணி' என்ற புதிய கட்சியைத் தொடங்கி கொடி ஏற்றி வைத்து பேசுகையில், சிவாஜி கணேசன் கூறியதாவது :

கடந்த கால்நூற்றாண்டு காலமாக நாம் ஏணிப்படிகளாக இருந்தோம், யாரைப் பார்த்து கை காட்டினாலும் அவர்கள் ஒதியமரமாக இருந்தாலும், முருங்கை விளாறாக இருந்தாலும் உயிரைக் கொடுத்து உழைத்து உயரே ஏற்றி விட்டோம். ஆனால் அவர்கள் நம்முதுகிலே குத்தினார்கள். எத்தனையோ விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்தன. மன்ற மறவர்கள் ரத்த காயம் அடைந்தனர்.

எனக்கே எத்தனையோ முறை அவமானம் ஏற்பட்டது. அதை எல்லாம் தாங்கிக் கொண்டோம். ஆனால் அவர்கள் நம்மை அழித்தொழிப்பதையே தலையாய வேலை என்று கருதி செயல்பட்டார்கள். இதற்கு மேலும் இருந்தால் அவமானம் என்று எண்ணி அங்கிருந்து வெளியேறினோம்.

### கோடி வாங்கினேனா?

யாரிடமோ கோடிரூபாய் வாங்கி கட்சி ஆரம்பித்திருப்பதாகக் கூறுகிறார்களாம். 1926-ம்ஆண்டு ஈரோட்டுச் சிங்கம் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார். பின்னர் நேதாஜி, முத்துராமலிங்கத்தேவர், ராஜாஜி ஆகியோர் வெளியே சென்று தனிக்கட்சி கண்டனர்.

பெருந்தலைவர் காமராஜரையே டெல்லி பாதுஷாக்கள் வெளியேற்றினார்கள் இவர்கள் எல்லாம் கோடிகளை வாங்கிக் கொண்டா கட்சி ஆரம்பித்தார்கள்?

### சூன்யம்

தமிழக முதல்வராக இருந்த எம். ஜி. ஆர். மறைவால் இப்போது ஒரு சூன்யம் ஏற்பட்டுள்ளது. அந்தச் சூன்யத்தை நிரப்பி தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகப்பாடுபடவே நாம் புதுக்கட்சி தொடங்கியுள்ளோம்.

இவ்வாறு சிவாஜி கணேசன் பேசினார்.

### கொள்கை என்ன?

முன்னதாக தமிழக முன்னேற்ற முன்னணியின் கொள்கைகளை அவர் அறிவித்தார்,

அவை வருமாறு:—

எல்லாம் எல்லோருக்கும் என்றசமத்துவ சமுதாயத்தை அமைத்திடவும் அனைவருக்கும் ஏற்றத் தாழ்வற்ற சம வாய்ப்புகள் கிடைத்திடவும் பாடுபடுதல்.

2 நமது பண்டைய பெருமையை பாருக்கு உணர்த்தும் வகையில் தமிழ்மொழியையும் பண்பாட்டையும் பேணிக் காத்தல்

3 இந்திய ஒருமைப்பாட்டையும் இறையாண்மையையும் பேணிக் காத்தல்

4 சமதர்மம் மதச்சார்பின்மை, பாராளுமன்ற ஜனநாயக கூட்டாட்சி தத்துவம்ஆகிய நான்கும் அரசியல் உயிர் மூச்சு என்று உறுதிமொழி மேற்கொள்ளுதல்.

5. வன்முறையை மனித வாழ்க்கையின் எந்த அம்சத்திலும் அண்டவிடும் சூழ்நிலையை தடுத்தல்.

6. தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி, பொருளாதார நிலைகளை மேம்படுத்த பாடுபடுதல்.

7. உலகத் தமிழர் அனைவரின் நலன்களுக்குத் துளியும் தீங்கு நேராமல் பாதுகாத்தல்.

8. நகர்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் உள்ள ஏழை எளிய விவசாய தொழிலாளி உழைப்பாளி மக்களுக்கு வளமானதும் பாதுகாப்பானதுமான வாழ்வு கிடைத்திட அயராது பாடுபடுதல்

9உழவுக்கும்தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற முதுமொழிக்கு ஏற்ப இன்னமும் ஸ்தாபன ரீதியாக திரம்படத் உழைக்கும் வர்க்கத்தினரையும் பாமரர்களையும், பாட்டாளிகளையும் ஒன்று திரட்டி. தொழில் வளம் பெருக்கி வேலை இல்லாத்திண்டாட்டத்தை அறவே ஒழிக்கப்பாடுபடுதல்.

10. தீண்டாமை போன்ற சமூகக் கொடுமைகளையும்மூட நம்பிக்கைகளையும் எதிர்த்துப் போராடுதல்.

11. நாட்டின் கல்வி முறையை மாற்றிஅமைத்து எதிர்கால சந்ததிகளின் வாழ்க்கை முறையை மின்னணு யுகம் படைக்கப் பாடுபடுவது.

12. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தன்னை கொளுத்துவோம் என்னும் புரட்சி கீதத்தை செயல்படுத்தும் வகையில் தாயகத்தின் மேம்பாட்டுக்குச் சகல வழியிலும் பாடுபடுதல்.

இது தவிர கட்சியின் விரிவான கொள்கைகளை கட்சியின் முக்கிய தலைவர்கள் கூடி விவாதித்து அறிவிப்பார்கள் என்று சிவாஜிகணேசன் கூறினார்.

தொண்டர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

### பேட்டி

பின்னர் அவர் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த வன்னியர் போராட்டமும் காரணமாக உயிர் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதத்துக்குக் காரணம் நெடுஞ்செழியனும், பண்ருட்டி ராமச்சந்திரனும் தான் என்று அவர் குற்றம்சாட்டினார்.

அந்த சமயத்தில் போலீஸ் இலாகா நெடுஞ்செழியனிடம் முதல்—அமைச்சரின் இலாகாக்கள் பண்ருட்டி ராமச்சந்திரனிடமும் தான் இருந்தன போராட்டமும் உடனடியாக நடைபெறவில்லை.

முன்னதாகவே அறிவிக்கபட்டு நடத்தப்பட்டதுதான்.

வன்னியர் சங்கத்தை அழைப்துப்பேச்சு வார்த்தை நடத்தி இருக்கலாம் என்றார் அவர்.

வன்னியர் சங்கத்தினர் தேர்தலைப்புறக்கணிக்கப் போவதாக தீர்மானத்திருப்பதைக் கைவிட வேண்டும் என்று வீரப்பன் வேண்டுகோள் விடுத்தார். இந்த முடிவினால் அவர்களது பிரச்சினைகள் தீர்ந்துவிடாது என்றார்



# கற்பிப்போம்

## வீரப்பன் பேச்சு

பாண்டிச்சேரி, பிப். 11-
எம்.ஜி.ஆர். மரணம் அடைந்ததும் அ.தி.மு.க. முதுகில் குத்திய காங்கிரஸ் கட்சிக்குச் சரியானபாடம் கற்பிப்போம் என்று முன்னாள் அமைச்சர் வீரப்பன் கூறினார்

1984—ல் எம்.ஜி.ஆர். உடல் நலம் இல்லாமலிருந்த போதே ஜெயலலிதா கோஷ்டியினர் கட்சிக்குத் துரோகம் இழைக்க முயன்றார்கள் அவர்களை அடையாளம் கண்டு கொண்டு அ.தி.மு.க

www.tamilarangam.net

## கரன்சி நோட்டுகளில் படுத்து புரளும் பண்ருட்டி;

## முதல்வர் பதவிக்கு கனவுலகில் சஞ்சரிக்கும் நாவலர்:

## உலகமே தன் காலடியில் என

# பேயாக ஆடும் ஜெயலலிதாவுக்கு உடுக்கை அடிக்கிறார்கள்!

## காளிமுத்து கண்டனம்!

சென்னை, பிப். 14—

''கரன்சி நோட்டுகளில் படுத்து புரளும் பண்ருட்டி, முதல்வர் பதவிக்கு கனவுலகில் சஞ்சரிக்கும் நாவலர், உலகமே தன் காலடியில் என பேயாக ஆடும் ஜெயலலிதாவுக்கு உடுக்கை அடிக்கிறார்கள்'' என்று காளிமுத்து கண்டனம் தெரிவித்து உள்ளார்.

இது குறித்து எழுதியுள்ள கட்டுரையில் காளிமுத்து கூறியிருப்பதாவது:-

**உலக உருண்டையே ஜெயலலிதா காலடியிலா கிடக்கிறது?**

திரை உலகில் மார்க்கெட் இழந்துவிட்ட நடிகையை நடன மேடை ஏற்றி அரசியலில் விளம்பரம் தேடிக் கொடுத்து மாநிலங்களவை உறுப்பினராகவும் ஆக்கினார், பகைவர்க்கும் அருளும் நன்னெஞ்சு கொண்ட புரட்சித் தலைவர்.

அந்த நடிப்பு நங்கையார் இன்று பூமி உருண்டையே தனக்குக் கீழே சுழல்வது போல் அனைத்தையுமே அலட்சியமாக நோக்குகிறார்.

புரட்சித் தலைவர் தலைமையில் லட்சக்கணக்கான தொண்டர்களின் வியர்வையிலும் கண்ணீரிலும் பூத்த கமலம்தான் அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகம்.

14

கொள்கை பரப்புச் செயலாளராகி- குழப்பம் விளைவித்து- புரட்சித் தலைவரால் நீக்கப்பட்டு- தலைவரின் கருணையினால் மீண்டும் அந்தப் பொறுப்பில் நியமிக்கப்பட்டு தலைவரால்- நீக்கப்படும் கட்டத்திற்கு வந்து நின்ற அவர்- தலைவர் வைய வாழ்வை நீத்து விட்டதால் தட்டிக் கேட்க எவருமில்லை எனும் தலைகனத்தில் டெல்லி சுல்தான்களின் காலடியில் இயக்கத்தைக் காணிக்கை வைத்து அரசியல் சுகம் பெற துடிக்கிறார்.

**பேயாட்டம் ஆடுகிறாரே**

அண்ணாவின் சமுதாயக் கொள்கை- பொருளாதார- அரசியல் தத்துவம் இவற்றில் எதன் மீதும் மாஜி கொ.ப.செ.வுக்கு நம்பிக்கை இருக்க நியாயமில்லை. அவர் பிறப்பும்- வளர்ப்பும் அப்படி.

புரட்சித் தலைவர் அசையா மன உறுதியோடு கட்டிக் காத்த கொள்கைகள்- அடிதளத்து மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற அவர் துடித்த துடிப்பு- இவையெல்லாம் பால்கனியிலிருந்து- அழைத்து வரப்பட்ட அப்பாவிகளைப் பார்த்துக் கை அசைப்பதையே பெரிய அரசியல் பேருழைப்பாகக் கருதும் அவரால் உணர்ந்து கொள்ள இயலாது.

ஆனால் முக்கால் நூற்றாண்டு திராவிடப் பாரம்பரியத்தை உள்ளடக்கிய கட்சிக்கு- தலைவராகத் தன்னையே வரித்துக் கொண்டு பேயாட்டம் ஆடுகிறார்.

**உடுக்கை அடிக்கும் பண்ருட்டி, நாவலர்**

கரன்சி நோட்டுக்களில் படுத்துப் புரளும் பண்ருட்டிகள்- முதல்வர் பதவி பற்றிய கனவுலகில் இன்னும் சஞ்சரிக்கிற நாவலர்- இன்னோரன்ன சிலர் அந்தப் பேயாட்டத்திற்கு உடுக்கை அடிக்கிறார்கள்.

போன தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றதே இந்திராகாந்தி 'அலை'யில் தானாம். ஆட்சிக் கலைப்புக்காக இந்திரா காங்கிரசைக் குறை கூறக் கூடாதாம். இவையெல்லாம் 'செல்வி' வழங்கும் சிந்தனை முத்துக்கள்.

காங்கிரசில் கரையப் போகிற அவர் இப்போதே போய்த் தொலைந்தால் சிலருக்கு ஏற்பட்டுள்ள குழப்பமாவது நீங்கும்.

ஆனால். இயக்கத்தை உருக்குலைப்பதாக காங்கிரசுக்கு அவர் தந்துள்ள வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமல்லவா அதற்காகப் புரட்சித் தலைவரின் கொடியின் கீழ் அந்தப் பூநாகம் படுத்திருக்கிறது.

தேர்தலில் காங்கிரசோடு கூட்டணி வைத்ததால் புரட்சித் தலைவர் எப்போதும் காங்கிரசுக்கு அடிமையானதில்லை.

**கை அசைப்பும் மெய் அசைப்பும் கொள்கையாகி விடாது**

தமிழகத்தில் காங்கிரஸ் பெருந்தலைகள் கூட ராமாவரம் தோட்ட வீட்டின் தாழ்வாரத்தில் அவரைப் பார்க்க தவம் கிடப்பதுண்டே தவிர அவர் போய் தமிழ்நாட்டின் எந்தக் காங்கிரஸ் கனவானிடமும் கருணை மனுப் போட்டது இல்லை.

ஆனால் இப்போது 'செல்வி' காங்கிரசின் ஒலிபெருக்கியாகவும், மைய அரசின் பாதக் குறடாகவும் கட்சியை ஆக்கப் பார்க்கிறார்.

ஏனெனில் அவருக்கு திராவிட இயக்க வரலாறு வழி முறைகள் பற்றித் தெரியாது.

கையசைப்பதும்-மெய்யசைப்பதும்-புன்னகைப்பதும்-போஸ் கொடுப்பதும் கொள்கையாகி விடாது. புரட்சித் தலைவர் மூலம் திராவிட இயக்க லட்சியத்தில் அழுத்தமான ஈடுபாடு ...

... கொண்டு விட்ட தமிழகம்- கண் சிமிட்டும் மின்மினிப் பூச்சியின் அரசியல் பேராசைக்குப் பலியாகாது. வருங்காலம் இதை உணர்த்தும்.

இவ்வாறு காளிமுத்து கட்டுரையில் கூறியுள்ளார்.

**அமெரிக்காவில் 98 சதவிகித இல்லங்களில் டெலிவிஷன் பெட்டிகள் உள்ளன.**

## இரட்டை இலை சின்னம் கேட்டு

புதுடெல்லி, பிப்.13—

தங்கள் அணிதான் உண்மையான அ.தி.மு.க. என்று அறிவித்து இரட்டை இலை சின்னம் ஒதுக்கும்படி அ.தி.மு.க.வின் இரண்டு அணிகளும் தேர்தல் கமிஷனுக்கு கடிதம் எழுதி உள்ளன.

எதிர் அணியை அங்கீகரிக்க கூடாது என்று இரண்டு அணிகளுமே தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளன இதனால் நடவடிக்கை எடுப்பதில் சிரமம் உள்ளதாக தேர்தல் கமிஷன் வட்டாரங்கள் தெரிவித்தன.

எம். ஜி. ஆர். மறைவுக்கும் பிறகு தன்னை பொதுச் செயலாளராக தேர்ந்தெடுத்து உள்ளதால் தனது தலைமையில் உள்ள கட்சிதான் உண்மையான அ. தி. மு. க. என்று ஜனவரி 2ம் தேதியே தேர்தல் கமிஷனுக்கு ஜெயலலிதா கடிதம் எழுதிவிட்டார்.

ஜானகி தலைமையிலான அணியின் மூத்த பொதுச் செயலாளரான ராகவானந்தம் ஜனவரி 23ம் தேதி தேர்தல் கமிஷனுக்கு கடிதம் எழுதி உள்ளார்.

தங்கள் அணிதான் உண்மையான அ.தி.மு.க என்றும் மாற்று அணியிடமிருந்து வரும் கோரிக்கையை ஏற்க வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜெயலலிதா பொதுச் செயலாளராக தேர்ந்து எடுக்கப்பட்டது கட்சி விதிகளுக்கு முரணானது என்றும் இரட்டை இலை சின்னத்தை தங்களுக்கு ஒதுக்கும்படியும் வேறு யாருக்கும் தரக்கூடாது என்றும் அவர் மேலும் கூறினார்.

அ. தி. மு. க. வின் அமைப்பு விதிகள் தமிழில் இருப்பதால் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்து வருவதாக தேர்தல் கமிஷன் செயலாளர் ஆர். பி. பல்லா கூறியுள்ளார்.

**இந்தியர்களில் 'பிளாட்பாரவாசிகள்' என்று ஒரு பிரிவு மக்கள் இருப்பது தெரியும். அவர்கள் தொகை எவ்வளவு தெரியுமா?**

பிளாட்பாரவாசிகள் உள்பட வீடு இல்லாத இந்தியர்களின் மொத்த எண்ணிக்கை 2கோடியே 47லட்சம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காங்கிரசுக்கு விட்டுக் கொடுக்க மாட்டோம்

## அரங்கநாயகம் கூறுகிறார்

தஞ்சாவூர், பிப். 11—
வருகிற தேர்தலில் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தாலும் அதிக இடங்களை கேட்டுப் பெறுவோம். ஒரு நாளும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று முன்னாள் அமைச்சரும், ஜெயலலிதா அணியைச் சேர்ந்தவருமான அரங்கநாயகம் கூறினார். தஞ்சையில் நேற்றிரவு நடந்த கூட்டத்தில் இதை அவர் தெரிவித்தார்.

### அதிக இடம்

தேர்தல் உடன்பாட்டுக்காக தமிழகத்தின் நலனையோ கட்சியின் நலனையோ ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று அவர் குறிப்பிட்டார்.

தேர்தலில் எங்கள் அணி ஆட்சிக்கு வரும் வகையில் அதிகஇடங்களில்போட்டியிடுவோம். இதை காங்கிரசுக்கு ஒரு நிபந்தனையாக விதித்தே கூட்டு சேருவோம். ஜெயலலிதாவை நாங்கள் முதல்அமைச்சர் ஆக்குவோம் என்று அரங்கநாயகம் மேலும் கூறினார்.

### ராஜீவிடம் பேசுவோம்

அந்த அணியைச் சேர்ந்த மற்றொரு முக்கிய தலைவர் நிருபர்களிடம் கூறுகையில் எம் ஜி.ஆர். இருந்தபோது தொகுதி பங்கீடு எப்படி இருந்ததோ, அதே நிலை நீடிக்க வேண்டியதன் அவசியத்தைப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் எடுத்துச் சொல்வோம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைப் பாதுகாக்கவும், தி.மு.க ஆட்சிக்கு வந்து விடாமல் தடுக்கவும், மூன்றில் இரண்டு பகுதி இடங்களை ஒதுக்குமாறு வற்புறுத்துவோம் என்று அவர் மேலும் கூறினார்.

## திருநாவுக்கரசு

திருச்சி, பிப். 9—

இ. காங்கிரஸ் உறவு நீடிக்க வேண்டுமென்று நாங்கள்விரும்புகிறோம். காரணம் அது மறைந்த முதல்வர் எம். ஜி. ஆர். உருவாக்கிய உறவு என்றும் திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

அரசு அமைக்கும் விதத்தில் தங்கள் அணிக்கு மக்கள் ஆதரவளிப்பார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழக சட்டமன்றத் தேர்தல் தொகுதிப் பங்கீடு விஷயத்தில் இ. காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி, அ.தி.மு.க. சார்பில் ஜெயலலிதா ஆகியோர் எடுக்கும் முடிவே இறுதியானது என்று முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு கூறினார்.

ஜெயலலிதா-அணி பொதுக்குழு கூட்டம் வரும் 14ந் தேதி சென்னையில் நடக்கவுள்ளதாகவும், அப்போது சட்டமன்றத் தேர்தல் குறித்தும் தமிழக அரசியல் நிலமை குறித்தும் முடிவுகள் எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இ. காங்கிரஸ்-அ.தி.மு.க. (ஜெ) கட்சிகளுக்கிடையிலான தொகுதிப் பங்கீடு விஷயத்தில் ராஜீவ்காந்தியும் ஜெயலலிதாவும் எடுக்கும் முடிவே இறுதியானது. மற்றவர்கள் கூறுபவையெல்லாம், அவர்களுடைய சொந்தக் கருத்துக்களையும் விருப்பங்களையும் பிரதிபலிப்பவையே என்றார் திருநாவுக்கரசு.

இதற்கிடையே, வரவிருக்கும் தமிழக சட்டபேரவை தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் செய்தி வெளியிட்டார்.

கடலூரில் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் அவர் இதை அறிவித்தார்.

இளைஞர்களுக்கு வழி விட்டுத் தாம் தேர்தலிருந்து விலகிக் கொள்ளப்போவதாக அவர் சொன்னார்.

# வாசகர்

எம் ஜீ ஆர் சிறப்பு இதழ்
நீங்கள் கலைஞரின் விசிறி எம் ஜீ ஆரின் எதிரி என நீண்ட நாட்களாக எண்ணி இருந்தேன். ஆனால் விருப்பு வெறுப்பின்றி எம் ஜீ ஆர் இறந்த உமது தலையங்கம் உமது நடு நிலைமையும் நேர்மையையும் காட்டுகிறது.

பாஸ்கரன் PARIS.

நண்பன் தலையங்கம் சரியான தராசு முனையில் வைத்து எழுதப்பட்டுள்ளது

அலி VILLIERS S/M

வெளிவந்த தினமணி தினமலர் தினத்தந்தி தலையங்கங்களை விட சிறப்பாக இருந்தது நண்பனின் தலையங்கம். உண்மையில் எம் ஜீ ஆர் ரசிகர்களில் பலருக்கு தெரியாத என் எனக்குக் கூட தெரியாத விஷயங்களும் எழுதப்பட்டு இருந்தன. நன்றி

பாலு PARIS.

கோர்வையாக இல்லை என்றாலும் வைக்க மனமில்லாமல் விறு விறுப்பான சுவையான செய்திகளையே [illegible] ஒப்புக் கொண்டே தீர வேண்டும்.

குமார் FONTENAY

தன்னை எதிர்த்தவர்களுக்கும் பதவிகளை கொடுத்து மடக்கி வைத்து நடாத்திக் கொண்ட ராஜ தந்திரமும் உண்டு" என்ற எம் ஜீ ஆரின் வழியைப் பின்பற்றி ஜானகி அம்மையாரும் ஜெயலலிதா அணியினருக்கும் பழைய மந்திரிகளுக்கும் வாய்ப்பு அளிப்பதுதான் இப்போதைய அவசர நடவடிக்கையாக இருக்கும். இல்லை என்றால் ஆட்சியை அவரால் நடத்தவும் முடியாது. கட்சியை காப்பாற்றவும் முடியாது.

அன்சாரி STAINS

எம் ஜீ ஆர் இறந்தது அறிந்து உயிர் விட்டவர்கள் மொட்டை அடித்தவர்கள் பற்றி படிக்கும் போது தமிழகம் இன்னும் திருந்தவில்லை என்றே படுகிறது

சாந்தி PARIS

எம் ஜீ ஆர் செல்லும் இடங்களில் கூட்டக்- குறைப் பஞ்சம் இருக்காது அதைப்போல மாப்பெரும் கூட்டங்களின் போட்டோக்களை போட்டு மலரை அசத்தி விட்டீர்கள் போங்கள்

இளங்கோ NOGENT



எங்களது இதய தெய்வம்

# எம்.ஜி.ஆரைக் கொலைசெய்தவன் யார்?

தன்னுடைய அரசியல் ஆதாயத்துக்காக அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சை பெற பயணமான எம். ஜி. ஆரை தாமதப்படுத்தினான்.

தமிழ் நாட்டுக்கு வந்து ஓய்வெடுக்க முடியாமல் ஒரு மாத காலம் அமெரிக்காவிலேயே தாமதப்படுத்தினான். உடல் நலம் குன்றியிருந்த எங்கள் தெய்வத்தை அமெரிக்காவில் சந்தித்து. ஆட்சியை டிஸ்மிஸ் செய்வதாக மிரட்டினான்.

சிகிச்சை பெற்று வந்து மிகவும் பலவீனமாக இருந்த அவரை, தன்னுடைய மந்திரி நட்வர்சிங்கை விட்டு ஆட்சியைக் கலைப்பதாக மிரட்டினான்.

உடல் நலம் மிகவும் மோசமாக இருந்தும் மருத்துவர் எச்சரித்தும் அவரை ஓய்வெடுக்க விடாமல். தன்னுடைய தமிழ்நாட்டுப் பயணத்தில் உடன்வரவேண்டும் என்றுகட்டாயப்படுத்தி அலைக்கழித்துசாகடித்தான்.

23—12—87 அன்று இரவுவரை உடல் நலத்துடன் இருந்த எம் தலைவர். விடியற்காலையில் இறந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளார். அதற்கிடையில் சென்னையில் நடந்த மர்ம சதித்திட்டங்கள் என்ன?

இவ்வளவு கொடுமைகளையும் எங்கள் இதய தெய்வத்திற்கு செய்துவிட்டு நாட்டுமக்களிடம் நல்லவன் போல் நடிக்கும்

ராஜீவ் காந்தியே !

இன்னும் உன்னுடைய வேஷத்தை' நம்பிக்கொண்டிருக்க எம்.ஜி. ஆரின் உண்மைத் தொண்டர்கள் முட்டாள்கள் அல்ல.

உனக்கு சாவு விரைவில் !

இங்ஙனம்,

**எம். ஜி ஆரின் உண்மைத் தொண்டர்கள்**

**இப்படி ஒரு நோட்டீஸ் தஞ்சாவூர் மக்களிடம் விநியோகிக்கப்படுகிறது. படித்தவர்கள் அதிர்ச்சியாகிறார்கள் காங்கிரஸ் காரர்கள் ஆத்திரமடைகிறார்கள். அ. தி. மு. க. வினர் யார் செய்தார்கள் இந்த வேலையை என்று அவசரமாக ஆலோசனை செய்கிறார்கள். இதை சிலர் அப்பட்டமான வதந்தி என்றும் வேறு சிலர் இப்படியும் இருக்குமோ என்றும் பேசிக் கொள் கிறார்கள்.**

**இதைப்பற்றிய கருத்துக்களையும், எந்த அளவிற்கு இதில் உண்மை இருக்கிறது என்பதையெல்லாம் மக்கள் முடிவு செய்யட்டும்.**

**எம். ஜி. ஆரைப்பற்றியும், ராஜீவ் காந்தியை பற்றியும் இந்த துண்டு பிரசுரத்தில் கூறியிருப்பது குறைவுதான். இதைவிட பெரிய பெரிய விஷயங்களெல்லாம் சென்னையில் திரிகிறது.**

**எம். ஜி. ஆரின் இறப்பைப் பற்றிய உண்மையானத் தகவல்களை நமக்குத் தருவதற்கு அரசு தயாராகயில்லை என்பது மட்டும் ஹண்ட்ரட் பிரசண்ட் உண்மை.**

**ஆமாம் இந்த உண்மைத் தொண்டர்கள் யார்?**

இன்னுய்யா எங்க க்கேலி இந்திரா காந்தி சுடப்பட்ட போது மலர் போடல எம் ஜீ ஆருக்குப் பேய் போட்டுக்கே அவரா சாப்பாடு போனாரு.

எம் ஜீ ஆர் இறந்தாலும் பொன் இறவா-தாலும் பொன். எம் ஜீ ஆர் சாதனையில் சைத்துக் கொண்-டிருந்த நண்பனுக்கும் உயிர் கொடுத்-தார் என்பதையும் நோக்குக் கொள்ளு-ங்கள்.

இராமராஜா PARIS

www.tamilarangam.net

# காங்கிரஸ் எதிர்ப்பு

சென்னை, பிப். 9—

ஜெயலலிதாவும், அவரது ஆதரவாளர்களும் மத்திய அரசையும் சம்பந்தப் படுத்தி பேசுவது குறித்து காங்கிரஸ் மேலிடம் ஒரு தர்ம சங்கடமான நிலைக்கு ஆளாகி இருப்பதாக காங்கிரஸ் மேலிட பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

நாங்கள்தான் ஆட்சியைப் பிடிப்போம். ஜெயலலிதாதான் அடுத்த முதல்வர் என்று அவரது ஆதரவாளர்கள் கூறிவருவதும் சட்டப் பேரவையில் மூன்றில் இரண்டு பங்கு இடம் எங்களுக்கே மீதி ஒரு பங்கு இடங்கள்தான் காங்கிரஸ் கட்சிக்கு என்று அவர்கள் சொல்லி வருவதும் காங்கிரஸ் வட்டாரத்தல் வேதனையையும் வியப்பையும் அளித்துள்ளது என்று அவர் மேலும் கருத்து தெரிவித்தார். அ.தி.மு.க.வுடனும் எம்.ஜி.ஆருடனும் மத்திய அரசு இணக்கமான உறவு கொண்டிருந்தது. அவரது மறைவுக்குப் பிறகு ஜெயலலிதா கையில் ஆட்சியை ஒப்படைப்பதற்கு அல்ல என்றும் அவர் கூறினார்.

தேர்தல்பற்றிய அறிவிப்பே வராத நிலையில் அவரது ஆதரவாளர்கள் இப்படிஆசையை வளர்த்துக் கொள்ளத் தேவை இல்லை. அளவுக்கு மீறிய ஆசையை வளர்த்துக் கொள்வது ஜனநாயகத்தில் முதிர்ச்சியையோ அரசியல் பக்குவத்தையோ காட்டாது என்றார் அவர்.

காங்கிரஸ் ஆதரவு என்பது கேட்டவுடன் கிடைப்பது போலவும் தமிழ்நாட்டை காங்கிரசுக்கு அடமானம் வைக்கமாட்டோம் என்றுஜெயலலிதாபேசுவதும் வியப்பளிப்பதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் காங்கிரசை பொறுத்தவரை மக்கள் அளித்த தீர்ப்பை அது தலைவணங்கி ஏற்றுக்கொண்டுள்ளது.

... காங்கிரஸ் தனிலவராக இருந்தபோது திராவிட இயக்கத்தோடு கூட்டுச்சேராமல் 34 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. கண்ணியமாகவும், சுயமரியாதையுடனும் காங்கிரஸ் கட்சி எதிர்கட்சியாக செயல்பட்டது. அதைப்போல ஒரு நிலை வந்தாலும் ஏற்றுக்கொள்வோமே தவிர ஏதோ மடிப்பிச்சை கேட்பதை போலவும் இதற்கு அவர்கள் நிபந்தனை விதிப்பது போலவும் காங்கிரஸ் கட்சி என்றைக்கும் உடன்படாது என்றும் அவர் கூறினார்.

சரி சமமான இடங்கள் என்ற அடிப்படையில் உடன்பாடு ஏற்பட்டால் அதை காங்கிரஸ் வரவேற்கும். அதை விட்டு விட்டு இப்போதே எங்களுக்குதான் அதிக இடம் என ஜெயலலிதா அணியினர் பேசி வருவது விரும்பத்தக்கது அல்ல அதனால் ஏற்பட இருக்கும் உறவு சீர்குலைவு அடைந்து விடும் என்றும் அவர் மேலும் கூறினார்.

எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டில் கூட்டு மந்திரி சபை அமைக்க காங்கிரஸ் விரும்பவில்லை. முடிந்தால் தனித்த அமைச்சரவை அமைப்போம் இல்லாவிட்டால் ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக செயல் படுவோம். அதுதான் காங்கிரசின் கொள்கை இலட்சியம் என்றும் அவர் கூறினார்.

### என்னை புரிந்தவர்

எம்.ஜி.ஆர். என்னை நன்றாக அறிந்து-புரிந்து-தெரிந்த பிறகுதான் கட்சியிலும் ஆட்சியிலும் முக்கியப் பொறுப்புகளைத் தந்தார். ''நாவலர் என் பக்கத்தில் இருப்பது-அண்ணா என்னோடு இருப்பது போல்'' என்று எம்.ஜி.ஆர். பாராட்டினார். பதவிக்காக எந்தக் காலத்திலும் நான் மன்றாடவில்லை.

-நாவலர்

### அந்தப் பார்ட்டி; இந்தப் பார்ட்டி

எங்கள் அணிதான் உண்மையான அ.தி.மு.க. நேர்மையானது, நியாயமானது. அரசியல் சட்டரீதியானது. நாங்கள் நடத்துவது பொலிட்டிகல் பார்ட்டி. அவர்கள் (ஆர்.எம். வீரப்பன் அணி) நடத்துவது டீ பார்ட்டி.

-பண்ருட்டி

### இப்படி- அப்படி

என் தனிப்பட்ட கருத்துப்படி எந்தக் கட்சிக்குமே ஆட்சி அமைக்கத் தகுதி இல்லை. அரசியல் சட்ட விதிப்படி ஜானகி அம்மாள் பதவியில் நீடிக்கத் தகுதியானவர்.

-சோ

### வருவதன் காரணம்

அரசியலுக்குச் சம்பந்தமில்லாதவன் நான். அரசியலில் சேராதவன் என்பதால்தானே அரசியல்வாதிகள் எங்களைத் தேடி வருகின்றனர்.

சங்கராச்சாரி

### கற்பனை மிதப்பு

பொய்யான குற்றச்சாட்டுகளின் மூலம் பொது மக்களிடம் எனக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துவதோடு, என்னைப் பயமுறுத்தி-அ.தி.மு.க.விற்காகவும்; ஜானகி அம்மாளுக்காகவும் பாடுபடும் என்னை முடக்கி விடலாம் என்று ஜெயலலிதாவும், அவரது கோஷ்டியினரும் கற்பனை செய்கின்றனர்.

-எஸ். முத்துசாமி

### சோனியா இல்லை

அமிதாப்பச்சன் ராஜினாமா செய்ததலே காலியாகிவிட்ட தொகுதியில் என்மனைவி சோனியாபோட்டியிடுவதாகக் கூறப்படுவது சிறிதும் உண்மை கலப்பில்லாத வதந்தி. இந்த வதந்தி உருவாகக் காரணம் என்ன என்பதைக் கண்டு பிடிக்குமாறு காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆஸ்கார் பெர்னாண்டசைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

-ராஜீவ்

### அன்றே பிளவு

உண்மையில் ஜெயலலிதாவின் வரவால் ஆரம்ப காலத்திலேயே கழகத்தில் இரு பிரிவுகளாகப் பிரிந்துவிட்டன. புரட்சித் தலைவர் அறிமுகம் செய்து வைத்த காரணத்தால் இதுவரை கட்சியில் இந்தப் பிளவு வேலைகள் நடைபெறாதிருந்தன.

-வலம்புரி ஜான்

### காரணங்கள்

கட்டுப்படுத்தப்படாத மக்கள் பெருக்கமும், வறுமையும்தான் 'பெரும் சுகாதாரக் கேட்டிற்கான' காரணங்களாக உள்ளன.

-சி. சுப்பிரமணியம்

### உரிமை இல்லை

அரசிற்கு அளவற்ற அதிகாரங்கள் இருந்தாலும் தனி மனிதனுடைய சுகாதார வசதிகளில் தலையிட உரிமை இல்லை. மனிதன் வாழ்ந்து-அமைதியான முறையில் முன்னேற்றத்தை நாடிச் செல்வதற்குள்ள உரிமை-சர்வதேசச் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருப்பதுபோல்-அடிப்படை சுகாதார வசதிகள் பற்றிய உரிமை வலியுறுத்தப்படவில்லை.

-நாகேந்திரசிங்
(சர்வதேச நீதி மன்ற நடுவர்)

## தேர்தல் கூட்டணியில்

# அதிக இடம் எங்களுக்கே

## சாத்தூர் ராமச்சந்திரன் சொல்கிறார்

மதுரை, பிப். 9—

தேர்தல் கூட்டணியில் அதிக இடங்கள் எங்களுக்குதான். அதில் மாற்றம் எதுவும் இல்லை என்று முன்னாள் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் கூறினார்.

அவர் மதுரையில் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

இ.காங்கிரசுடன் தங்கள் அணி அ.தி.மு.க.வின் தோழமை நீடிக்கும். அதில் சிக்கல் ஏதும் வராது என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால் தேர்தல் உடன்பாட்டில் தொகுதிப் பங்கீட்டைப் பொறுத்தவரையில் அதிக இடங்கள் எங்களுக்குத்தான் வரும் அதில் மாற்றம் ஏதும் இல்லை என்று அவர் கூறினார்.

ஆண்டிப்பட்டித் தொகுதி மக்கள், ஜெயலலிதாதான் தங்கள் தொகுதியில் போட்டியிட வேண்டும்என்று விரும்புவதாகவும் அவர் கூறினார்.



கூடியவிரைவில் தேர்தலை நடத்தும்படி மத்திய அரசையும் தேர்தல் கமிஷனையும் தங்கள் அணி கேட்டு கொண்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### நாடு-நாடு-நாடு

ஜெயலலிதாவின் பின்னால் தான் நாடு இருக்கிறது என்பதை நாடு இப்போது உணர்ந்து கொண்டு இருக்கிறது.

-ப. குழந்தைவேலு

### ஏக்கம் இல்லை

அமைச்சர் பதவியை எதிர்பார்த்து நான் ஏங்கிக்கொண்டிருக்கவில்லை.

-ஜெயலலிதா

www.tamilarangam.net

# தூக்கி எறிந்த கருணாநிதி! காலில் போய் விழுவதா?

## ஜெயலலிதா கண்டன கணை



சென்னை, ஜன. 31:-

புரட்சித்தலைவர், யாரை எதிர்த்து கட்சியை ஆரம்பித்தாரோ, அந்த கருணாநிதியிடமே, சென்று இன்றைய மைனாரிட்டி அரசு, ஆதரவு கேட்டது, புரட்சித்தலைவருக்கு செய்த மாபெரும் துரோகம், என்று ஜெயலலிதா நேற்று தன் வீட்டில் கூடியிருந்த தொண்டர்களிடம் பேசும் போது கூறினார்.

### தொண்டர்கள்

அ.தி.மு.க. தொண்டர்கள், நேற்று காலை போயஸ் கார்டனில் உள்ள அவர் வீட்டு முன்பு கூடி நின்றனர். நூற்றுக்கணக்கில், கூடியிருந்த அவர்கள் ஜெயலலிதாவை ஆதரித்துகோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

பிற்பகல் 1.15 மணிக்கு, தொண்டர்களிடம் பேசிய ஜெயலலிதா கூறியதாவது:-

என் பெயரில் யாரும், மன்றமோ தனிப்பட்ட அமைப்போ ஆரம்பிக்கக் கூடாது. மறைந்த முதல்வர் நமக்குகொடுத்த அ.தி.மு.க. வைவளர்க்கவும், கொள்கைகளை பரப்பவும் பாடுபட வேண்டும்.

### களங்கம்

இப்போது, அவர்கள் புரட்சித்தலைவரின் வாரிசு என்று சொல்லிக்கொண்டு, அவர் மறைந்த ஒருமாதத்திற்குள் கட்சியையும், ஆட்சியையும் களங்கப்படுத்தி விட்டார்கள். புதைக் குழியில் தள்ளி விட்டார்கள்.

இதுவரை செய்தது போதாதென்று, இவையெல்லாவற்றிற்கும், சிகரம் வைத்தது போல் நேற்று முன்தினம் அ.தி.மு.க.வின் லட்சோப லட்சம் தொண்டர்களாலும் மக்களாலும் சகிக்க முடியாத ஏற்றுக்கொள்ள முடியாத செயல் நடந்திருக்கிறது.

1972ல் எந்த கருணாநிதி, புரட்சித்தலைவரை, தி.மு.க. விலிருந்து தூக்கியெறிந்தாரோ, அந்த கருணாநிதியின் வீட்டுக்கு சென்று, இன்றைய மைனாரிட்டி அரசு அவரது காலில் விழுந்து ஆதரவு கேட்டிருக்கிறது.

புரட்சித்தலைவர், அ.தி.மு.க. வை ஆரம்பித்தபோது, தமிழக தாய்மார்களும், மக்களும் எம்.ஜி.ஆரை வாரி அணைத்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

### பதவிஆசை

நான். புரட்சித்தலைவரோடு 30 ஆண்டுகள், 40 ஆண்டுகள் நெருங்கிப் பழகினேன் என்று இன்று சொல்லிக் கொள்பவர்களெல்லாம், கருணாநிதி வீட்டுக்கு சென்று, பதவி, சொத்து ஆசை காரணமாக ஆதரவு கேட்கிறார்கள்.

நமது இதய தெய்வம் உண்மையாகவே இப்போது தெய்வமாகிவிட்டார். சீக்கிரமே, உங்கள் ஆதரவை ஓட்டுச்சீட்டின் மூலம் நிறைவேற்ற வேண்டிய காலம் வரும். சத்தியம், தர்மம், என்றும் விழ்ச்சியடையாது.

### வெற்றி நிச்சயம்

நமக்கு என்றுமே வெற்றிகள் நீங்கள் பட்டாசுகள் வாங்கி தயாராக வைத்திருக்கிறீர்கள், என்று கேள்விப்பட்டேன். அநேகமாக இன்று இரவு அதிகாரபூர்வமான, நல்ல செய்தி வரும். உங்கள் ஆசை நிறைவேறி, விரைவில் தேர்தல் வரும்.

இவ்வாறு ஜெயலலிதா பேசினார்.

முன்னதாக, ஜெயலலிதாவை சந்திப்பதற்கு முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் உப்பிலியாபுரம் லட்சுமி, சரோஜா, முன்னாள் அமைச்சர் ஆர். சவுந்திரராசன், க.மு. நீலமேகம் மற்றும் பூங்கா நகர் கே.ஆர்.கே.பாலகிருஷ்ணன் ஆகியோர் வந்திருந்தனர்.

---

'தமிழக அரசியல், தமிழக எல்லைகளைத் தாண்ட ஜெயலலிதா காரணமாக இருப்பார்!'—

'அவர் ஒரு மாநில கட்சியில் இருந்தார். ஆனால், பல தேசிய கட்சிகள் ஜெயலலிதாவின் அரசியல் பிரவேசம் எப்படி இருக்கும் என்று உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றன'.

இந்த இரண்டுவித கருத்துக்களையும் கூறியவர்கள் வடநாட்டு எம்.பிக்கள். சமீபத்தில் ஜெயலலிதா தாக்கப்பட்டதற்குஅனுதாபம் தெரிவிக்க தமிழ்நாட்டிற்குவந்தது போல வந்து 'ஜெயலலிதாவின் திட்டம்' என்ன என்பதை நாடி பிடித்து விட்டு; சென்னை ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கிவிட்டனர் அந்த எம்.பிக்கள்!

ஒரு எம்.பி. தீவிரமான வி.பி.சிங் ஹரிஜன ஆதரவாளர்! மத்திய பிரதேசகாரரோ பாரதீய ஜனதா சார்பாக வந்ததாக சொல்லிக் கொண்டார்.

ஜனதாக்கட்சி சார்பாக கர்னாடக மாநில முதல்வர் தன் கைப்பட ஒரு கடிதத்தை ஜெயலலிதாவுக்கு எழுதியிருக்கிறார்.

தேசிய கட்சிகள் நிலை இப்படி என்றால்— மாநிலத்தில் பிரதான கட்சியாக இருக்கும் தி.மு.க. இரண்டாம் கட்ட தலைவர்கள் மிகக் கடுமையாக ஜெயலலிதாவை எதிர்க்கிறார்கள்!

### பத்தாயிரத்தில்

பீகாரில்கல்லூரிவிரிவுரையாளர் பணிக்கு 'ரியடிகிரி' பத்தாயிரம் ரூபாய் முதல் 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறதாம் மாஸ்டர் டிகிரி வாங்கியசுமார் பத்தாயிரம்பேர் இந்த வகையில் பணிவாய்ப்பைப் பெற்று விட்டார்களாம்.

எம். ஜி.ஆர். மறைவால் பெரிய அளவில் மனப்பாதிப்புக்குள்ளானார் கே. பாக்யராஜ். அடக்கம் நடந்து முடியும் வரை பச்சைத் தண்ணீர்கூட குடிக்காமல் கண்ணீரும் கம்பலையுமாக இருந்திருக்கிறார்.

கட்சிப் பிளவுப் பிரச்சனை எழுந்த போது சிலர் இவரது ஆதரவை கேட்… அம்மா என்ன சொல்லுகிறார்களோ அதுதான் எனக்கு வேதவாக்கு என்று ஒற்றை வரியில் முத்தாய்ப்பு வைத்து விட்டார். அந்த அம்மா ஜானகி அம்மாதான்.

நாளில் பெரும்பகுதி ஜானகி அம்மையாருடனேயே இருந்தார் பாக்யராஜ். இதேபோல் தோட்டத்திலே… தவம் கிடந்த இன்னொரு நடிக… ராஜேஷ்.

இவ்வளவு செய்த பாக்யரா… எம்.ஜி.ஆருக்கு கலைஞர்கள் செலு… திய மௌன அஞ்சலியில் கலந்… கொள்ளாமல் அதற்கு முன்பாக… எம்.ஜி.ஆர். சதுக்கத்துக்குப் போ…

அஞ்சலி செலுத்தியிருக்கிறார். அ… போது அவருடன் சென்றவர் டை… டர் ஆர். சுந்தர்ராஜன்.



வலம்புரி ஜான் பேட்டி

# ஜெயலலிதாவுக்கு இல்லை

அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் அணியின் முக்கிய ஆதரவாளர்களில் ஒருவர் டாக்டர் வலம்புரிஜான், எம்.பி., அவரை சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள அவரது இல்லத்துல் சந்தித்தோம்.

**கேள்வி: ஜெயலலிதாவை இப்போது எதிர்த்து வருகிறீர்களே, ஒருகாலத்தில் அவர்களை நீங்கள் பாராட்டியவர்கள் தானே?**

பதில்: ஒரு காலத்தில் பாராட்டியவர்களை ஊழிக்காலம் வரை பாராட்டித்தான் ஆகவேண்டும் என்கிற எந்த அவசியம் கட்டாயமும் இல்லை. அறிஞர் அண்ணு மகாத்மா காந்தியைப் பற்றி எதிரும் புதிருமான கருத்துக்களை தெரிவிக்கிற காலத்தின் கட்டாயம் அவருக்கு வந்தது. கலைஞர் கருணநிதி புரட்சித் தலைவரைப்பற்றி ஏறுக்கு மாருன கருத்துக்களைச் சொல்லுகிற அரசியல் அவசியம் வந்தது. பெருந்தலைவர் காமராசருக்கும், பேரறிவாளர் ராஜாஜிக்கும் ஏன் பெரியாருக்குமே இதுதான் நிலை. அவர்களோ சரித்திரத் தலைவர்கள், நானே சர்தாரணன். ஜெயலலிதாவிடத்தில் விஷயம் தெரிகிறபோது பாராட்டுகிறேன்; விஷம் மாத்திரமே வெளிப்படுகிற போது படபடக்கிறேன்.

**கேள்வி: ஜெயலலிதாவிற்குத்தான் கூட்டம் சேர்கிறது என்பது உண்மைதானே?**

பதில்: இல்லை. இது ஜெயலலிதாவிடத்தில் பணம் பெறுகிற, வாரப்படி, தினப்படி பெறுகிற பத்திரிக்கைக்காரர்கள் சிலரே வேணடுமென்றே உருவாக்கி விடுகிற கற்பனை. ஜெயலலிதாவிற்கு வந்த கூட்டங்கள் பல வாரங்களுக்கு முன்பே ஏற்பாடு செய்து வற்புறுத்தி வரவழைக்கப்பட்ட கூட்டங்களாகும். அந்தக் கூட்டமும் ஜெயலலிதா ஒரு மாஜி நடிகை என்பதால் பார்க்க வருகிறது. ஜெயலலிதாவின் மலைப்பிரசங்கத்தைக் கேட்பதற்கு மக்கள் திரளுவது இல்லை. ஒரு மாஜி நடிகையைப் வருகிற அல்லது பார்ப்பதற்காக திரட்டப்படுகிற கூட்டத்தை வைத்துக்கொண்டு அரசியல் வெற்றி பெறலாம் என்று கருதுவது அடிப்படையிலே தவருனதாகும். பயோரியா பல்பொடிக்கு விளம்பரம் செய்கிறவருக்குக்கூட பல்லாயிரம் திரளுகிற நாடு இது. பாம்பும் கீரியும் சண்டை போடுவதை சாலை ஓரங்களில் நின்று பார்க்கிறவர்கள் போக்குவரதத்தையே நிறுத்தி விடுகிற நாடு இது. ஜெயலலிதாவைவிட அமலாவிற்கு அதிக கூட்டம் வரும். அதற்காக ஆட்சிப் பொறுப்பை அவரிடத்தில் ஒப்படைக்க இயலுமா?

**கேள்வி: கட்சிக்காரர்கள் ஜெயலலிதா என்றுல் ஏன் அவ்வளவு கசப்போடு இருக்கிறர்கள்.**

பதில்: ஜெயலலிதா ஒரு காகிதசர்வாதிகாரி. மகத்தான மனிதர்களை அவமானப்படுத்தி சிறுமைப்படுத்தி மகிழ்ச்சி கொள்ளுகிற மனநோயாளி. மண்டபத்தைப் பிடிப்பது இருக்கட்டும் முதலில் மரியாதையாவது மிஞ்சட்டும் என்று எனது கட்சிக்காரர்கள் நினைக்கலாம். அரசாங்கம் அமைப்பது இருக்கட்டும். அடிப்படை மரியாதையை முதலில் மீட்டுக் கொள்வோம் என்று அவர்கள் கருதலாம். அரசியல் முதிர்ச்சி இல்லாத, அடிப்படை ஒழுக்கம் இல்லாத, பொறுமை கொஞ்சம் கூட இல்லாத, கோள் மூட்டுவதையே தனது குலத்தொழிலாகக் கொண்டிருக்கிற ஒரு பெண் அரக்கியிடமிருந்து தப்பித்தோம் என்கிற மகிழ்ச்சியில் நாங்கள் எல்லோரும் இருக்கிறேம். மீண்டும் எங்களை இந்த சர்வாதிகாரியின் அடக்குமுறைக்குக்கீழ் ஒப்படைத்து விடாதீர்கள் என்று எங்கள் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேம்.

**கேள்வி: கடந்த தேர்தலில் ஜெயலலிதாவால் தானே உங்களுக்கு வெற்றி வந்தது?**

பதில்: யார் சொன்னது? ஜெயலலிதா கடந்த தேர்தலில் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமென்று எவரும் கேட்கவில்லை. அவராகச் சென்று தனக்கு வேண்டியவர்களுக்காகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்படி தீவிரமாக தெருவுக்கு தெரு அவர் பிரச்சாரத்தில் இறங்கிய இடங்களில் எங்களது வேட்பாளர்கள் தோற்றுர்கள் என்பது தான் உண்மை. புரட்சித்தலைவரின் இலட்சுமணத்தம்பி இராம வீரப்பன் அவர்களின் வழிகாட்டுதல் மட்டும் இருந்திருக்காவிட்டால் கட்சி வெற்றி பெற்றிருக்க முடியாது. புரட்சித் தலைவர் உயிரோடு இல்லை என்று எதிரிகள் பிரச்சாரம் செய்தபோது வீடியோ படத்தின் மூலமாக அவர் உயிரோடு தான் இருக்கிறர் என்பதை அமைச்சர் இராம வீரப்பன் அவர்கள் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொன்னது தான் வெற்றிக்கே காரணம்.

**கேள்வி: ஜெயலலிதாவிற்கு பிரதமரிடத்தில் செல்வாக்கு இருப்பது உண்மைதானே?**

பதில்: இது ஒரு அண்டப் புளுகு. என்னைப் போலவே எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும்|பிரதமரைச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறர்கள். ஆனல் நாங்கள் இதைப் பெரிது படுத்துவது இல்லை. ஜெயலலிதா எதிலும் விளம்பரம் தேடவேண்டுமென்று ஆசைப்படுவதால் இம் மாதிரி சந்திப்புக்களை பிரமாதப்படுத்தி வருகிறர். இந்த வாரம் கூட அவர் பிரதமரை பார்த்திருக்கிறர். இதைத்தான் இங்கே இருக்கிற பொய்யர்கள் சிலர் ஒரு மணிநேரம் பார்த்தார் என்று எழுதுகிறர்கள். அயல் நாட்டுத்தலைவர்களிடத்திலே கூட அரைமணி நேரம் பேச முடியாமல் அவ்வளவு வேலைகளோடு இருக்கிறர் நமது பிரதமர். ஒவ்வொரு நிமிடமும் அவருக்கு முக்கியம். நிலைமை இப்படி இருக்க ஒரு மணிநேரம் அவரை சந்தித்துப் பேசினேன் என்று பத்திரிக்கைகளுக்குத் தகவல் தருவது பிரதமரைக் கொச்சைப்படுத்துவதாகும். தனக்கு முக்கியத்துவம் தேடுவதற்காக யாரைத்தான் பயன்படுத்திக் கொள்ளுவது என்று ஒரு விதிமுறையே கிடையாதா? ஜெயலலிதா என்ன அகில உலக பிரச்சனைகளைப் பற்றி இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகிற அரசியல் அறிஞரா?

**கேள்வி: எம்.ஜி.ஆர் தானே ஜெயலலிதாவை கொள்கைப் பரப்புச் செயலாளராக நியமித்தார். இப்போது நீங்கள் அவரை எதிர்ப்பது எம்.ஜி.ஆரையே எதிர்ப்பது ஆகாதா?**

பதில்: அந்தப் பதவியிலிருந்தும் புரட்சித் தலைவர்தானே அந்த அம்மையாரைத் தூக்கி எறிந்தார். பொதுக் குழுவில் இந்த அம்மையாரின் பாதகச் செயல்களை அவர் தானே பட்டியல் போட்டுக் காட்டினர். அவர் ஜெயலலிதாவை மந்திரியாக்கி இருந்தால், யார் கேட்டிருக்க முடியும்? ஏன் ஆக்கவில்லை? டெல்லிக்குப் போன பிறகு புரட்சித் தலைவர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைத் தயாரித்து மத்திய அரசிடம ஜெயலலிதா தந்தார். தனது டெல்லி வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொண்டு புரட்சித் தலைவருக்குக் களங்கம் கற்பித்தார். இதை அவ்ஆ அறிந்து கொண்ட காரணத்தால்தான் ஜெயலலிதாவால் தொடர்ந்து நாடளுமன்றக் கூட்டங்களுக்கு வரமுடியாமல் போனது. இப்போது இறுதியாக அவர் அமெரிக்காவிற்குப் போன போது தும்கூர் (கர்நாடகம்) என்கிற இடத்தில் ஒரு செல்வந்தரோடு அவர் தங்கியிருந்தார் என்பதைக்கேட்டு அவரது மனம் புண்பட்டது. இப்படி அவரது வாழ்க்கையின் இறுதியில் ஜெயலலிதா என்கிற நாகத்தை ஒடுக்கவும் ஒதுக்கவும் அவர் தீர்மானித்திருந்தார் என்பதற்கான சான்றுகள் ஏராளம் உள்ளன.

**கேள்வி: ஜானகி அம்மையார் அரசியல் அனுபவம் இல்லாதவர்கள்தானே?**

பதில்: ஒரு மாபெரும் தலைவரோடு அவர்கள் நாற்பது ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்பதே மிகப்பெரும் அரசியல் அனுபவமாகும்.

**கேள்வி: இறுதியாக என்ன சொல்கிறீர்கள்?**

பதில்: தூக்கில் போடப்படுகிறவனிடத்தில் கேட்பது போலக் கேட்கிறீர்கள். ஜெயலலிதா எங்கே தேர்தலில் நின்றாலும் அவரை எதிர்த்து வீழ்த்துகிற பொறுப்பை

www.tamilarangam.net

# புரட்சித் தலைவரை களங்கப் படுத்துகிறார் ஜெயலலிதா!

போக்குவரத்துத் துறை [illegible] சாமியின் வீடு. முத்துசாமியின் மீது ஜெயலலிதா அடுக்கடுக்காகப் பல ஊழல் புகார்களைக் கூறி இருந்ததால், ஒரு விதமான டென்ஷனான சூழ்நிலை நிலவியது. ஜனவரி 24 அன்று காலை 11.00 மணிக்கு அமைச்சர் முத்துசாமியை அவரது வீட்டின வரவேற்பறையில் சந்தித்தோம். பிரம்மாண்டமான எம்.ஜி.ஆர். பெயிண்ட்டிங் அறையில் கம்பீரமாக இருந்தது. முத்துசாமி முகத்தில் புறுவல் மாறாமல் நமது கேள்விகளுக்கு பதிலளிக்க ஆயத்தமானார்.

அதற்குள் இராமாவரம் தோட்டத்திலிருந்து ஒரு அவசரத் தொலைபேசி அழைப்பு-பேட்டியை ஒத்தி வைத்து விட்டு முத்துசாமி காரில் விரைந்தார். (முன்னாள் அமைச்சர் இராஜாராம் தோட்டத்தில் முதல்வர் ஜானகியைச் சந்திப்பதால் வந்த அழைப்பு அது என்பதைப் பின்னர் புரிந்து கொண்டோம். இப்பொழுதெல்லாம் முதல்வர் முத்துசாமியையே அதிகம் நம்புகிறாராம்.)

விட்டுப்போன பேட்டி மீண்டும் மாலை ஆறு மணிக்குத் தொடர்ந்தது.

**தராசு :** எம்.ஜி.ஆர் மருத்துவ நிதிக்காக 1987 செப்டம்பரில் நிதி வசூல் செய்ததாக உங்கள் மேல் ஜெயலலிதா குற்றம் சாட்டி உள்ளாரே!

**முத்துசாமி :** இல்லை. அப்படி எந்த வசூலும் நான் செய்யவில்லை. நிதி வசூல் செய்யச் சொல்லி புரட்சித்தலைவர் எனக்கு உத்தரவிடவில்லை. ஜெயலலிதா சொல்வது பொய்.

**தராசு :** ஜெயலலிதா உங்கள் மேல் பொய்யாகக் குற்றச்சாட்டு கூற வேண்டிய அவசியமென்ன?

**முத்துசாமி :** இத்தகைய குற்றச்சாட்டுகள் மூலம் என்னைப் பயமுறுத்தி அரசியலிலிருந்து ஒதுங்கச் செய்ய ஜெயலலிதா திட்டமிடுகிறார். அது சுத்தமான ப்ளாக் மெயில்... பகல்கனவு... பலிக்காது!

**தராசு :** முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் யானையையே சோற்றில் மறைத்து விடுபவர் என்று உங்களைப் பற்றிக் கூறுகிறாரே!

**முத்துசாமி :** அவர் சொன்ன உதாரணம் அவருக்கே பொருந்தும். யானையையே விழுங்கி விட்டு ஒன்றும் நடக்காததைப் போல் இருப்பவர் பண்ருட்டியார்.

**தராசு :** அப்படியென்றால்...?

**முத்துசாமி :** அண்ணன் பண்ருட்டியார் பற்றிய விவரங்களைச் சமயம் வரும்போது சொல்வேன்.

**தராசு :** ஜெயலலிதா தங்கள் மீது கூறியுள்ள குற்றச்சாட்டுகளுக்குத் தங்கள்பதில் என்ன?

**முத்துசாமி :** ஜெயலலிதா என்மீது குற்றம் சாட்டவில்லை. புரட்சித்தலைவரையும் அவரது ஆட்சியையும் களங்கப்படுத்தத் துணிந்து விட்டார்.

**தராசு :** கொஞ்சம் விளக்கக் கூற முடியுமா?

**முத்துசாமி :** புரட்சித் தலைவரின் மருத்துவ செலவிற்காக பஸ் அதிபர்களிடம் [illegible] டுள்ளார்.

**தராசு :** அப்படியானால் எம்.ஜி.ஆரின் மருத்துவ செலவிற்குப் பணம் வசூலிக்கப்படவே இல்லையா?

**முத்துசாமி :** புரட்சித் தலைவரின் மருத்துவ செலவிற்கு யார், யார் விரும்பி நிதி கொடுக்கிறார்களோ, அதை மட்டும் பெறலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. அதுவும் பெருந்தொகை கொடுப்பவர்கள் செக் மூலமும், டிராப்ட் மூலமும் வழங்கினார்கள். யாரிடத்திலும் கட்டாயப்படுத்தியோ, இல்லை, அவசியம் கொடுக்க வேண்டுமென்றோ கேட்கக் கூடாது என்பதை புரட்சித்தலைவரே அறிவித்து அதில் கடுமையாகவும் அவர் இருந்தார். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவரே பஸ் முதலாளிகளிடம் வசூல் செய்ய வேண்டுமென்று சொன்னதைப் போல் அவரைக் களங்கப்படுத்த எடுக்கப்பட்டுள்ள முயற்சி கடுமையான கண்டனத்துக்குரியது. நிச்சயமாகப் புரட்சித் தலைவரின் மீது பாசமுள்ள தொண்டர்களின் இதயம் இதைத் தாங்கிக் கொள்ளாது. எனவே, புரட்சித் தலைவரைக் களங்கப்படுத்தும் இந்தத் தீர்மானத்தை திரும்பப் பெறவில்லையெனில், புரட்சித் தலைவரின் ஆத்மாவே அவர்களை மன்னிக்காது.

**தராசு : பஸ் அதிபர்களிடம் பணம் வசூலிக்கப்பட்டதா, இல்லையா?**

**முத்துசாமி :** புரட்சித் தலைவருடைய மருத்துவ செலவுக்கென்றோ வேறு எதற்காகவோ பஸ் அதிபர்களிடம் பணம் எப்போதும் வசூலிக்கப்படவில்லை. தவறு செய்கிறவர்களைத் தண்டிக்க புரட்சித் தலைவர் என்றும் தயங்கியதோ, பயந்ததோ கிடையாது. பல முறை தவறு செய்து அத்தகைய தண்டனையைப் பெற்றவர் ஜெயலலிதா என்பது நாடறியும். ஆனால் 1980-லிருந்து தொடர்ந்து 8 ஆண்டு காலம் போக்குவரத்துத் துறையை என்னிடம் ஒப்படைத்திருந்தார். 1984-ல் நெடுஞ்சாலைத் துறையையும் அதற்குப் பின் பொதுத்துறையையும் அதன்பின் சிறுதொழில் துறையையும் என்னிடம் ஒப்படைத்தார்கள். இதைத் தற்பெருமையாகச் சொல்லவில்லை. ஜெயலலிதா கூறுவது போல, என்னிடம் புரட்சித்தலைவர் அவர்களுக்கு வருத்தம் இருந்திருந்தால் என்னிடம் இத்தனை பொறுப்புகளை ஒப்படைத்திருப்பார்களா?

**தராசு :** ஜெயலலிதா பிரதமர் ராஜீவ் காந்தியிடம் உங்களைப் பற்றிய குற்றச்சாட்டுகளைத் தர டெல்லி சென்றுள்ளாரே!

**முத்துசாமி :** டெல்லிக்கும் போகலாம்! எங்கும் போகலாம்!! அது அவர்களின் சுதந்திரம்! ஏன் டெல்லியிலேயே கூட 'செட்டில்' ஆகி விடலாம்.

**தராசு :** ஜெயலலிதா பற்றி நீங்கள் ஏதேனும் குற்றச்சாட்டுகளைச் சொல்ல விரும்புகிறீர்களா?

**முத்துசாமி :** எங்களுக்கு நிறைய வேலைகள் உள்ளன. அவற்றை முடித்து விட்டு ஜெயலலிதா பற்றிப் பிறகு சொல்கிறோம்.





முத்துசாமி



20

**கேள்வி: ஜெயலலிதா தான் எம்.ஜி.ஆரை திருமணம் பண்ணிக் கொண்டதாகச் சொல்லி வந்தாரே அது உண்மையா?**

பதில்: இது கடைந்தெடுத்த கப்சா. உண்மையான மனைவியாக இருந்த ஜானகி அம்மையார் கணவன் மறைந்ததும் பொட்டை அழித்துவிட்டார். ஆனால் மயக்கக்காரியான ஜெயலலிதாவோ தனது பொட்டின் அகலத்தையே அதிகமாக்கி விட்டார். முன்பு நெற்றியில் பொட்டு இருந்தது. இப்போது பொட்டில் நெற்றி புதைந்திருக்கிறது. எம்.ஜி.ஆர் எழுதிய உயிலில் ஒரு அங்கல நிலம் கூட ஜெயலலிதாவிற்கு எழுதவில்லை என்பதிலிருந்து என்ன தெரிகிறது?

**கேள்வி: ஜெயலலிதா ஒழுக்கம் இல்லாதவர் என்று மறைமுகமாகச் சொல்லி வருகிறீர்களே அந்தரங்க வாழ்க்கையை ஏன் அலசுகிறீர்கள்?**

பதில்: நம் தாய் சரியாக இருக்கவேண்டும். மனைவியும் மகளும் ஒழுங்காக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிற நாட்டில் முதலமைச்சராக ஆசைப்படுகிற ஒரு பெண் அடிப்படை ஒழுக்கத்தோடாவது இருக்க வேண்டாமா? ஜெயலலிதா போயஸ் கார்டனில் பூப்பறித்து விளையாடிக் கொண்டிருந்தால், அவருடைய ஒழுக்கத்தைப் பற்றி நாம் ஏன் கவலைப்படப்போகிறோம்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஹிர்வானி நிலைப்பாரா?

டெஸ்ட் பந்தயம் ஒன்றில் நீண்ட காலத்துக்குப் பிறகு, வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணியை இந்திய அணி சமீபத்தில் சென்னையில் வைத்துத் தோற்கடித்தது.

கடந்த ஆண்டில் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணியிடமும், ரிலையன்ஸ் கோப்பை போட்டியிலும் தோற்று உற்சாகமிழந்திருந்த இந்திய அணிக்கு இந்த வெற்றி ஒரு புத்துணர்ச்சியாக அமைந்தது.

பெருமைப் படத்தக்க இந்த வெற்றிக்கு ஒரு 19 வயது இளைஞர் காரணமாக இருந்தார்.

அவர்தான்—

சிறிய தோற்றமுடையவராக இருந்துகொண்டு பெரிய சாதனையைச் செய்த நரேந்திர ஹிர்வானி.

ஆம். இந்த சிற்றுளிதான் வெஸ்ட் இண்டீஸ் மலைக்கு எதிராக 16விக்கெட்டுகளைச் சாய்த்தது— அதுவும்தான் அறிமுகமான முதல் டெஸ்டிலேயே!

இவருடைய இந்த சாதனை, உலகிலேயே மூன்றாவதாகவும் இந்தியாவிலேயே முதலாவதாகவும் செய்யப் பட்டதாகும். இத்தனைக்கும் இவர் சுழல் பந்து வீச்சை (லெக்—ஸ்பின்) சுயமாகக் கற்றுக் கொண்டவர்.

10 ரஞ்சி டிராபி போட்டிகளிலும் துலிப் டிராபி போட்டியிலும் ஆடியுள்ள இவர், அதிலெல்லாம் குறிப்பிடும்படியான சாதனை செய்ய முடியாத குறுகுறுப்பை— விக்கெட் தாகத்தை சென்னை டெஸ்டில் தீர்த்துக்கொண்டு திடீர் ஹீரோவாகிவிட்டார்.

அவருடைய சாதனையை ஏற்றுக்கொள்ள யோசிக்கும் சிலர், அந்த 16 விக்கெட் அற்புதம் சென்னை பிட்சின் தன்மையால் விளைந்தது என்கிறார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. அதே பந்தயத்தில் வேறு சுழல் பந்து வீச்சாளர்கள் பந்து வீசவில்லையா என்ன? ரவி சாஸ்திரி, அர்ஷாத் அய்யூப் போன்ற சுழல்பந்து வீச்சாளர்களுக்கெல்லாம் ஒன்றிரண்டு விக்கெட்டுகளே விழுந்த வேளையில், ஹிர்வானியின் வலையில் மட்டும் ஏன் விக்கெட்டுகள் வரிசையாக வந்து விழ வேண்டும்?



சிறுவயது முதலே கிரிக்கெட்டில் அவருக்கிருந்த ஆர்வம் எதையாவது சாதித்தே ஆகவேண்டும் என்கிற அவருடைய முனைப்பு—அவருக்கே உரித்தான-அவராகவே கற்றுகொண்ட லெக்-ஸ்பின் திறமை ஆகியவையே அவருடைய இந்த இமாலய சாதனைக்கு ஏணிப்படிகள் ஆகின.

உலகின் தலை சிறந்த பேட்ஸ்மன்களில் ஒருவரான விவியன் ரிச்சர்ட்ஸின் விக்கெட்டைச் சாய்த்ததைப் பெரிய சாதனையாக கருதுகிறார் இவர். உண்மையிலேயே ஹிர்வானியின் பந்து வீச்சைத் தாக்குப் பிடிக்க முடியாமல்தான் ரிக்சர்ட்ஸ் கிளீன் போல்டு ஆனார்.

'இந்திய சுழல் பந்து வீச்சாளர்கள் எங்களை தோற்கடித்து விட்டார்கள். என்று சென்னை டெஸ்ட் பற்றி ரிச்சர்ட்ஸ் குறிப்பிட்டிருந்ததே இந்த உண்மைக்கு சாட்சி.

எந்நேரமும் கூலிங்கிளாஸுடன் காணப்படுகிறா ஹிர்வானி. 0.5 லிருந்து 0.75 மைனஸ் சக்தியுடைய இவருடைய கண்ணாடி. கண்களில் லேசான குறைபா உண்டு. அதற்காகவே கண்ணாடி அணிகிறார்.

ரஞ்சி டிராபி போட்டிகளில் இவர் கண்ணாடி இல்லாமல் பௌலிங் செய்ததும் உண்டு.

ஹிர்வானி திறமையாக பந்து வீசுகிறார் என்பதை ஏற்றுக்கொள்ளும் முன்னாள் சுழல் பந்து வீச்சாளர்கள் அவர் தம் திறமை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்கள்

இத்தனை இருந்தும்—

கிரிக்கெட் ரசிகர்களிடையேயும்-கிரிக்கெட் வல்லுநர்களிடையேயும் ஹிர்வானி பற்றி ஒரு கருத்து நிலவுகிறது.

1984-85ல் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 12 விக்கெட் எடுத்து பரபரப்பைஏற்படுத்தினார், தமிழகத்தைச் சேர்ந்த சிவராம கிருஷ்ணன். ஆனால், தொடர்ந்து வந்த ஆஸ்திரேலியாவில் நடந்த உலக கோப்பை போட்டி ஷர்ஜாவில் நடந்த ரோத்மன்ஸ் கோப்பை போட்டி ஆகியவற்றில் அவருடைய பந்து வீச்சு படுதோல்வி கண்டது. பின்னர் அவர் ஷைன் ஆகவே இல்லை— மங்கிப் போனார்.

அதுபோலவே, ஹிர்வானியும் ஆகிவிடுவாரோ என்பதுதான் ரசிகர்களிடையேயும் வல்லுநர்களிடையேயும் நிலவும்; அந்தக் கருத்து

அப்படி ஒரு சந்தேகம் தோன்றியதால் தானோ என்னவோ, இம்மாத இறுதியில் ஆசிய கோப்பைக்காக பங்களா தேஷ் செல்லும் அணியில் கிரிக்கெட் போர்டு ஹிர்வானியை அறிவிக்கவில்லை.

27

---

தமிழக சட்டமன்றத்தை கலைப்பதாக ஜனாதிபதி வெங்கட்ராமன் அறிவித்தார். எம்.ஜி.ஆர். மறைவிற்குப் பிறகு மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்ற அவைக்குள்ளேயே பாதுகாப்பு கொடுக்க இயலாத நிலையில் தமிழ்நாட்டு அரசியல் சூழ்நிலை நிலவுகிறது என்பது போன்ற பல்வேறு காரணங்களை உத்தரவில் சுட்டிக் காட்டி இருக்கிறார் ஜனாதிபதி!

---

ஜெயலலிதா பொதுக்கூட்டங்களுக்குச் செல்லும்பொழுது அவரது பாதுகாப்பிற்காக செல்ல 'புளூ கேட்ஸ்' என்ற படையை பாக்கூர் சுப்பிரமண்யம் என்பவர் அமைத்திருக்கிறார். நவீன கொரில்லா சண்டைகளில் பிரபலமான சில இளைஞர்கள் இந்த அமைப்பிற்கு உதவ முன் வந்துள்ளனர். பெரும் பொருட் செலவில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு படை இதுவாகத்தான் இருக்கும் என்று பிரபலமான கராத்தே வீரர் ஒருவர் கூறுகின்றார். அவரிடமும் சில ஆலோசனைகளை இவர்கள் பெற்றார்களாம்!

---

ஜனாதிபதி ஆட்சி தமிழ்நாட்டில் பிரகடனம் செய்யப்பட்டவுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்று ஒரு லிஸ்ட் தயாரிக்கப்பட்டிருக்கிறதாம். அந்த லிஸ்ட்படி மத்திய அரசு சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், அ.தி.மு.க.வில் ஜானகி தரப்பில் இருந்து காங்கிரசை கடுமையாக எதிர்ப்பார்கள் என்று நினைக்கப்படுபவர்களை அரசியல் ரீதியாகவும் அடக்கி ஒடுக்கும் வகையில் இருக்கும் என்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஜனாதிபதி ஆட்சி என்பது • குட்டிமிசா போல் நடத்த வேண்டும் என்று மத்திய அரசியல் விவகார கமிட்டி கூட்டத்தின் போது ராஜீவ் காந்தியிடம் தெரிவிக்கப்பட்டது என்கிறார்கள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இராமர் அவதார புருஷர்; ஆகவேதான் அவர் கதையை நான் எழுதுகிறேன் என்று பாயிரத்திலே பாவாணர் பகர்கிறார். அத்தகைய சத்புருஷர் மட்டுமல்ல, தேவ புருஷர். எவ்வித மான நினைப்பு நடவடிக்கை கொண்டவராக இருந்தார் என்பதைக் கவி, எவ்விதத்திலே தீட்டிக் காட்டுகிறாரோ, அதற்கேற்றவண்ணமே, மக்களின் மனம் மாசு அடைவதோ, தூய்மை பெறுவதோ இருக்கமுடியும். உப்பிலாப் பண்டமும், உப்பே அளவுக்கு மீறிக் கொட்டப்பட்ட பண்டமும், இரண்டும் குப்பைக்கேதான்! மனமயக்கம் போக்கும் மருந்து, பிறவிப் பிணி போக்கும் மருந்து, புண்யலோகம் புக அனுமதிச் சீட்டு என்றெல்லாம் இராம காதையைப் பெருமையாகக் கூறுகின்ற னர் அத்தகைய உயரிய சத்கதையிலேவரும் உத்தம புத்திர ரின் உரையாடல் வெளிப்படுத்துகின்ற காம உணர்ச்சியும், அவருடைய கடவுள் தன்மையையா காட்டுகிறது என்று கேட்கிறேன்? என்ன பலவிதமான உணர்ச்சி உண்டாகும் ராமரின் வாயுரைகளை கம்பர் தீட்டியுள்ளபடி பார்த்தால் என்ன என்பதை யோசியுங்கள்!

கானகம் புகுந்த காகுத்தன், தன் காதற் கிழத்திக்குக் காட்டுக் காட்சிகளைக் காட்டுகிறார்; கீதம் பயிலும் குயிலையும், நடனமாடும் மயிலையும், கிளை தாவும் குரங்கினையும், தாவிடும் மானையும் சீதைக்குக் காட்டுகிறார், அம்மையின் சித்தம் களிக்க. மிகுதியால், அம்மையை ''ஆருயிரே! அயோத்தி இழந்த அமிர்தமே! அஞ்சுகமே! வைதேஹி! மிதிலாமணி! ஜானகி! இராமப் பிரியை!'' என்று பலப்பல கூறி மகிழ்ந்திருக்கலாம்; அன்பர்ச்சனை செய்திருக்கலாம் அவ்விதமாகக் கவி எழுதி யிருந்தால், பொருத்தமாகவும், கச்சிதமாகவும், தூய்மையைத் தருவதாகவும் இருக்கும். ஆனால் சீதைக்குக் காட்டுவளம் காட்டுகையில், இராமர் தேவியை வர்ணிப்பதாகக் கவி அமைத்திருக்கும் செய்யுட்களைப் பார்த்தால், இராமர் சொல்லப் போந்த விஷயம் காட்டு வளம் பற்றியல்ல. தன் காதலியின் கொங்கையைப் பற்றிய வர்ணனையைக் கூறுவதி லேயே அவர் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார் என்பதுவிளங்கும்.

## டோஸ் நெ. 5

சித்திரக்கூட பருவத்திலேயே, இங்ஙனம் சீதையின் ~~மேலிடத்தைச் சிரமங்கருதாது, சிரத்தையுடன் வர்ணிக்கும்~~ படியான அளவு, அவருக்கு அம்மையின் அந்த அங்கங்களிடம் ''மோகம்'' இருந்தது என்பதற்கு பிறிதோரிடத்திலே கம்ப னின் கவி சான்று தருகிறது, சித்திரக்கூடத்துப் பேச்சு இராமரின் மொழி வண்ணத்தைக் காட்டுவதுபோல, நான் குறிப்பிடப்போகும் மற்றோர் பாடல், அவருடைய விழி வண் ணத்தை விளக்கும் விதத்தது. சித்திரக்கூடச் செய்யுட்களைப் படித்தபிறகு ''சீச்சீ! இப்படி எல்லாமா ஒரு கணவன் தன் மனைவியை அர்ச்சித்திடுவான். அதிலும் கடவுள் அவதார மெடுத்தது இத்தகைய ஆபாச வர்ணனைகளுக்காகவா,'' என்று சிந்திப்பீர்கள். நான் கூறப்போகும் மற்றோர் பாடலைப் படித்ததும், ''அடடே சொல் மட்டுமல்ல, செயலும் மோச மாகத்தான் இருக்கிறது'' என்று கூறித்தீரவேண்டி நேரி இந்த விழிவண்ணம், இராமருடைய கைவண்ணத்த தாடகை மாண்டதையும், கால் வண்ணத்தால் அகலி மீண்டதையும் விசுவாமித்திரர் கண்டு வியந்தாரா அதற்குப் பிறகு நேரிட்டது.

புலவர் பெருமக்கள் பூரிப்போடு கூறுவர், இராம சீதையும் ஒருவரை ஒருவர் சந்தித்த காட்சியைக் கப வருணித்துள்ள வகையினை; குறள் அதிலேவைத்து இழைக் பட்டிருப்பதைக் கூறி மகிழ்விப்பர். கண்ணோடு கண் கல நேர்த்திதான் என்னே, என்னே, என்று கூறி வியப்பர். அ கண்ணைக் கண் கவ்விற்று என்று கனிவுடன் கூறுவா உண்மைதான். ஆனால் இராமனின் கண் செய்த மற்ற செயலை மட்டும் அவர்கள் கூறுவதில்லை. கூறினால் க வண்ணம் வெளியாகிவிடுமே என்று கவலை கலாரசிகர்களுக் பகவானின் செயல் மைனரின் செயல் போலவன்றோ தோல் விடும் என்ற பீதி பக்தர்களுக்கு; எனவே இரு சாராரு அந்தச் சம்பவத்தை தீட்டுகையில் கண்ணைக் கண் சந்தித்தன மட்டுமே கூறுவர்.

அவர்கள் கூறிக்களிக்கும் கவிதையும், கூறாது மறை திடும் கவியும் பாலகாண்டத்திலே, மிதிலைக் காட்சிப் படல திலே இருப்பவை; 35-ம் பாடல் அவர்கள் முறுவலுட கூறுவது; முடிபோட்டு விடுவது 36-வது செய்யுள் முன்னதிலே அவர்கள், பதப்பொருள், பொதுப் பொரு எனப் பலப்பல விதமாகக் கூறிடும் அடிகள்.

''கண்ணொடு கண்ணினைக்
கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெரு
துணர்வு மொன்றிட
வண்ணலு நோக்கினா
னவளு நோக்கினாள்''

இராமனின் கண் சீதையின் கண்ணைக் கவ்விற்றும் சீதையின் கண் இராமரின் கண்ணைக் கவ்விற்றும்; இருவரு கும் ஏககாலத்தில ஒரேவிதமான இன்பம் உண்டானதால் இருவர் உணர்வும் நிலை பெயர்ந்து ஒன்றாகிவிட்டது. ஐயனு நோக்கினான்; அம்மையும் நோக்கினாள்; இது அவ்வடிகளின் பொருள். இத்துடன் தீரவில்லை காட்சி, 36ஆம் பாட இராமரின் விழி சீதையின் விழியைக் கவ்வியதோடு நிற்காது வேறு வேலையிலே ஈடுபட்டதைக் காட்டுகிறது. என்ன வேலை விதி திரியும் காளைக்குத் தரும் வேலை தான்! வேந்தனின் மகனானாலும் விஷ்ணுவின் அவதாரமானாலும், கண்ணனின் காரியமென்னவோ அவருடைய நிலைமை அந்தஸ்துக்கு ஏற்ற தாக இருக்கவில்லை படியுங்கள் இப்பாடலை.

''நோக்கிய நோக்கெனு
நுதிகொள்வேலிணை
யாக்கிய மதுகை
யான்றோளினாழ்த்தன

www.tamilarangam.net

விக்கிய கனைகழல்
வீரன் செங்கணுந்
தாக்கணங்கனைய
வடனத்திற்றைத்தானே.''

நோக்கிய நோக்கு எனும்-பிராட்டி பார்த்த பார்வை யென்கின்ற; நுதிகொள்வேல் இணை—கூர்மையைக் கொண்ட வேலாயுதங்கள்; ஆக்கிய மதுகை யான் வளர்ந்த வலிமை யையுடைய இராமனது; தோளின் ஆழ்ந்தன—புயங்களிலே அழுந்தின,

இது சீதையின் செயல்! தன்னைக் கண்டும் காணச் செய்தும் களிப்பூட்டிய காவலரின் தோள்மீது, அத்தோகையாளின் கண்கள் பாய்ந்து தங்கின. இராமனுடைய கண்கள் என்ன செய்தன! சீதையின் செந்தாமரை முகத்திலே மொய்த் தனவா? இல்லை! பாருங்கள் பாடலின் மற்ற இரு அடிகளை,

விக்கிய கனைகழல் வீரன்—கட்டப்பட்டு ஒலிக்கின்ற வீரக் கழலையுடைய வீரனாகிய இராமனும்,

செங்கணும் —சிவந்த கண்களும்; தாக்கு அணங்கு அனைய வள் தனத்தில்—மோகினி என்னும் பெண் தெய்வத்தை நிகர் பிராட்டியினுடைய கொங்கைகளிலே.

தைத்த—தைத்தன; பாய்ந்து சென்று தாக்கின.

எப்படி இருக்கிறது அண்ணலின் கண் வண்ணம்! இனி, காளைகட்குக் கவலை ஏன்? கடவுளுக்கே கன்னியைக் கண்டதும் கண்கள் தனத்தில் தைத்திடுமாமே! இந்திரியங்களெனும் துட்டத் தோழர்களால் ஆட்டுவிக்கப்படுகிற சாமான்யர்களின் நிலைமை எப்படி இருந்தால்தானென்ன! மன்னனே இந்நிலையில் இருந்ததால்தான் போலும், அயோத்தியின் மதுகை மைந்தர்கள் மாதரின் மறைவிடம் தெரியுமா, தெரிசனம் கிடைக்குமா என்று தவித்துக் கிடந்ததாகக் கவி கூறியிருக்கிறார். மன்னனுக்கு ஏற்ற மக்கள், மக்களுக்கு ஏற்ற மன்னன்! கடவுள் ரசம் கடுகத்தனையும் காண இயலாத இக் காம ரசத்தைத்தான் கலா ரசிகர்கள் விடமாட்டோம் என்று கூறுகின்றனர்.

கிடக்கட்டும்; ஐயன் மேலிடத்தோடாவது விட்டாரா! மீண்டும் சற்று நேரம், மிதிலையைவிட்டுச் சித்திரக்கூடம் செல்வோம் வாரீர், செம்பொன்னுலான சிமிழ் போன்ற கொங்கை என்ற வாணையுடன் இராமன் திருப்தி பெறுமல் சீதையின் எதிரில் சீதையின் மறைவிடத்தின் மாண்பினை, அளவு, அமைப்பு, அழகு முதலியவற்றை வர்ணிக்கிறார் என்மேல் கோபியாதீர்! கம்பதாசர்களே! நானென்ன செய்வேன், ஏட்டில் உள்ளதை நாட்டவருக்கு எடுத்துக்கூறுகிறேன். நீங்கள்தானே கம்ப இராமாயணத்தைக் கல்லாத கசடரா அதுபற்றிக் கருத்துரை கூறுவது என்று கனல் கக்கினீர். இதோ, கம்ப இராமாயணத்திலே கற்றதைச் சாற்றுகிறேன். விழியில் புனல் சோர நில்லாதீர்.

''ஆசைக்கினியவளே! ஆரணங்கே! பச்சைக்கிளியே! பசும்பொற் பதுமையே! என்ற சாதாரண மொழிகளைக் கேட்டிருப்பீர்கள். மனையாளின் மார்பக மாண்பினைக் கணவன் கூறக் கேட்டிருக்க மாட்டீர்கள்; மனையாளின் மறைவிடத்தைப் பற்றி ஓர் மணாளன் மொழிந்திடக் கூடுமென்று எண்ணுவதே இழுக்கு என்று கூறுவீர்; உண்மைதான் இந்த உலகிலே மத போதனைக்காக என்று மக்கள் கொண்டாடும் எந்தக் காவியத்திலும் காண முடியாததைக் கம்ப ரசத்தில் காணலாம். அயோத்தியா காண்டம், சித்திரக் கூடப் படலம் 31-வது செய்யுள் முதல் அடியைச் சற்றே பாருங்கள். வனத்தின் வசீகரக் காட்சிகளைப் பிராட்டிக்குப் பெருமான் காட்டிவரும்போது மங்கையின் மனமகிழ மலருகிறார், அங்க வர்ணனையை. அது இது;

பாந்தடேரிவை பழிபடப்
பரந்த பேர் அல்குல்

ஜானகிக்குத்தான்! கணவன் தரும் நற்சான்று! மிதிலை அரசிளங்குமரி அயோத்தி இளவலின் அன்பு மனைவியின் அல்குலின் அளவு, அமைப்பு பற்றி அரியின் அவதாரம் கூறுகிறாராம்!

பாந்தள்—பாம்பின் படமும், தேர்—தேர்தட்டும், இவை—(ஆகிய) இவைகள், பழிபட—உவமையாகாததால், பழிப்புடைய பரந்த—பரவிய அகலமான; பேர் அல்குல்—பெரிய அல்குலை உடையவளே! பாபம்! இந்த வர்ணனையைக் கேட்ட ஜானகி, எவ்வளவு வேதனைப்பட்டார்களோ நானறியேன். கணவன் மனைவியிடம் பேசும் மொழிதானா இது? இதுதான் கலையா? இதுதான் பக்தி ரசமா? பாந்தள், தேர்தட்டு எனும் இவைகளும் தோற்கும்படியான பரவைப்பேர் அல்குல் பற்றிய பாடல் இல்லாவிட்டால் பகவானின் அவதார மகிமையைப் பக்தர்கள் ரசித்திட முடியாது என்று கவி இதனை இவ்வளவு கவலையுடன் தீட்டினார் என்று கேட்கிறேன். இவ்விதமான கம்பரசத்தைப் பருகிக்களிப்பதா, கலைவாணரின் கடன்? எனக்குக் குமட்டுகிறது தோழர்களே உங்களுக்கு எப்படியோ?

செல்வத்தைத் தூய்மைப்படுத்துவதற்கு நான் மூன்று வழிகளைக் காண்கிறேன். முதலாவது செல்வம் நியாமான வழிகளில் சம்பாதிக்கப்படவேண்டும். இரண்டாவது நியாயமான வழிகளில் அது செலவிடப் படவேண்டும். மூன்றாவது தகாத வழிகளில் அது செலவு செய்யப்படுவதைத் தடை செய்யவேண்டும்,

—ஹஸரத் உமருல் பாருக் (ரலி)

செல்வப் பை பெரிதாகப் பெரிதாக ஒருவனுடைய கன்னமும் பெரிதாகின்றது. செல்வப்பை சிறிதாக ஆக ஒருவனுடைய கன்னமும் வற்றி விடுகிறது. செல்வம் வந்ததும் அறிவற்ற மூடன்கூட அறிவாளி போல் ஆகிவிடுகின்றான். அவன் வாயிலிருந்து வரும் முட்டாள் தனமான சொற்கள்கூட சமூகச் சட்டங்கள் ஆகிவிடுகின்றன.

—டான் க்விக்ஸாட்

ஒரு கருமி எப்படிச் செல்வத்தைப் பாதுகாத்து வருவானோ அதுபோலவே பொது செல்வத்தைப்பாதுகாப்பதிலும், செலவழிப்பதிலும் எனக்குக் கவனம் அதிகம் இருக்கும்.

—மகாத்மா காந்தி

செல்வந்தர்கள் உடல் நலம் குன்றியபோதுதான் செல்வத்தின் வலுவில்லாத தன்மையை உணர்கின்றார்கள்.

—கால்டன்

செல்வம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது செல்வம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது.

—ஸ்பானிஷ் பழமொழி

உள்ளே ஒரு எதிரி இருப்பதைவிட வெளியே ஆயிரம் இருப்பது மேலானது.

—அரேபியா

நெருப்புக்காகப் புகையைப் பொறுத்துக் கொள்கிறோம்.

—ஜெர்மனி

நோய் வந்தபோது ஒருவன் தன் உயிரைப் பற்றி நினைக்கிறான்; சுகமானபோது பணத்தைப் பற்றி நினைக்கிறான்.

—ஜப்பான்

வயோதிகனொருவன் இருக்கும் ஒரு குடும்பத்தில் ஓர் இரத்தினம் இருக்கிறது.

—சீனா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பிரபாகரன் வீழ்த்தப்பட்டால்

## தாய்த் தமிழகம் வடிக்கும் ரத்தக் கண்ணீர்

# "எரிமலை குழம்பாகி பொங்கி வழியும்!"

# "அதன் பிறகு ஏற்படும் பிரளயத்தை அடக்க முடியாது!"

பிரபாகரன் வீழ்த்தப் பட்டால் தாய்த் தமிழகம் ரத் தக் கண்ணீர் வடிக்கும்; எரி மலை குழம்பாகி பொங்கி வழியும்; அதன் பிறகு ஏற் படும் பிரளயத்தை அடக்க முடியாது என்று கருணாநிதி ஆவேசக் குரல் எழுப்பி உள் ளார்.

மேலும் இது குறித்து எழுதி இருப்பதாவது:-

**மார்தட்டும் ராஜீவ்காந்தி**

அப்பாவித் தமிழர்களை மட்டுமல்ல; விடுதலைப் புலி களையும் தான் எதற்காகக் கொல்ல வேண்டுமென்று இத்தனை பெரிய படை யெடுப்பை ராஜீவ்காந்தி நடத்துகிறார்?

அந்தத் தமிழர்களும் போராளிகளும் இவரை நம் பியிருந்ததற்கு இவர் தரும் பரிசு இதுவா?

பாலஸ்தீன விடுதலை கீதம் என்றால் பாரதப்பிரதமர் காதுகளுக்குப் பைங்கிளி யின் மழலையமுதம் போல் இனிக்கிறது.

நமீபியா விடுதலை இயக்க மெனிலோ ராஜீவின் நரம்பு மண்டிலமே யாழிசையைப் பொழிகின்றது!

ஆனால் தமிழினம் இலங்கையில் அமைதியாக வாழ- உரிமைப்போர், விடு தலைப் போர் நடத்துகிறது என்றால் அந்த இனத்தையே தரை மட்டமாக்குகிறேன் என்று தொடை தட்டுகிறார் காந்தியின் பெயரைத் தன் பெயருடன் இணைத்துக் கொண்டிருக்கும் ராஜீவ்!

**விடுதலை குரலை ஒடுக்க முடியாது**

இன்றோ நாளையோ இன்னும் சில நாட்களிலோ அல்லது இதனை நான் எழு திக் கொண்டிருக்கும் போதோ பிரபாகரனை வீழ்த்தி விட்டோம் என்று இந்திய அரசு எக்காள முழக்க மிடக் கூடும்!

ஆனால் அப்படியொரு செய்தி வருமேயானால் தாய்த் தமிழகம் வடிக்கும் ரத் தக் கண்ணீர்; எரிமலைக் குழம்பாகிப் பொங்கி வழி யும் காலம் வெகு தொலை வில் இல்லை என்பதை நான் உணர்த்துவதற்கு கட மைப்பட்டிருக்கிறேன்.

ஒரு பிரபாகரனை அழித்து விட்டால் ஓய்ந்து விடும் தமிழ் ஈழவிடுதலைப் போர் என்று ராஜீவ்காந்தி எண் ணக் கூடும்!

அவர் ஆளுகிற இந்த இந்திய நாட்டு விடுதலைக் குரலை ஒடுக்க நினைத்த ஆங்கிலேயன் எத்தனையோ விடுதலை இயக்கத் தலைவர் களைத் தீர்த்துக் கட்டி னான்- தூக்கில் தொங்க விட்டான்; ஆனால் அந்தத் தலைவர்கள் செத்தார்களே தவிர- அவர்கள் மூட்டிய விடுதலைத் தணல் அணைய வில்லை! அணைக்க முடிய வில்லை!

**வரலாற்று கட்டாயம்**

சொந்த நாட்டு வர லாற்றை மறந்து விட்டு, ராஜீவ்காந்தி; இலங்கையில் இந்திய ராணுவத்தை வைத்து இறுதிப் போர் நடத்து வாரேயானால்- அது ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் நிச்சயம் இறுதிப் போராக இருக்காது! பெரும் பூகம்பக் குலுக்கலையும் அத னால் ஏற்படும் சேதங்களை ...

இயலாத காரியம்!

இதனை உணர்ந்து; தமி ழின அழிப்புப் படலத்திலி ருந்து ராஜீவ்காந்தி- தன்னை விடுவித்துக் கொள்ள வேண் டும்!

பிரபாகரனை அழித்து விடலாம்; அதன் பிறகு ஏற் படும் பிரளயத்தை அடக்க முடியாது!

அந்த பிரளயம்; உடன டியாக வராவிடினும் என்றோ ஒரு நாள் வந்தே தீரும்! அது வரலாற்றுக் கட்டாயம்!

மேற்கண்டவாறு கருணா நிதி குறிப்பிட்டு உள்ளார்.

# பிரபாகரன் பிடிபடுவாரா?

கொழும்பு, பிப். 13— விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒளித் திருக்கும் இடத்தை இந் திய ராணுவம் சுற்றி வளைத் துக் கொண்டுள்ளது.

அவரை உயிருடன் பிடிக்க தீவிரமாக முயற்சி நடைபெற்று வருகிறது.

கடந்த ஆண்டு அக்டோ பர் மாதம் விடுதலைப்புலி களை ஒடுக்க இந்திய ராணுவம் தனது நடவடிக் கையைத் தொடங்கியது. இந் தியப்படை யாழ்ப்பாணத்தை கைப்பற்றி, இப்போது கிழக்கு மாகாணத்தில் ஆயுத பறிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்திய ராணுவத் திடம் பிடிபடாமல் கடந்த நான்கு மாதங்களாகப் பிரபா கரன் தப்பி வருகிறார்.

இப்போது பிரபாகரன் தான் பிறந்த ஊரான வல் வெட்டித்துறையில் கறுப்பு புலிகள் என்று அழைக்கப்படு கிற தனது மெய்க்காவலர்கள் 150 பேருடன் ஒளிந்திருக் கிறார்.

அந்தப் பகுதியை இந் திய ராணுவம் இப்போது சுற்றி வளைத்துள்ளது.

பிரபாகரன் இம்முறை பிடிபடுவது உறுதி என்று ராணுவ அதிகாரிகள் நம் பிக்கை தெரிவித்தனர்.

**பிடித்தது கால் கோடி**

கடந்த வாரம் டில்லியி வருமான வரித் துறை அ காரிகள் திடீர்ச் சோதனை நடத்தி கணக்கில் காட்ட படாமல் மறைத்து வைக்க பட்டிருந்த தங்க நகைகள மற்றும் ரொக்கம் கைப்பற் னர். இவற்றின் மொத் மதிப்பு ரூபாய் 25 லட்சம

ஜெயலலிதாவின் ஆரம கால (எம்.ஜி.ஆர். உயிருட இருக்கும்பொழுதே)— ஆதரவாள பாக்கூர் சுப்பிரமணியம். இ செங்கற்பட்டு மாவட்ட கட்சி தலைவரும் ஆவார். சமீபத்தி வீரப்பன் ஆதரவாளர்கள் மாவ டக்குழுவை கூட்டி இருக்கின்றன ஒரு தொண்டர் அவைத் தலை எங்கே என்று கேட்க, ஏ.சி. ச மூகம் எம்.பி. எழுந்து அவை தலைவர் பாக்கூர் சுப்பிரமண்ய இறந்து விட்டார்' என்று அறிவித் ராம்!

* * *

காங்கிரஸ் காரர்களின் ப விப்பசி நாடறிந்ததுதான். ஒ சுவையான செய்தி! வால்பான தொகுதி காங்கிரஸ் எம்.எல். தங்கவேலு அனுப்பியுள்ள பு தாண்டு வாழ்த்தில் கீழே வருங்கா அமைச்சர் என்று எழுதி கையெழு துப் போட்டு அனுப்புகிறார் என் வாழ்த்தைப் பார்த்த நிருபர்கள் சொல்லிச் சொல்லி சிரிக்கின்றனர்.

* * *

25

www.tamilarangam.net

# ராஜீவின் நண்பரும் மக்களின் பகைவர்களும்

தமிழ்நாட்டு அரசியலில் பதவி எலும்புத்துண்டுகளுக்காக தெருநாய்களைப் போல பல்வேறு அ.இ.அ.தி.மு.க. கோஷ்டிகளும் காங்கிரஸ் கட்சியும் நாக்கில் எச்சில் ஊற அலைந்துகொண்டு சண்டை போட்டுக் கொண்டிருக்கிற அதே வேளையில்—

இந்திய மக்களும் தமிழக மக்களும் மிகப்பெரும் அவமானத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சி பத்திரிகைச் செய்திகளில் மூலையில் முடங்கிப்போய் விட்டது.

ராஜீவ் காந்தியின் அரசு இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனேவைக் குடியரசு நாள் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க அழைத்தது எவ்வளவு கேவலமான செயல் என்பதை இந்தியா முழுவதிலும் உள்ள பல்வேறு எதிர்க்கட்சிகள் தமது அறிக்கைகளில் சுட்டிக்காட்டி இருக்கின்றன.

ஈழத் தமிழர்களை கொன்று குவித்த கொடுமை, சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கி, பத்தாண்டு காலமாகத் தேர்தலே நடத்தாமல் சர்வாதிகாரம் செய்துவரும் அராஜகம், இந்திய ராணுவத்தை ஒப்பந்த சூழ்ச்சியால் இலங்கைக்கு வரவழைத்து அவர்களை சாகவிட்டுத் தன் சிப்பாய்களையும் பொருளாதாரத்தையும் காப்பாற்றியதாகப் பெருமையடித்துக் கொண்ட அகங்காரம்- அத்தனைக்கும் சொந்தக்காரரான ஜெயவர்த்தனேவை, சமாதானத் தூதராக வர்ணித்து, குடியரசுநாள் விருந்தினராக அழைத்த, ராஜீவ் காந்தியின் செய்கை மனிதகுலத்துக்கே அவமானம் தருவதாகும்.

கழைக்குதவாதஏட்டுச் சுரைக்காய் ஒப்பந்தத்தைக் கூட சரியாக நிறைவேற்றாத ஜெயவர்த்தனேவின் பதவியைக் காப்பாற்றுவதற்காக கூலிப்படையாக நமது ராணுவத்தை ராஜீவ் காந்தி அனுப்பியது தேசத் துரோக செயலென்றால், இப்போது ஜெயவர்த்தனேவை அழைத்ததை வர்ணிக்க வேறு சொல்லில்லை.

ஜெயவர்த்தனேவை இந்தியக் குடியரசு நாளின் விருந்தினராக அழைத்தது பற்றி மக்கள் வருத்தப்பட நியாயம் இருந்தாலும், ராஜீவ் காந்தி வருத்தப்படாமல் இருப்பதிலும் நியாயம் இருக்கிறது. ஒரு அராஜகவாதியோடு இன்னொரு அராஜகவாதி விருந்துண்பது பொருத்தம்தானே!

ஈழத் தமிழர்களின் மொழியுரிமையை இலங்கை அரசு நசுக்கியதுபோல இந்தியாவிலும் காங்கிரஸ் ஆட்சி இந்தி பேசாத மாநில மக்களின் மொழியுரிமையை நசுக்கி வந்திருக்கிறது. நவோதயா பள்ளிகளின் வாயிலாக மறைமுகமாக மொழித் திணிப்பையும் மேல்தட்டு கலாச்சாரத்தையும் திணித்திருக்கிறது. இலங்கை அரசு ராணுவக் கொடுமைகள் செய்தது போல இந்திய காங்கிரஸ் ஆட்சியும் வடகிழக்கு மாநிலங்களில் ராணுவத்தின் மூலமாகவும், மதக் கலவரம் நடந்த சில பகுதிகளில் தானே மதக்கலவரத்தைத் தூண்டியும் அராஜகங்கள் செய்திருக்கிறது. இந்திய அரசு ஒரு கூட்டாட்சி அரசு என்ற தத்துவத்தைப் புறக்கணித்து மாநில உரிமைகளைத் தர மறுத்து, குறிப்பாக நிதி ஒதுக்கீட்டில் பெரும் அநீதி செய்து வருவதை இந்தியாவில் பல மாநில அரசுகள் சுட்டிக்காட்டி கண்டித்திருக்கின்றன.

'நான் நினைத்தால் யாரையும் எம்.பி. ஆக்கலாம்; நீக்கலாம்' என்று சட்டம் போட்டே ஆட்சி செலுத்தும் ஜெயவர்த்தனே மீது, ராஜீவ் காந்திக்கு அன்பிருப்பதில் வியப்பில்லை. பத்திரிகையாளர் கூட்டத்தில் உயர் அரசு அதிகாரியை டிஸ்மிஸ் செய்ததைப் பற்றி இன்றளவும் வருத்தம் தெரிவிக்காதவர் அல்லவா அவர்!

எனவே ஜெயவர்த்தனே- ராஜீவ் காந்தியின் நட்பின் வெளிப்பாடாகவே ஜெயவர்த்தனே இந்தியாவுக்கு ஆறுநாள் பிக்னிக் வந்திருக்கிறார் என்பதையும் இருவரும் ஒரே சர்வாதிகாரக் குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதையும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதிலும் குறிப்பாகத் தமிழக மக்களோ இப்போது இங்கே நடக்கும் பதவிச் சண்டையில் கூட ராஜீவ் கட்சியின் கொடுங்கரம் டெல்லியிலிருந்து சென்னை வரை நீண்டு வந்து வேலை செய்வதை சேர்த்துப் புரிந்துகொள்ள வேண்டும்.

இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் தமிழக லாவணிச் சண்டையின் சுவாரசியத்தில் மெய்மறந்தால் இன்னும் பத்தாண்டுக்கு விமோசனமே வராது.

கட்டுபாடில்லாமல் வாழ்கிறவன் கௌரவமில்லாமல் சாவான். —ஐஸ்லாந்து

அநாதையின் கண்ணீர் ஆண்டவனிடம் செல்கிறது. —இத்தாலி

எல்லாரும் ஒவ்வொருவனுக்காகவும் ஒவ்வொருவனும் எல்லாருக்குமாகப் பாடுபட வேண்டும். —ரஷ்யா

அதிகமாகத் தின்பவனுக்கு அறிவு மட்டு. —செக்கோஸ்லோவக்கியா

## ஒரு புத்திசாலி...

தமிழகத்தில் உள்ள பிரபல தொழிலதிபர் இராமசாமி உடையார் ஜா. கோஷ்டிக்கு நெருக்கமானவர். அவருக்குத் தொழில் விரோதி ஒருவர் பெங்களூரில் உள்ளார். உடையார் சாம்ராஜ்யம் கர்நாடகாவில் விஸ்தரிக்கப்பட்டதால் வருமானம் இழந்தவர் அவர். தமிழகஅரசியலில் நிலவும் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு உடையாரை ஒழித்துக் கட்டத் திட்டமிட்டார் அவர். அதற்காக ஜெ. கோஷ்டியை அணுகினர். விஷயம் தெரிந்த உடையார் பதறிப் போனர். உடனே அவரே ஜெ. கோஷ்டியை அணுகி, "வேண்டியதைச் செய்கிறேன். வேற்று ஆள் தொடர்பு வேண்டாம்" என்று கூறிச் சமாதானப் படுத்தி விட்டாராம். முதல் தவணையாக ரூ.50 லட்சம் தரப்பட்டதாம்! சபாஷ், பிழைக்கத் தெரிந்த புத்திசாலி!

## ஒரு அங்கலாய்ப்பு!

தமிழக எம்.எல்.ஏக்களின விலைபற்றிப் பேச்சுக்கள் அடிபடுகின்றன. திண்டுக்கல் எம்.எல்.ஏ. பிரேம் குமார், அமைச்சர் வி.வி. சுவாமிநாதன் இருபது லட்ச ரூபாய் கொடுத்து அவரை விலைக்கு(!) வாங்க முயற்சித்ததாகப் பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டார். இந்தச் செய்தி ஜா. கோஷ்டி எம்.எல்.ஏக்களுக்கு ஆத்திரத்தை கொடுத்துள்ளது. ஏனென்றால் அவர்களுக்குப் பேசப்பட்டதே பத்து லட்ச ரூபாய் தானம்! அதிலும் மூன்று லட்சம் தான் அட்வான்ஸாகத் தரப்பட்டதாம். மீதி ஏழு நம்பிக்கை ஓட்டெடுப்புக்குப் பிறகு தானம்! ஒருவேளை ஓட்டெடுப்பில் தோற்றுவிட்டால், அந்த ஏழு ரூபாயை யாரிடம் போய்க் கேட்பது என்று அங்கலாய்த்துக் கொண்டார் ஒரு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.

www.tamilarangam.net

# போராளிகளின் கோளாறுகள்



போராளிக் குழுக்களைப் பொறுத்த மட்டில் ஈழத்தமிழர்களின் பிரச்னை பற்றிய வரலாறின் அடிப்படையில்தான் அவர்களுடைய நடவடிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டும்.

தொடர்ந்து பல வருடங்களாக வெவ்வேறு தமிழ்த் தலைவர்கள் இலங்கை அதிபர்களுடன் ஒப்பந்தங்கள் போட்டும் எந்த ஒப்பந்தப்படியும் தமிழர்கள் பிரச்னைகளைத் தீர்க்க இலங்கை அரசு முன் வரவில்லை. அப்படிப்பட்ட நிலையில், மிதவாதக் கட்சித் தலைமைகள் மீது வெறுப்புற்ற இளைஞர் பிரிவுகளே ஆயுதமேந்தத் தொடங்கின.

கடைசியாக நடந்த தேர்தலில் மிதவாதக் கட்சியான அமிர்தலிங்கத்தின் ஐக்கிய முன்னணி தான் வென்றால் தனித் தமிழ் ஈழம் பெறப்போராடுவதாக தேர்தல் வாக்குறுதி அளித்தே வெற்றி பெற்றது.

தேர்தலுக்குப் பின் எப்போதும் போல இலங்கை அரசால் ஏமாற்றப்படுவதே தொடர்ந்தது. இதையடுத்து ஆயுதமேந்திப் போராடித் தனி ஈழம் பெறப் பாடுபடுவதே சரி என்று கருதுவோர் எண்ணிக்கை அதிகரித்தது.

சிங்கள ராணுவத்தின் அடக்குமுறை அதிகரித்து, யாழ் நூலக எரிப்பு, இளைஞர்கள் சித்ரவதை எனப் பல சம்பவங்கள் நடக்க நடக்க, போராளி இயக்கங்கள் வளர்ந்து பலமடைந்தன. 1983 வெலிக்கடை சிறையில் தமிழ்கைதிகளைக் கொன்ற நிகழ்ச்சி இறுதி அடி போல வந்தது. முழுமையான ஆயுதப் போராட்டத்தில் ஈழம் இறங்கிவிட்டது.

அதே சமயம் போராளி இயக்கங்கள் பல்வேறு விதமாக உடைந்ததற்கானப் பல காரணங்களையும் பார்க்கவேண்டும். பெரும்பாலானவை தமிழர்களுக்கு சுயாட்சி உரிமை, தமிழின உணர்வு என்ற அடிப்படையில் மட்டுமே உருவானவை. இப்படிப்பட்ட இயக்கங்களாக சிறீ சபாரத்தினத்தின் டெலோவையும் பிரபாகரனின் புலிகளையும் குறிப்பிடலாம். சோசலிசம் போன்ற விஷயங்கள் இந்த அமைப்புகளுக்குப் பிறகு வந்து ஒட்டிக் கொண்ட சங்கதிகள்தான். உமா மகேஸ்வரனின் 'பிளாட்' ஆரம்பத்தில் சோஷலிசம், சிங்கள முற்போக்காளர்கள் தொடர்பு எல்லாம் வைத்திருந்போதும், தனிமனித பலவீனங்களால் மெல்ல மெல்ல சீரழிந்து இரண்டு மூன்று குழுக்களாக சிதறிவிட்டது. ஆரம்பத்திலிருந்தே மார்க்சிய அணுகுமுறையையும் தமிழ் தேசிய இனப் பிரச்னையையும் இணைத்துப் பார்த்தவையாக ஈராஸ் (பாலகுமார்), அதிலிருந்து உருவான ஈபிஆர்எல் எஃப் (பத்மநாபா) ஆகியவற்றைச் சொல்லலாம்.

ஈழப் போராட்டத்தில் ஈடுபட்டக் குழுக்கள் தேசிய இன உணர்வுடன் மார்க்சிய அடிப்படையை இணைக்காமல் போனதற்கும், தனிமனித பலவீனங்கள் குழுக்களை சீரழித்ததற்கும் காரணங்கள் என்ன என்று ஆராய்ந்தால் நிறைய எழுத வேண்டிவரும். சுருக்கமாகப் பார்த்தால் — ஈழத்தமிழர்கள் அரசியல்ரீதியாகப் பக்குவம் அடைந்து ஆயுதப்போராட்டம்தான் வழி என்று தேர்ந்தெடுக்கக்கூடிய நிலைக்கு வருவதற்கு முன்பே ஆயுதப் போராட்டக்தில் தள்ளப்பட்டு விட்டார்கள். இலங்கை அரசும் ராணுவமும் ஏற்படுத்திய நெருக்கடிகள் இந்த நிலையை ஏற்படுத்திவிட்டன, இப்படிப்பட்ட சூழ்நிலையில் சிங்கள அரசு வேறு, சிங்கள மக்கள் வேறு என்று உணர்ந்து,சிங்கள மக்களையும் அவர்களை திசை திருப்பும் சிங்கள அரசுக்கெதிராக போராடவைப்பதில் உதவும் தமிழ்ப் போராளிகளுக்கு அரசியல் பக்குவம் ஏற்பட்டிருக்க முடியாதுதான்.

யுத்த களத்துக்குத் தள்ளப் பட்டுவிட்ட நிலையில் ஈழச் சமூகத்தின் எல்லா பிரிவினரும் போராட வேண்டியதாகி விட்டது. இதில் தமிழ் கள்ளக் கடத்தல்காரர்களும் உண்டு. இன்றைய சர்வதேச நிலைமை ஆயுதக் கடத்தல்காரரையும், ஆடியோ, வீடியோ, போதை கடத்தல்காரரையும் ஒன்றாக வேலை செய்யவைப்பதாக இருக்கிறது. மக்கள் சார்பான அரசியல் பார்வையுள்ளவனும் அரசாங்கத்தால் நசுக்கப்படுகிறான். கள்ளக்கடத்தல்காரனும் அரசால் நசுக்கப்படுகிறான். இருவரும் அரசுக்கெதிராக ஒன்று சேரும்போது, ஒருவரையொருவர் பாதிப்பது இயல்பு. அரசியல் தெளிவுள்ளவன் கடத்தல்காரனை புதிய மனிதனாக ஆக்குவதும் நடக்கும். கடத்தல்காரனின் குணங்கள் முன்னவனிடம் படிந்து விடுவதும் நடக்கும். ஈழச் சூழ்நிலையில் இரண்டுமே நடந்திருக்கின்றன.

இவற்றின் விளைவாக போராளிகள் மேலும் மேலும் பிளவுபட்டது இலங்கை அரசுக்கு வசதியா இருந்தது. தொடர்ந்த போராட்டத்தை நடத்த அருகில் உள்ள இந்தியாவுக்கு வந்து அங்கிருந்து செயல்படுவதே போராளிகளுக்கு வழியென்றாகிவிட்டது. இருபுறமும் இருப்பது தமிழர்கள்தான் என்பது இன்னொரு முக்கியக் காரணம்தான்.

இப்படி இந்திய மண்ணிலிருந்து செயல்படும் நிலையிலிருந்த போராளிகள் இந்திய அரசை நம்பியே செயல்பட வேண்டியதாயிற்று. சமமான தோழமை அடிப்படையில் மட்டுமே இருந்திருக்க வேண்டிய இந்த உறவு, பண்ணையார் — கொத்தடிமை உறவாக ஆகிவிட்டது.

உபகண்டப் பகுதியில் தன் செல்வாக்கு இருப்பதை மட்டுமே முக்கியமாகக் கருதிய இந்திய அரசு அதற்கு சாதகமாக இந்தச் சூழ்நிலையை பயன்படுத்தியது.

போராளிக் குழுக்களுக்கு உதவி செய்கிற அதே நேரத்தில் தனிஈழம் ஏற்படுவதை ஏற்காத இந்திய அரசு போராளிக் குழுக்களுக்குள் இருந்த பிளவுகளை பயன்படுத்திக் கொண்டது.

ஒவ்வொரு போராளிக்குழுவும் இறுதியில் பலவீனமாகி விடவேண்டும்; அதே சமயம் அவை இலங்கை அரசாங்கத்தின் ராணுவத் திமிரையும் நொறுக்கப் பயன்பட வேண்டும். இருதரப்பும் பலவீனமாகும் நிலையில், போர் பற்றி மக்கள் மத்தியில் அலுப்பும் ஏற்படும் நிலையில், மிதவாதத் தமிழர் தலைவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே உடன்பாட்டை ஏற்படுத்தி ஓரளவு தமிழர்களுக்கு உரிமை கிடைக்கச் செய்யலாம்; தீவில் இந்தியாவின் செல்வாக்கே பலமானதாக இருக்கவும் செய்யலாம் என்பதே நமது அரசாங்கத்தின் அணுகுமுறையாக இருந்து வந்திருக்கிறது.

இந்த திட்டம் முதலில் ஓரளவு சரியாகவே நிறைவேறி வந்தது. பலமாக இருந்த 'பிளாட்' முதலில் சிதறியது. அடுத்து 'டெலோ' பலமாக வளர்ந்தது. அதன் பலம் அதிகமானதும், உடன் பலப்படுத்தப்பட்ட புலிகளால் அழிந்து போயிற்று. புலிகள் பலமாகும் வேளையில், ஈ.பி.எல்.ஆர்.எஃப். வலுவடைந்தது. இரண்டுக்குமிடையே விரோதம் வலுத்தது. ஆனால் புலிகள் பலவீனமடையவில்லை. அடுத்து நடந்த சிங்கள ராணுவத் தாக்குதலும் புலிகளை பலமிழக்கச் செய்யாத நிலையில் இந்திய அரசு - இலங்கை அரசு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதையடுத்து நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் மேலும் மேலும் சிக்கல் சேற்றில் இநதியாவை அழுத்திவருகின்றன.

இந்திய அரசைப் பொறுத்தமட்டில் மேற்சொன்னபடி தான் இயங்கி வந்தது என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் இப்போது பல்வேறு போராளிகளைப் பற்றியும் பல செய்திகள் பரப்பப்படுகின்றன. இவை அனைத்தும் அரசுக்கு முன்பே தெரிந்திருந்துதான்.

தமிழ்நாட்டில் எந்த மூலையில் எந்தெந்த வீட்டில் போராளிகள் யார்யார் இருக்கிறார்கள் என்பது பற்றியும், அவர்களுடையை நடவடிக்கைகளைப் பற்றியும், துல்லியமாக மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் தெரியும்.

கடந்த நான்கு வருடங்களாகவே எல்லா நடப்புகளையும் அறிந்தே வைத்திருந்த அரசாங்கங்கள், தவறான போக்குடையவர்கள் மீது ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறிப்பாக சென்ற வருடம் தீபாவளியன்று சென்னை சூளைமேட்டில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தளபதி டக்ளஸ் தேவாவும் அவர் குழுவினரும் பொதுமக்களை துப்பாக்கியால் சுட்டதாகக் கைதுசெய்யப்பட்டார்கள். ஒரு வாலிபர்
தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப்.
ளிகள் மீது ஒரு கும்பல் வந்து
யதை அடுத்தே அவர்கள் சுட்டா
அந்த கும்பல் யார், அவர்களுக்
பலமாக உள்ள கஞ்சா, போனை
துக் கடத்தல்காரர்கள் யார்
பெயர்பட்டியலையே அரசுக்கு
புகார் செய்துள்ளதாக ஈ.பி.ஆ
எஃப். ஆலோசகர் கேதீஸ்வரன்
ரிகையாளர் கூட்டத்தில் தெரிவி
ஆனால் இதுவரை ஒரு நடவ
யும் இல்லை. டக்ளஸ் சிக்கிய
நிகழ்ச்சிக்கு முன்பாக அவர் பு
இயக்கத்துடன் சமரசம்
முனைந்திருந்ததாகக் கூறப்ப
அந்த சமரசத்தைத் தடுக்கவே
மேடு தாக்குதல் நடந்ததாகவும்
பட்டது? இப்படி பல நிகழ்ச்சி
துல்லியமான தகவலும் வி
திரட்டி வைத்திருந்தும் கூட அ
வடிக்கை எடுக்கவில்லை. போ
ளில் உள்ள சமூக விரோதிகளை
விட்டு அவர்களை ஒன்றுபடுத்த
வும் இல்லை.

ஏனென்றால் தன்னுடைய
மொத்தமான திட்டத்துக்குப்
ளிக் குழுக்களைப் பயன்ப
தைத் தவிர வேறு அக்கறை அ
இல்லை.

இந்த அணுகுமுறையின் இறு
வமாகத்தான் ராஜீவ் - ஜெ
தனே ஒப்பந்தம் அமைந்தது.

இந்த ஒப்பநதத்தின் சர்வ
பின்னல்களை கவனிக்க வே
ஒப்பந்தத்தை சோவியத் யூனி
வாவேற்கிறது. அமெரிக்காவு
வேற்கிறது.

சோவியத் யூனியன், அமெ
இருநாடுகளுமே இந்த ஒப்ப
எப்படி வரவேற்கமுடியும்? தி
ணமலையில் அமெரிக்காவின்
வத்தளத்தை இந்த ஒப்பந்தம்
விடுமென்றால் அதை அமெரிக்
படி வரவேற்கும்? பறிக்காதெ
இந்துமாக்கடல் அமைதி பற்றி
மல் பேசும் சோவியத் யூனியன்
ஒப்பந்தத்தை வரவேற்றது?

சர்வதேச அளவில் இந்த ஒப்
தால் யாருக்கு லாபம்? இன்று
யானை ஈழத்தில் ராணுவ வேலை
ஈடுபடுத்தி வைத்திருப்பதால் யா
லாபம்?

இந்தக் கேள்விகளையெல்
ஆராய்ந்து பார்த்தால் - ஒப்பந்
பயனடைவது அமெரிக்காதான்
சொல்லலாம். நஷ்டம் இந்தி
குத்தான்.

**ஒரு முழு ஆரஞ்சுப் ப**
**தைக் காட்டிலும் நெல்**
**காயில் 20 மடங்கு வை**
**மின்-சி இருக்கிறது.**

**வாழைப் பழத்தில் ஏ.**
**சி.டி.இ.ஆகிய5வகை உ**
**சத்துக்கள் அதாவது வை**
**மின்கள் உள்ளன.**

ஃ ஃ ஃ

**வெற்றிலையை மு**
**முதலாகப் பயிர் செய்த ந**
**மலேஷியா பாக்கு பி**
**பைன்ஸ் தீவுகளில் மு**
**முதலாக வளர்க்கப்பட்ட**

www.tamilarangam.net



# AN APPEAL

It is high time that the right thinking people of Tamilnadu expressed their approval of and support to the steps taken by the Government of India, to secure peace, honour and all justifiable rights for the Tamils of Srilanka. The Indian Peace Keeping Force is doing great work in Srilanka to bring about peace in the Tamil areas of that island. In the face of the cowardly shield of Children and women shamelessly employed by the LTTE, the soldiers of IPKF are showing remarkable restraint at the cost of their lives in order to keep safe the lives of Tamil civilians. Let the Government and the Indian Army know that sensible opinion in Tamilnadu is with them. Let not the issue be clouded by the false propaganda launched by misguided political campaigning.

We request those who agree with the above view, to send telegrams to the Prime Minister of India as suggested below:

**To: The Prime Minister of India New Delhi**
**"I/We wholeheartedly support the steps taken in Sri Lanka by the Indian Government and IPKF to secure peace for Srilankan Tamils."**

CHO S. RAMASWAMY
Editor, THUGLAK

R. SHANKARANARAYANAN
Secretary
Citizens For Democracy

## மானங்கெட்ட சோ!

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் துக்ளக் ஆசிரியர் சோ தமிழக மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்தியா யாழ்ப்பாணத்தில் எடுத்துள்ள இராணுவ நடவடிக்கைக்கு தமிழர்கள் இதயப் பூர்வமான சம்மதம் வழங்க வேண்டும். இப்போது எடுக்கும் நடவடிக்கை இலங்கைத் தமிழரைத் காப்பாற்றவே என்று அந்த வேண்டுகோளில் காதுகள் நிறைய பூ சுற்றியிருக்கிறார்.

மானம் காக்கப் போனவர்களே கற்பழிப்பதையும், அவர்கள் (யாழ்ப்பாணத் தமிழர்கள்) எவ்வித வசதியும் இல்லாமல் அகதிகள் ஆகிக் கொண்டிருப்பதையும், இந்திய இராணுவம் என்கிற ஒரேகாரணத்திற்காக இரு கண்களையும் மூடிக்கொள்வது சோவைப் போன்ற மானங் கெட்டவர்களுக்கு வேண்டுமானால் நியாயமாகலாம்.

—மலையமான் திருமுடிக்காரி,
ஒரு வாசகர், பாலவாக்கம்.

## யாழ்ப்பாணத்தில் பி.பி.சி. நிருபர்!

"யாழ்ப்பாணத்தை இந்திய ராணுவத்தினர் சுற்றி வளைத்துக்கொண்டனர். விடுதலைப் புலிகள் தப்பிச்செல்லும் எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன" என்று இந்திய வானொலி செய்தியை ஒலிபரப்பிக் கொண்டிருந்தபோது...

இந்தச் செய்திக்கு நேர்மாறான சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடந்தது.

இங்கிலாந்து வானொலியின் (பி.பி.சி) திருவாளர் பில் ஜோன்சையும், வேறு இரு பத்திரிகையாளர்களையும் விடுதலைப் புலிகள், காட்டுப் பாதையில் யாழ்ப்பாணம் நகரத்துக்கு அழைத்து வந்தார்கள். அத்தனை வழிகள் அடைக்கப்பட்ட பிறகும், விடுதலைப் புலிகளுக்கென ஏதோ ஒரு பாதை திறந்திருக்கிறது.

பில் ஜோன்ஸ் அங்கு நேரில் கண்டதையும், கேட்டதையும் தொகுத்துச் செய்தியாக அனுப்பினார் பி.பி.சி. ஒலிபரப்பிய இந்த செய்தியை உலக நாடுகள் கேட்டன. செய்தியின் சுருக்கம் :

"கொழும்பிலிருந்து 13 மணி நேரப் பயணத்திற்குப் பிறகு நாங்கள் யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தோம். விடுதலைப் புலிகள் எங்களை மலைப்பாதை வழியே யாழ்ப்பாண நகரின் மையப் பகுதிக்கு அழைத்துச் சென்று விட்டார்கள்.

அங்கு நேரில் கண்ட காட்சி, இந்திய அரசு வெளியிடும் தகவல்களுக்கு நேர்மாறாக இருக்கிறது. ஏராளமான கட்டிடங்கள் குண்டு வீசித் தகர்க்கப்பட்டுள்ளன. 3 லட்சம் மக்கள் அகதிகளாக கோவில்களிலும், பள்ளிகளிலும், பொது இடங்களிலும் தங்கி இருக்கிறார்கள். அவர்களுடன் பேசியபோது மேலும் பல தகவல்களை கொடுத்தார்கள்.

"விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பை மீறி இந்திய ராணுவம் முன்னேற முடியவில்லை. அது நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிக்கிறது. வீடுகளுக்குள் இருந்தவர்களைக் கூட இழுத்து வந்து சுட்டுக் கொல்கிறார்கள்" என்றார்கள்.

"யாழ்ப்பாணம் மருத்துவமனை மீது கடந்த திங்கட்கிழமை 6 பீரங்கிக் குண்டுகள் விழுந்தன. திடீர் — மின்சார சப்ளை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆபரேஷன் தியேட்டர்களில் ஏர்கண்டிஷனர் இயங்கவில்லை. எனவே, அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கும் போது, எங்கள் வியர்வைத் துளிகள், நோயாளிகளின் உள்பாகங்களில் விழுகிறது" என்று வேதனையுடன் தெரிவித்தார் ஒரு டாக்டர்.

இனப்படுகொலை செய்த சிங்கள ராணுவத்தை விட இந்திய ராணுவம் மிக மோசமாக நடந்து கொள்கிறது என்று அகதிகள் ஏகமனதாகச் சொன்னார்கள்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தலைவரான திலீப் யோகியைச் சந்தித்தோம். "நாங்கள் போர் நிறுத்தம் செய்ய தயார் என்று இந்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். என்றும் கொரில்லா போர் புரியும் எங்களை, இந்திய ராணுவம் போன்ற மரபு வழிப்பட்ட படை முற்றாக அழித்துவிட முடியாது. அது நடப்பதற்குள் விடுதலைப் புலிகள் தப்பி மறைந்து விடுவார்கள். ரகசியமாகக் குழுவாய் ஒன்று சேருவார்கள். பிறகு மீண்டும் வெளிவந்து தாக்குதல் தொடுப்பார்கள்" என்று அவர் தெரிவித்தார்."

இவ்வாறு பி.பி.சி. செய்தி வெளியிட்டது. பி.பி.சி. நிருபர் பில் ஜோன்ஸ், ஆஸ்திரேலியா வானொலிக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்த சில தகவல்கள் :—

"தமிழ் போராளிகளுக்கு எதிரான போரில், மாபெரும் வெற்றி பெற்றுக்கொண்டிருப்பதாக இந்தியா மிகைப்படுத்திக் கூறுகிறது.

"அப்பாவி மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, பயங்கரச் சண்டை நடக்கும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அருகே, ஒரு வீட்டின் கூரை மீது பீரங்கி குண்டு விழுந்தது. இதில் அந்த வீட்டில் இருந்த 8 பேர் உயிரிழந்தார்கள்.

"இன்னொரு வீடு தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. இதில் உள்ளே இருந்த 2 அப்பாவிகள் கருகிச் செத்தார்கள்.

"திடீர் மின் சப்ளை இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் மண்ணெண்ணை விளக்கின் வெளிச்சத்தில் ஆபரேஷன் நடக்கிறது."

## ஜெயில்லுப்பை இன்னுர் தந்த நோட்டீஸ்

**பொதுமக்களை**
**கொன்றுகுவித்துக்கொண்டு**
**புலிகளைக் கொன்றதாக மார்தட்டும்**
**இந்திய அரசே!**

1. [illegible]
2. [illegible] இந்திய அரசு
3. [illegible]
4. [illegible]
5. [illegible]
6. [illegible]

[illegible]

பார்க்க பக்கம்: 29

## அப்பாவிகளை கொல்லும் இந்திய ராணுவம்!

விடுதலைப் புலிகளின் ராணுவத்தளம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன் இருக்கிறது. இதைக் கைப்பற்ற இந்திய ராணுவம் திட்டமிட்டது.

இந்திய ராணுவத்தின் அதிரடிப் படையினர் இரவில் ஹெலிகாப்டர் மூலம் அங்கு கொண்டு வரப்பட்டனர். விழிப்புடன் இருந்த விடுதலைப் புலிகள், இந்திய படையினருடன் மும்முனைகளில் இருந்து தாக்குதல் தொடுத்தார்கள்.

29 இந்திய ராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். ஒருவர் உயிருடன் பிடிபட்டார். மற்றவர்கள் தப்பி ஓடி, 3 கி.மீ. தொலைவில் இருந்த கொக்குவில் என்ற கிராமத்துக்குள் புகுந்து கொண்டார்கள்.

அவர்களைத் துரத்திச் சென்ற விடுதலைப் புலிகளும், அந்த கிராமத்தை சுற்றி வளைத்துக்கொண்டார்கள். இந்தியர்களை மீட்க இன்னொரு இந்திய படைப்பிரிவு [illegible] கிராமத்துக்கு வந்தது. [illegible] சில வீரர்கள் மீட்கப்பட்டார்கள்.

இந்திய ராணுவத்தினர் [illegible] தப்பிச் செல்லும்போது [illegible] தமிழர்களைப் படுகொலை செய்ததாக [illegible] வெளியாயின.

இதைத் தொடர்ந்து "இந்து" ஆங்கிலப் பத்திரிகையின் நிருபர் ஜெயராஜ், அந்த கிராமத்துக்கு விரைந்து சென்று விசாரித்தார்.

"அங்கிருந்த குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரும் அப்படித்தான் சொல்கிறார்கள்" என்று ஜெயராஜ் தகவல் கொடுத்திருக்கிறார்.

ஆதாரம் : "இந்து" (24-10-87)

www.tamilarangam.net

## ஜோலார்பேட்டை இளைஞர் தந்த நோட்டீஸ்

### பொதுமக்களை கொன்றுகுவித்துக்கொண்டு புலிகளைக் கொன்றதாக மார்தட்டும் இந்திய அரசே!

1. உலகின் எந்த சர்வாதிகாரியும் இதுவரை செய்யாத கொடூரங்களை நிகழ்த்தியவா உனது அமைதிப்படை?
2. யாழ்ப்பல்கலைக்கழகத்தை விமானத்தின் மூலம் தாக்கியதில் ஹிட்லரையும் மிஞ்சி விட்டது இந்திய அரசு.
3. தமிழ்ப் பெண்களைக் கற்பழித்து 'டாங்கிகள்' அடியிலே போட்டு நசுக்கியதில் சிங்களவரையும் வென்றுவிட்டது உனது அமைதிப்படை.
4. குழந்தைகளையும் முதியவர்களையும் கொன்றுகுவித்து விட்டு புலிகளைக் கொன்றதாகப் பொய்ப்பிரசாரமா?
5. அமைதிப்படை (I.P.K.F) யின் மீது தவறில்லை என்றால் எந்த நாட்டு பத்திரிகை நிருபரையும் யாழ்குடா நாட்டுக்குள் அனுமதிக்காதது ஏன்?
6. தமிழ் நாட்டிலேயே விடுதலைப் புலிகளைக் கைது செய்வது ஏன்?

இன்று துவங்கியிருக்கும் மாணவர் தொடரும் போர் இது முதல் கட்டம் என்பதால் உங்களுக்குத் தெரிந்த உண்மையை விரைவில் போராட்டத்தோடு துவங்குகிறோம்.

"அமைதிப்படை இருவகையானது கொலை என நினைப்பவர் கூட்டம்"

நாள் - 20.10.87
இடம் - திருநகரம் அருகில்

அனைத்துக் கல்லூரி மாணவர்கள்
சென்னை.



ஈழத்தமிழர் படுகொலையை விளக்கி நந்தனம் கலைக்கல்லூரி மாணவர்கள் சுவரொட்டிகள் ஒட்டியபோது எடுத்த படம்.

## கட்சிகளின் + - பாயிண்ட்கள்

தமிழ் நாட்டில் எப்போதுமே இருவகையான சக்தி நிலவி வருகின்றன.

1. தேசிய அளவில் மத்திய அரசுக்கு ஆதரவு
2. தேசிய அளவில் மத்திய அரசுக்கு எதிர்ப்பு

இந்தி எதிர்ப்பு முதல் ஈழப்பிரச்னை வரை எல்லா இந் தஇரண்டுக்குள் அடக்கம்.

இப்போதைய சூழ்நிலையில் எதிர்ப்பு அணி தி.மு தலைவர் கருணாநிதி தலைமையில் உள்ளது. ஆனல் ரவு அணி?

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அ.தி.மு.க. இரண்டு அணிகளுமே ஆதரவு அணி போலத் தோ மளித்தாலும், கூர்ந்து கவனிப்பவர்களுக்கு ஒரு வே பாடு புலப்படும்.

வீரப்பன் மணி மத்திய அரசுக்கு எதிரணிக்குப்போ சேர்ந்து விட்டது. ஆனல் அதற்காக அது இப்போ குத் தன்னைத் தி.மு.க.வில் இணைத்துக் கொள்ள வி பாது. மத்திய அரசுக்கு எதிர்ப் பிரச்சாரம் செ கொண்டே அது தன்னை மூன்றாவது அணியாக இ காட்டிக் கொள்ளப் பாடுபடும்.

ஜானகி அணியைப் பொறுத்த வரையில் அதற் பெரிய ப்ளஸ் பாயிண்ட் ஆர்.எம். வீரப்பன்மற் அவருடைய 'ஆர்கனைஸிங்' திறமை. மைனஸ் பாயின் ஜானகிக்கு மக்கள் செல்வாக்கு இல்லாமை மற் அவரது உடல் நிலை.

ஜெயலலிதா அணியைப் பொறுத்தவரையில் அ மீகப்பெரிய ப்ளஸ் பாயிண்ட் ஜெயலலிதா தா அங்கு இருக்கிற சாத்தூர் இராமச்சந்திரன், திருநா கரசு, போன்றவர்கள் கடும் உழைப்பாளிகள். பண்ருட் இராமச்சந்திரன் திட்டம் போட்டுச் செயலாற்றுவதி பலே கில்லாடி. ஆட்சியில் இல்லாத சூழ்நிலையி ஊழல் புகார்கள் எதுவுமில்லாமல் 'க்ளீன் இமே இவர்களுக்கு ஏற்படும்.

அதே நேரத்தில் ஜானகி அணியில் மந்திரி பதவி ஆசைப்படுபவர்கள் மிக அதிகம் பேர் உள்ளன மைனாரிட்டி மந்திரி சபை நீடித்தால்-பல்வேறு கண்ட களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில், இவர்க அடக்கி வைப்பது ஆர்.எம். வீரப்பனுக்கு மிகவும் சிர மாக இருக்கும். மேலும் அடுத்த தேர்தலில் எம்.ஜி.ஆ என்ற மகத்தான செல்வாக்கு இல்லாத நிலையில் ஓ களில் எத்தனை பேரால் வெற்றிக் கனியைப் பறிக் இயலும்?

இந்தச் சூழ்நிலையில்....

தமிழகத்தின் மகத்தான சக்திகளில் ஒன்றான தி.மு கவை மறந்து விட முடியுமா? கருணாநிதியின் தலைமை கட்டுக்கோப்பான கட்சி இவை இரண்டும் அதன் ப்ளஸ் பாயிண்ட். பழைய குற்றச்சாட்டுகள், தலைவர்களின் வயது இவை இரண்டும் அதன் மைனஸ் பாய்ண்ட்.

ஒரு தேர்தலில் வெற்றி பெற மக்கள் ஆதரவு மட்டு இருந்தால் போதாது. அதை ஓட்டுகளாக மாற் வாக்குப் பதிவு தினத்தன்று வெற்றியைப் பறிக்கும் மந்தி வித்தை அவசியம் தெரிந்திருக்க வேண்டும். அதில் முத ரேங்க் தி.மு.கவுக்குத்தான்.

ஆனல் ஜெயலலிதாவின் புதுப்பொலிவு (ப்ரெ நெஸ்) தமிழக வாக்காளர்களை அதிகம் கவரும் வாய்ப் உள்ளது. ஊழல்களில் அவரது பெயர் அடிபடவில்லை என்பது அவரது மிகப்பெரிய அனுகூலம். அவரது சொந்த வாழ்க்கை அல்லத அவரது சினிமா நடிகை வாழ்க்கை பற்றிய குற்றச் சாட்டுகள் மக்களிடம் எ படாது. இந்திரா காங்கிரஸ் ஜெயலலிதாவுடன் தேர்த உறவு கொண்டால் அதுவும் மிகப் பெரிய பலம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சிங்கப்பூர் ஸ்டோர்

பேரன்புடையீர்!

எங்களிடம் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், சீன நண்பர்களின் தேவைகளுக்கேற்ற அனைத்து மளிகைச் சாமான களும், காய்கறி வகைகளும், மற்றும் கண்ணைக் கவரும் சிங்கப்பூர், ஜப்பான் நாட்டுப் புடவை ரகங்களும், ஆடவர்களுக்குத் தேவையான சர்ட், பனியன், T சர்ட் வகைகளும், தரமானதாகவும், நியாயமான விலையிலும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நண்பர்கள் அனைவரும் வருகைதந்து நல்ஆதரவு தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

## SINGAPORE STORE

54, RUEDEL' AQUEDUC
75010, PARIS.
TEL: 42 05 24 81
METRO: STALINGRAD

# இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்!

பண்டிகைகள், திருமணம்,
விருந்து வைபவங்களுக்கான அழகிய பட்டுச் சேலைகள்,
ஜார்ஜெட், சிப்பான், சைனாசில்க், கம்ப்யூட்டர்
சுவீட்பியூட்டி குயின், பூனம், ரேவதி மற்றும் பலவகையான
சேலைத் தினுசுகளனைத்தும் விற்பனையிலிருக்கின்றன! வருகைதாருங்கள்!
மிகப்புதிய டிசைன்களில் அனைத்து ஐவுளிகளையும் குறைந்த விலையில வாங்கிட
மிகச்சிறந்த இடம் என நீங்களே போற்றுவீர்கள!

## BENGAL SAREE CENTRE

197, rue du Faubourg Saint-Denis
75010 PARIS Téléph.42 06 92 66
Métro : La Chapelle et Gare du Nord
R.C.S. Paris 84 B 12391

வியாபாரிகளுக்கு தனிச்சலுகை உண்டு!

www.tamilarangam.net

# ஃபிரான்சுவா மித்தரான்

பிரெஞ்சு நாட்டு அதிபர்களிலேயே ஒரு மாறுபாடான தன்மையுடையவர் இன்றைய அதிபர்.

1981-ம் ஆண்டு பதவி ஏற்று தனது சோஷலிச கட்சி அரசு அமைத்த போது அமைச்சரவையில் கம்யூனிஸ்ட் அணியையும் நிர்வாகத்தில் சேர்த்துக் கொண்டார். பின்னர் அவர்களை ஓரங்கட்டி தனது கட்சியினரை மட்டுமே அனுமதித்தார்.

பின்னர் 1986-ல் எதிரணியான வலது சாரிகளுடன் அதிகாரத்தை பிரெஞ்சு வரலாற்றிலேயே முதன் முதலாக பகிர்ந்து கொண்டார்.

இதன் மூலம் அனைத்து நிலைமைகளிலும் பணி புரியும் ஆற்றல் பொருந்தியவர் என்ற மதிப்பை பெற்று விட்டார்.

இவரது வலது சாரி எதிரிகளில் ஒருவரான ரெய்மோன்பார் அதிகாரப் பங்கீட்டை கண்டனம் செய்தாலும் கூட பொதுவாக பிரெஞ்சு மக்கள் அதை விரும்பவே செய்தனர்.

இவரை ஆதரிப்போர்க்கெல்லாம் இவர் ஒரு செல்ல மாமாவாக (TONTON) இருந்தாலும், நிர்வாகத்தில் கண்டிப்பு உடையவர்.

பிரான்சில் அலுவலகங்களில் பணிபுரிவோர் ஒருவருக்கொருவர் உரிமையோடு நீ (Tu) என்று விளித்து உரையாடுவது வழக்கம். ஆனால் அதிபரோ என்றும் "நீங்கள்" தான்.

இவருடைய நெருங்கிய சகாக்கள் கூட இவரைப் புரிய முடியாது (பார்க்க: அட அப்படியா)

இவர் மணிக்கூடு (watch) அணிவதில்லை. காரணம் இவர் நேரத்தின் அடிமையாக விரும்பவில்லை.

"முக்கிய விஷயம் குறித்து ஆய்வு மேற்கொள்ளும்போது தீர்க்கமான முடிவுக்கு அவர் நீண்ட நேரம் செலவழிப்பதுண்டு. அந்நேரத்தில் ஒரு கண் மணிக்கூட்டில் இருந்தால் காரியம் கெட்டுவிடும் என்பதால்.

அதனால் தான் என்னவோ இக்கட்டுரை வரையும் வரை, ஒரு சில வாரங்களில் வர இருக்கும் அதிபர் தேர்தலில் நிற்கப் போவதை இவர் அறிவிக்கவில்லையோ என்னவோ?

இதுவரை அறிவிக்காவிட்டாலும் அறிவிக்-காமல் இருக்க மாட்டார் என்பதே அரசியல் வல்லுநர்களின் கூற்று.

புகழின் உச்சியில் இன்று இருக்கும் அதிபர் தனது கட்சியின் நலனுக்காக வேணும் நின்றுதான் ஆகவேண்டிய சூழ்நிலையின் காரணம் காட்டப்படுகிறது.

இவர் நிற்கவில்லை என்றால் கூட, இவர் தனக்கு பதிலாக போட்டியிட வா உள்ள மிஷல் ரொகார்டை ஆதரிப்பது இவரது தார்மீக கடமை.

தனது ஆட்சியின் மூலம் இவர் இரு விஷயங்களை தெளிவாக நிரூபித்து உள்ளார். ஒன்று

"சோஷலிச அரசை பொதுவுடமையாக மாற்ற மாட்டோம்" (முதலாளிகள் பயப்பட வேண்டாம்) மற்றொன்று

"சோஷலிச நிர்வாகம் எந்த விதத்திலும் வலது சாரியை விடவும் மோசமில்லை என்பதே.

சாதாரணமாக பிரான்சில் அவ்வப்போது பத்திரிகை, செய்தி நிறுவனங்கள் எடுக்கும் புள்ளி விபரங்கள் (Sondage) குறிப்பிட்ட எண்ணிக்கை உடையவர் மத்தியில் தான் என்றாலும், தொடர்ந்து பல ஆண்டுகளாக முன்னணியிலேயே இவர் இருந்து வருகிறார். இப்புகழை இவர் எளிதில் அடைந்து விடவில்லை. தோல்வி பல கண்டும் இவர் துவளவில்லை.

இரண்டாம் உலகப் போரின்போது கைதியாக நாஜிகளால் வைக்கப்பட்ட போது தப்பி முயன்று மூன்றாம் முறைதான் வெற்றி பெற்று அதிபர் தேர்தலிலும் மூன்றாம் முறைதான் வெற்றி பெற்றார். இவ்விதத்தில் "தோல்வி வெற்றிக்குத் தடை அல்ல" என்பதை "வாழ்க்கையில் வெற்றி" கட்டுரையில் அப்துர் ரகீம் வலியுறுத்துகிறார்.

அதே போன்று "தோல்வி வெற்றிக்குத் தடை அல்ல" என்பதற்கு அதிபரின் வாழ்க்கை சிறந்த உதாரணம். அரசியல் மாணவர்கள் அவசியம் படிக்க வேண்டிய வரலாறு அதிபருடையது.

கலையுணர்வு, இயற்கை காதல், மனிதாபிமானம் இவரது தனி மனிதப் பண்பு.

"வாரம் 39 மணி வேலை, 60 வயது வேலை ஓய்வு பெற வாய்ப்பு" இவருடைய ஆட்சியின் சாதனை. மரண தண்டனை நீக்கம் சாதனை என்பதை விட வேதனை என்பதுதான் சரி.

இருப்பினும் லிபிய படை 'சாத்' நாட்டில் புகுந்த போது அதற்கு எதிராக படைபலம் பொருளாதார அளிக்க தயங்கவில்லை. கம்யூனிஸ்ட்கள் தனது அரசில் இருந்த போதும் ரஷ்ய அச்சுறுத்தலுக்கு எதிரான உறுதியான கொள்கையை மேற்கொண்டவர்.

பிரெஞ்சு அதிபர் தேர்தலில் மாமாவுக்கே நண்பனின் ஆதரவு. வாழ்க

www.tamilarangam.net

## ரயில்வே கட்டணங்கள் உயர்வு

பிப். 25

ரயில்வே பட்ஜெட்டை ரயில்வே அமைச்சர் மாதவராவ் சிந்தியா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார். ரயில்வே கட்டணங்கள் உயர்த்தப் பட்டுள்ளன. பயணிகள் கட்டணம், மாதாந்திர சீசன், சரக்குக் கட்டணம் உட்பட எல்லா வகையான கட்டணங் களும் உயர்த்தப்பட்டுள்ளன. பிளாட் பாரம் டிக்கெட் கட்டணம் ஒரு ரூபாயி லிருந்து ரூ. 1.50ஆக உயர்த்தப்பட்டுள் ளது. பயணிகள் கட்டண உயர்வு மூலம் ரூ. 358 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும்.

ஏவுகணைப் பரிசோதனையில் வெற்றி

பிப். 26

150 மைல் தூரம் பறந்து சென்று எதிரிகளின் இலக்கைத் தாக்கக் கூடிய 'பிரிதிவி' என்ற ஏவுகணையை இந்தியா தயாரித்திருக்கிறது. இது பறக்கவிடப்பட்டு, அதன் பரிசோதனை வெற்றிகரமாக நடந்தது. பிரதமர் ராஜீவ் காந்தி பாராளுமன்றத்தில் இதைத் தெரிவித்தார். வெளிநாடுகளின் உதவியின்றி, இந்திய விஞ்ஞானிகளே தயாரித்துள்ள அந்த ஏவுகணை ஆந்திரத்திலுள்ள ஸ்ரீஹரிகோட்டாவி லிருந்து பறக்கவிடப்பட்டது. இத்தகைய ஏவுகணை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்சு ஆகிய நான்கு நாடுகளிடம் தான் உள்ளன.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு?


பிப். 26

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைப்பதாகவும், இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஒத்து ழைப்புத் தருவதாகவும் உறுதியளித்தால் அவர்களுடன் பேச்சு நடத்த இந்தியா தயாராக உள்ளது என்று இலங்கையி லுள்ள இந்தியத் தூதர் தீட்சித் தெரிவித் தார். இலங்கையில் இந்திய ராணுவம் போரை நிறுத்த வேண்டும் என்று கோரி மட்டக்களப்பில் 6 நாட்களாக உண்ணாவிரதமிருந்து வரும் 'தாய்மார் களின் முன்னணி'யைச் சேர்ந்த 2 பெண்களின் உடல்நிலை கவலைக்கிட மாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை முன்னிட்டு தீட்சித் மேற்கண்டவாறு கூறினார்.

தமது 40-வது பிறந்த தினத்தைத் தன்னுடைய இல்லத்தில் எளிமை யாகக் கொண்டாடினார் ஜெயலலிதா. தமிழகமெங்குமிருந்து வாழ்த்துத் தெரிவித்த அ.தி.மு.க. தொண்டர்களிடையே அவர் பேசினார். அவருக்குப் பிறந்த நாள் வாழ்த் துத் தெரிவித்து ராஜீவ் காந்தி தந்தி அனுப்பியுள்ளார்.

நூல் விலையைக் குறைக்கக் கோரி நடிகர் பாக்யராஜ் ஈரோட்டில் உண்ணாவிரதம் இருந்தார்.

தென்னிந்திய சினிமா வர்த்தக சபை தலைவரான ஜி. வெங்கடேசுவரன் மூப்பனார்



முன்னிலையில் இ காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

நாடு முழுவதும் ஏறக்குறைய 5 லட்சம் வக்கீல்கள் ஒரு தின அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். போலீஸ் துணை கமிஷனர் திருமதி கிரண் பேடியைத் தற்காலிக வேலைநீக்கம் செய்ய வேண்டும் என்று கோரி டில்லி வக்கீல்கள் மேற்கொண்டுள்ள கிளர்ச்சிக்கு ஆதரவாக இந்த வேலைநிறுத்தம் நடந்தது.

விடுதலைப் புலிகளின் ரகசிய ஏற்பாடு?

பிப். 28

இலங்கை அரசைச் சேர்ந்த முக்கியமான தலைவர்கள் சிலர் விடுதலைப் புலிகளைச் சந்தித்து ரகசிய மாகப் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்கள் எனத் தகவல் கிடைத் திருப்பதாக இந்தியத் தூதர் ஜே.என். தீட்சித் கொழும்புவில் கூறியுள்ளார். பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை எப்படியாவது தோற்கடித்து விட வேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் பேச்சு வார்த்தை நடந்திருப்பதாகவும், அவர் தெரிவித் துள்ளார். அங்கு அமைதியை நிலைநாட்டும் பணியில் இந்திய வீரர்கள் 400 பேர் உயிர்த் தியாகம் செய் துள்ளனர் என்றும், எனவே இந்தியாவின் சம்மதத்தைப் பெறாமல் எத்தகைய ஒப்பந்தம் ஏற்பட்டாலும் அதை இந்தியா ஏற்காது என்றும் ரகசியப் பேச்சு வார்த்தை மூலம் ஏற்படும் உடன்பாடு இலங்கைத் தமிழர் களுக்குத் கெடுதலாகவே முடியும் என்றும் தீட்சித் கூறினார்.

---

சென்னையில் மூப்பனார்

பிப். 22

டில்லியிலிருந்து விமானம் மூலம் சென்னை வந்து சேர்ந்த தமிழக இந்திரா காங்கிரஸ் புதிய தலைவர் ஜி.கே. மூப்பனாருக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இ. காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் உற்சாகமான வரவேற்பு கொடுத்தனர். பல மாவட்டங்களி லிருந்து லாரி, பஸ், வேன் முதலியன மூலம் தொண்டர்கள் விமான நிலையத் துக்கு வந்திருந்தனர். திறந்த ஜீப்பில் விமான நிலையத்துக்கு எதிரேயுள்ள பெரிய மைதானத்துக்கு அவர் ஊர்வல மாக அழைத்துச் செல்லப்பட்டார். தமிழகத்தில் தற்போது நிலவும் புதிய சூழ்நிலைக்கேற்ப தமிழக இ. காங்கிரஸ் கமிட்டியை அடிமட்டத்திலிருந்து முழுமையாகச் சீரமைத்து முழு அளவில் தேர்தலுக்குத் தயார்ப் படுத்தும் பணியை முதலில் தாம் மேற்கொள்ளவிருப்பதாக மூப்பனார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தேர்தல் கூட்டு: ஜெயலலிதாஅணி குழு நியமனம்

பிப். 14

6 தலைவர்கள் அடங்கிய உயர் நிலை அரசியல் விவகாரக் குழு ஒன்றை ஜெயலலிதா அணி அமைத்துள்ளது.

குமாரரணதுங்கா கொலை

பிப். 17

இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும், திருமதி பண்டாரநாயகா வின் மருமகனுமான சிங்கள நடிகர் விஜயகுமார ரணதுங்கா சுட்டுக் கொல் லப்பட்டார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சமரசம் செய்ய முயன்றவர் அவர். கொழும்பு அருகே பெலங்கொடாவில் உள்ள தனது வீட்டில் கட்சிப் பிரமுகர்களுடன் பேசிக் கொண்டிருக்கையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு மர்ம மனிதர் கள் அவரை இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். சிங்கள வெறியர் இயக்கமான ஜனதா விமுக்தி பெரமுனா முன்னணியைச் சேர்ந்தவர் கள்தான் இக்கொலையைச் செய்திருக்கக் கூடும் எனக் கூறப்படுகிறது. 43 வயதான ரணதுங்கா கொழும்பிலுள்ள பென்டிக்ட் கல்லூரியில் படித்தவர்

சென்னையில் வி.பி. சிங்

பிப். 19

முன்னாள் மத்திய அமைச்சரும், ஜன்மோர்ச்சா (மக்கள் பேரணி) கட்சித் தலைவருமான வி.பி.சிங் சென்னை வந்தார். சிவாஜி கணேசனை அவர் சந்தித்துப் பேசினார். தாம் ராஜ்ய சபா உறுப்பினராக இருந்தபோது வி.பி. சிங்குடன் பழக்கம் ஏற்பட்டதாகவும், இந்தச் சந்திப்பில் அரசியல் முக்கியத்துவம் எதுவுமில்லை என்றும் சிவாஜி கணேசன் கூறினார்.

தமிழ்நாட்டுக்குப் புதிய போலீஸ் டைரக்டர் ஜெனரலாக பி.பி. ரங்கசாமி நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவியில் இருந்து வரும் கே. ரவீந்திரன் மார்ச் மாதம் ஓய்வு பெறுகிறார்.

சவுகார் ஜானகி, மேஜர் சுந்தர ராஜன், வி.கே. ராமசாமி ஆகியோர் சிவாஜி கணேசனின் 'தமிழக முன்னேற்ற முன்னணி' கட்சியில் சேர்ந்தார்கள்.

அ.தி.மு.க. தலைவரும், முன்னாள் தமிழக முதல்வருமான ஜானகியம்மாள் சென்னையிலிருந்து மதுரைக்குச் சென்றபோது, வழி நெடுகிலும் பல இடங் களில் தொண்டர்கள் ரயிலை நிறுத்தி அவருக்கு வரவேற்புத் தந்தனர். இதனால் பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரெயில் 7 மணி நேரம் தாமதமாக மதுரை போய்ச் சேர்ந்தது.

திருச்சியிலிருந்து சென்னைக்குக் காரில் கடத்தி வரப்பட்ட ரூ. 48 லட்சம் மதிப்புள்ள தங்கக் கட்டிகளைச் சென்னை யருகே மத்திய அரசு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

'தி.மு.க.வுடன் உறவு இல்லை' —ஜானகி

பிப். 7

தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் இணைய வேண்டும் என்று அமைச்சர் வி.வி. சாமிநாதன் கூறியிருப்பது அவருடைய சொந்தக் கருத்து என்றும் எக்காரணம் கொண்டும் தி.மு.க.வுடன் தாங்கள் உறவு வைத்துக் கொள்ளப் போவதில்லை என்றும் முன்னாள் தமிழக முதல்வர் ஜானகியம்மாள் கூறினார். தி.மு.க. தான் தனது ஒரே எதிரி என்று எம்.ஜி.ராமச்சந்திரன் உறுதியாக இருந்தார் என்றும் அனைத்து விஷயங்களிலும் தனது கணவர் வழியையே தாம் பின்பற்றுவதாகவும் ஜானகியம்மாள் கூறியுள்ளார்.

அ.தி.மு.க.வுடன் உறவு இல்லை.

பிப். 2

ஜானகி அம்மாள் தலைமையி லான அ.தி.மு.க.வும் தம்முடைய கட்சியும் இணையாது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி அறிவித்தார். அ.தி.மு.க.விலிருந்து தாங்களாகவே விலகித் தி.மு.க.வில் சேர விழைபவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா எனக் கேட்டதற்கு அது வரும் ஆட்களைப் பொறுத்தது என்றார். அவர்.

## மதுரையில் ஜெயலலிதா

பிப். 10

எம். ஜி. ஆர். வளர்த்த அ.தி.மு.க.வையும், லட்சக்கணக்கான தொண்டர்களையும் கட்டிக் காப்பது என்று தாம் சபதம் ஏற்றிருப்பதாகவும், மீதமுள்ள தனது வாழ்நாளை மக்களுக்காக அர்ப்பணிக்க இருப்பதாக வும் ஜெயலலிதா கூறினார். மதுரை தமுக்கம் மைதானத்தில் எம்.ஜி. ராமச்சந்திரனின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசினார். பொதுக்கூட்ட மேடை யில் தேர்தல் நிதியாக ஜெயலலிதாவிடம் ரூ. 5 லட்சம் வழங்கப்பட்டது. மதுரை யில் ஜெயலலிதாவுக்குச் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் அவரை வரவேற்க ஆண் களும், பெண்களும் கூடியிருந்தனர். மாவட்டம் முழுவதிலுமிருந்தும் 1000 லாரிகள், 500 வேன்கள், 800 கார்களில் தொண்டர்கள் விமான நிலையம் வந்திருந்ததாகப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

பிப். 14

ஜானகியம்மாள் தலைமை யிலான தமிழக அமைச்சரவையை மத்திய அரசு டிஸ்மிஸ் செய்ததற்குக் கண்டனம் தெரிவித்து அ.தி.மு.க.வினர் (ஜானகி அணி) தமிழகம் முழுவதிலும் 450'க்கும் மேற்பட்ட இடங்களில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர். மதுரையில் 22 இடங்களில் நடந்த உண்ணாவிரதத்தில் 1350 பேர் கலந்து கொண்டனர். சிவாஜி கணேசன் தொடங்கியுள்ள புதிய கட்சியைச் சேர்ந்தவர்களும் ஜானகி கோஷ்டியினருடன் உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.